பக்கங்கள் : பதினாறு

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்


# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 26 ஞாயிற்றுக்கிழமை (08.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 194


## தமிழ் மாவட்டங்களில் இருந்து தெற்கே செல்வதற்கு இனிப் பாதுகாப்பு அனுமதி தேவை

கொழும்பு, ஜூன் 8

வடக்கில் இருந்து தெற்கே மதவாச்சி ஊடாக செல்லும் தமிழர்கள் பாதுகாப்பு அனுமதி பெற்றே இனிப் பயணத்தை மேற்கொள்ளலாம். இந்த நடைமுறை அரசாங்கத்தால் உடனடியாக அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து. தெற்கே செல்லும் பயணிகள் பாதுகாப்பு அனுமதி பெற்றே இனிமேல் பயணத்தை மேற் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறைப் படியே இந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர் களும் பாதுகாப்பு அனுமதி பெற வேண்டும் என்றும்-

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அந் தப் பிரதேச அரச அதிபர்களுக்கு விடுக்கப் பட்டிருப்பதாகவும்- கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

வவுனியா, மன்னாரில் உள்ள சிவில் நிர் வாக அலுவலகங்கள் ஊடாகப் பொலிஸார் இந்த அனுமதியை வழங்குவர் எனத் தெரி விக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு இரவு 7 மணிமுதல் புதிய நடைமுறை அமுல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

குடாநாட்டில் இரவு ஊரடங்கு நேற்று முதல் இரவு 7 மணி முதல் மறுநாள் காலை 5 மணிவரை நடைமுறைப்படுத்தப்படும்.

பலாலி ஊடகப்பிரிவு பொறுப்பாளர் மேஜர் விஜேயசிங்க இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நேரத்தில் மாற்றம் செய்ய யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதுவரை இரவு 9 மணி முதல் அதி காலை 4.30 மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு வந்தது தெரிந்ததே. (அ-1)

# சர்வதேச அழுத்தங்களுக்காக போர் நிறுத்தப்படமாட்டாது!

## அரசியல் நோக்கங்களுக்காகவும் அது நடக்காது

## உறுதிபடச் சொல்கிறார் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, ஜூன் 8

சர்வதேச நாடுகள் எந்தவிதமான அழுத்தங்களை விதித்தாலும் நாம் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தும் போர் நிறுத்தப்படமாட்டாது. அதேபோன்று திட்டமிட்ட சில அரசியல் நோக்கங்களை மனதில் வைத்தும் போர் நிறுத்தப்பட மாட்டாது.

இவ்வாறு உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு நாடாளுமன்ற மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற நிகழ்வில் பேசுகையிலேயே ஜனாதிபதி தமது நிலைப்பாட்டை வெளியிட்டார்.

போர் வீரரின் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்த பின்னர் அவர் அங்கு பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தினார். ஜனாதிபதி தமது பேச்சில் மேலும் கூறியவை வருமாறு:

ஆயுதங்களால் மட்டும் போரை மேற் கொள்ள முடியாது. படையினர் போரில் வெற்றி பெறுவதற்கு தலைமைத்துவம் மீது நம்பிக்கை இருப்பதும் அவசியம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் இனிவரும் காலத்தில் படையினர் பின்னடைவைச் சந்திக்கப் போவதில்லை.

ஸ்ரீலங்காவின் வீரர்களை உலகம் கௌரவிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. உலகம் பயங்கரவாதத்தை இலங்கை மண்ணில் இருந்து ஒழிப்பதற்கு தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடும் எமது யுத்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## குஞ்சுக்குளத்தில் மும்முனை நகர்வு முறியடிப்பு என புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 8

வவுனியாவுக்கு வட மேற்கு, குஞ்சுக் குளத்தில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணிக்கு மும்முனைகளில் முன்னேறிய படையினரின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

குஞ்சுக்குளம் பகுதியில் நேற்று சனிக் கிழமை பி.ப 12.30 மணிக்கு இராணுவத் தினர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் மும்முனைகளில் முன்னகர்வுத் தாக்குதல்களை நடத்தினர்.

இம் முன்னகர்வுகளை முறியடிக்கும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற் கொண்டனர்.

மாலை 5மணிக்கு படையினரின் முன் னகர்வுகள் விடுதலைப் புலிகளால் முறிய டிக் கப்பட்டன. படையினர் இழப்புக்களு டன் பின் வாங்கி ஓடிவிட்டனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தில் நேற்றுப் பிற்பகல் குண்டுவீச்சு!

### பாடசாலைக் கட்டடம் சேதம்!!

வவுனியா, ஜூன் 8

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் நேற்றுப் பிற்பகல் 1.10 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் பாடசாலைக் கட்டடம் ஒன்று சேதமடைந்துள்ளது.

ஆனந்தபுரம் மக்கள் குடியிருப்புக் களை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரப் பகுதிகளில் ஹெலிகள் நோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்.நகரத்தின் கடலோரப் பிரதேசத்தில் நேற்று நண்பகலும் மாலையும் ஹெலிகள் ரோந்து நடவடிக்கை அதிகரித்துக் காணப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் வெள்ளியிரவு விமானக் குண்டுவீச்சு!

கொழும்பு, ஜூன் 08

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது விமானப்படையின் விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் கிளைமோர் தாக்குதல்

திருகோணமலை, ஜூன் 8

திருகோணமலை, புல்மோட்டையின் 9 ஆவது மைல்கல் பிரதேசத்தில் நேற்று சனிக் கிழமை நண்பகல் கிளைமோர் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை. (அ-02)

## திருமலையில் சூட்டுச் சம்பவம்: ஒருவர் பலி; பெண் காயம்

திருகோணமலை, ஜூன் 8

திருகோணமலை மாவட்டத்தில் பாலையூற்றுப் பகுதியில் நேற்று மாலை 6.45 மணிக்கு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; பெண்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மொறட்டுவவில் கைதான 50 பேரும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர்

### ஏனைய மாணவர் வவுனியாவுக்கு

கொழும்பு, ஜூன் 8

மொறட்டுவ, கட்டுப்பெத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலை அடுத்து கைது செய்யப்பட்ட 50 தமிழர்களும் நேற்று நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் 36 பேர், ஏனைய தமிழர்கள் 12 பேர், முஸ்லிம்கள் இருவர் என 50 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இடம் பெற்ற தேடுதலின் போது இவர்கள் கைது

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மாந்தை கிழக்கில் இருந்து 600 குடும்பங்கள் இடம்பெயர்வு

### இராணுவத்தின் அகோர ஷெல் தாக்குதலால்

வவுனியா, ஜூன் 8

முல்லைத்தீவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான அகோரச் ஷெல் தாக்குதல் காரணமாக இப்பகுதியிலிருந்து 600 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராமங்களில் இருந்தே மேற்படி குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார் தெரிவித்தார்.

பாண்டியன் குளம் பகுதியில் ஷெல்கள் வீழ்வதனால் அங்கு இயங்கிவந்த உதவி அரச அதிபர் அலுவலகம் ஒட்டறுத்த குளத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேல்நீதிமன்ற நீதிபதிகளாக இ.த.விக்னராஜா, எம்.இளஞ்செழியன், திருமதி சந்திரமணி சிவபாலன், எஸ்.கலீஸ் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பதவிப் பிரமாணத்தின் பின்னர் நால்வரும் பிரதம நீதியரசருடன் இணைந்து எடுத்துக் கொண்ட படம் இது.

# மாகாண விளையாட்டுப் போட்டிக்குச்செல்லும் மாணவர்களுக்கு இலவச பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வட மாகாண பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளோருக்கு இலவச கப்பல் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் வியாழக்கிழமையும் மற்றும் 18ஆம் திகதி புதன்கிழமையும் இந்த மாண வர்களுக்கான கப்பல் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

(01-02)

# சார்க் மாநாட்டை நடத்துவதில் இலங்கை அரசு பூரண உறுதி

## பிரதிநிதிகளின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம்

கொழும்பு, ஜூன் 8

கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் தொடர்ச்சியாகக் குண்டு வெடிப்புகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து சார்க் உச்சி மாநாட்டுக்காக வரும் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்புக் குறித்துக் கேள்வி எழுந்துள்ளது.

ஜூன் மத்தியில் இலங்கையில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. சார்க் உச்சிமாநாட்டில் எட்டு நாடுகளின் தலை வர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அதே வேளை பார்வையாளர்கள் என்ற நிலை யில் மேலும் பல நாடுகளின் பிரதி நிதிகளும் பங்குகொள்ளவுள்ளனர்.

சார்க் மாநாட்டின்போது போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என உறுப்பு நாடுகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

சமீபத்தில் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்ட சார்க் அமைப்பின் செயலாளர் சீல்கந்த சர்மாவிடம் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

அதேசமயம் குண்டுத் தாக்குதல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூற்றினை நிராகரிக்க முடியாது என்று கொழும்பைச் சேர்ந்த பாதுகாப்பு கற்கைநெறிக்கான பிராந்திய நிலையத்தின் நிறைவேற்று இயக்குநர் தெரிவிக்கிறார். இலங்கை அரசும் இதனை உணர்ந்திருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

15 ஆவது சார்க் உச்சி மாநாட்டை மாலைதீவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்த நாடு தன்னால் நடத்த முடியாதெனத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இலங்கை நடத்த முன்வந்தது.

தென்னாசியப்பிராந்தியம் எரிபொருள், உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பை எதிர்கொண்டுள்ளதால், இவ்வருட சார்க் உச்சி மாநாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

(சி)

# தொழில் நுட்பக் கல்லூரி விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூன் 8

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து பயில்வதற்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அதிபர் ந.யோகராஜன் அறிவித்துள்ளார்.

யாழ். மாணவர்கள் சகல பாடத்துறைகளுக்குமான விண்ணப்பங்களை குறித்த திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (1-302)

# இன்றைய ஆட்டம்

மந்திகை, ஜூன் 8

மாலிசந்தி மைக் கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆம் ஆண்டு நினைவு விழாவையொட்டி கழகமைதானத்தில் நடத்தப்பட்டு வரும் 20X20 மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.00 மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெல்லியடி சிவசக்தி விளையாட்டுக்கழகமும்.

பி.ப. 3.00 மணிக்கு கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

(1-218)




உ
சிவமயம்

அராலி வடக்கு

**மயிலியற்புலம் கந்தசுவாமிகோவில் சிற்பத் தேர்-வெள்ளோட்ட விழா விஞ்ஞாபனம்**

முருகன் மெய்யடியார்களே,

எல்லாம்வல்ல மயிலியற்புல கந்தன்பேரருளால் எம்பெருமானுக்குரிய அந்திர மரபு (அறுகோணப் பன்னிரண்டு வாசல்) சிற்பத் தேர் புதிதாக நிர்மாணிக்கப்பெற்று நிகழும் மங்கலகரமான சர்வதாரி வருடம் ஆனிமாதம் 5 ஆம் நாள் (19.06.2008) வியாழக்கிழமை முற்பகல் 10.00-12.00மணிவரை உள்ள சுபவேளையில் வெள்ளோட்டவிழா நடைபெற எம்பெருமான் திருவருள் கூடியுள்ளது.

**சிற்பத்தேர் நிர்மாணிப்பு**

புத்தூர் ''ரதகலாசூரி''ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீசெல்லையாபாலச்சந்திரன் குழுவினர் ''ஸ்ரீ காளிகா சிற்பாலயம்''

மேற்படி நிகழ்ச்சிகளில் முருகன் அடியார்கள் அனைவரையும் ''அடியேரெல்லாம் ஒன்றாய்க்கூடி வடம்பிடிப்போம் வாரீர்'' என்று அன்புடன் அழைக்கின்றோம்.
21.06.2008 சனிக்கிழமைபகல் 11 மணிக்கு (புதிய சித்திரத் தேர்) ரதோற்சவம் நடைபெறும்.

தேர்த்திருப்பணிச்சபை/பரிபாலனசபை,
மயிலியற்புலம்கந்தசுவாமி கோவில்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம், இலங்கை.



**வாழ்த்துகின்றோம்**

**சதாசிவக்குருக்கள் மகாலிங்கசிவக்குருக்கள்**

இன்று (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்த நாளை வெகு விமர்சையாக கொண்டாடும் அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சக சபை அதிபராகிய மகாலிங்க சிவக்குருக்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ அவரது மாணவர்கள் வாழ்த்துகின்றனர்.

மாணவர்கள், அகில இலங்கை
சைவக்குருமார் அர்ச்சகசபை.



**கண்ணீர் அஞ்சலி**

இலங்கை மின்சார சபையின் ஊழியரும்
எமது சங்கத்தின் உறுப்பினரும் ஆகிய

**அமரர் பழனி சிறிதரன்**

அவர்கள் நேற்று (07.06.2008) அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரது மறைவினால் கலங்கித் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது சங்க உறுப்பினர்கள் அனைவரதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா இறைவனின் திருவடியில் நித்திய ஆறுதல் பெற உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச்சங்க அங்கத்தவர்கள், நிர்வாகிகள்.



**மரண அறிவித்தல்கள்**

**நாகேசு சின்னத்தங்கச்சி**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு சின்னத்தங்கச்சி நேற்று (07.06.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேசின் அன்பு மனைவியும் சதாசிவம்- பொன்னியின் அன்பு மகளும் குமாரசாமி -நாகமுத்துவின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இரகுப்பிள்ளை, மார்க்கண்டு, சின்னம்மா கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சதாசிவம், நல்லையாபிள்ளை, கனகரெத்தினம், கோபாலபிள்ளை, சிவசிதம்பரம் கனகாம்பிகை, யோகம்மா, புனிதவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, அமரர் இராசேந்திரன், விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு தாயும் சுப்பையா, சுப்பிரமணியம், வசந்தமலர், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை 10 மணிஅளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சல்லி பரவை இந்து மயானததிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

05ஆம் வட்டாரம், நயினாதீவு. (75208)

தகவல்: ஆ.சுப்பிரமணியம் (ஊசிமாமா)

**திருமதி நடராசா பரமேஸ்வரி**

கைதடியைப் பிறப்பிடமாகவும் உசன், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பரமேஸ்வரி நேற்று (07.06.2008) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் நடராசாவின் அன்பு மனைவியும் வசந்தி, சுகந்தி, ஜெயந்தி (சுவிஸ்), சுமதி (லண்டன்), லஜன், காண்டீபன் (அமெரிக்கா), கடாட்சன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் அமிர்தலிங்கம், சிவபாலன் (சுவிஸ்), இராச சேகரம் (லண்டன்), கஜேந்தினிஆகியோரின் அன்பு மாமியும் அபிதா, அமிர்தா, அபர்ணா, பானுஜன், பாருகன், சபினா, துர்க்கா, கரிஸ், சங்கவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.08.2008) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில்

தகவல்: ந.லஜன் (அண்ணா - மகன்)



**A/L மாணவர்களுக்கு அரியசந்தர்ப்பம்**

அரசு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சின் தொலைக்கல்வி இளமாணி பொறியியல்/ விஞ்ஞானத்திற்கு அங்கீகாரிக்கப்பட்ட ஒரே ஒரு தனியார் பல்கலைக்கழகம் - JAST - Multimedia University of Science - Technology - PARTNER with DEMP/DEPP.

* புதிய இளமாணி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சிகள் ஜனாதிபதி செயலணிக்குழு, ICTA அனுசாரணையுடன் 14.06.2008இல் ஆரம்பமாகவுள்ளது. பிரவேசம் A/L சித்திகள்/சமனான தகுதிகள்.

** ஜனாதிபதி செயலணிக்குழு/பிறநாட்டுமொழிக்கான ஹைதரபாத் பல்கலைக்கழக அனுசரணையுடன் ''வாழ்க்கைத்திறன் ஆங்கிலமொழி'' பயிற்சி அரச/தனியார்துறை உத்தியோகத்தவர்கள் மாணவர்கள் பயிற்சிகள் (IELTSக்கு விதிவிலக்கு) 14.06.2008 ஆரம்பம்.

*** தற்போது நடைபெறும் தொலைக்கல்வி (ONLINE) பொறியியல் இளமாணி பயிற்சிகள் Bio Medical/Electronic Computer / Civil Enginering இன் அடுத்த பிரிவுகள் உடன் ஆரம்பமாகவுள்ளன. A/L கணித/உயிரியல் பிரிவு சித்திகள்/சமனானவர்கள் உடனே பதிவு செய்யும் படி கேட்கப்படுகின்றனர்.

**** பகுதி புலமைப்பரிசில் உண்டு.

தொடர்பு : பதிவாளர் - JAST
306(162) அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.0774078753


**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் யாழ்ப்பாணம்**

விடயம் :- வடமாகாண ஆசிரியர் போட்டிப்பரீட்சையில் தோற்றி நேர்முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்படாதோர் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

காலம் :- 09.06.2008
நேரம் :- 9.00 மணி காலை
இடம் :- பாலர் பாடசாலை செம்மணி வீதி (யாழ்.வலயக்கல்விப் பணிமனைக்கு அருகாமை)

வேலையற்றபட்டதாரிகள் செயற்குழு.


**காணி விற்பனைக்கு**

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் கிழக்கு எல்லையில் பாடசாலை, இருபாலைச்சந்தி என்பவற்றுக்கு மிக அண்மையில் அத்திவாரம், கிணற்றுப் பங்குடன் 1, 1/2 பரப்புக்காணி விற்பனைக் குண்டு. முன்னர் நேரடியாகவந்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு:- 060 221 7888

**வாடகைக்கு**

யாழ்.பஸ்தரிப்பிட மையப் பகுதியில் 700 சதுர அடி விஸ்த்தீரணம் உள்ள கடை வாடகைக்கு உண்டு. (நகை,Bata, தேநீர் கடைகளுக்கு உகந்தது)

தொடர்பு: 536, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.போ- 0776391080

**கணினிக் கல்வி**

கணினி அறிவினைப் பெறவிரும்பும் எவரும் எந்த வயதினரும் இதில் இணைந்து கொள்ள முடியும். சிறியவர்கள், பெரியவர்களுக்குத் தனித் தனி யான பிரிவு ஆரம்பம் - Individual/Group Classes

Ms.office, Internet, Hardware, Desktop publishine

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு

T.P. 0602216083 By R.Kumaran - B.Sc.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வரைந்த அரசமைப்புச் சட்டத்தின் 29 ஆவது சரத்து நினைத்தது போன்று அதிகாரமுடையதாக இருக்கவில்லை!

## சோல்பரிப் பிரபு கழிவிரக்கத்துடனும் வேதனையுடனும் பேராசிரியர் சுந்தரலிங்கத்துக்கு எழுதிய கடிதம்



சோல்பரி பிரபு



சுந்தரலிங்கம்

இலங்கை சுதந்திரமடைந்தபோது சுதந்திர இலங்கையின் முதலாவது மந்திரி சபையில் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்தவர் பேராசிரியர் சுந்தரலிங்கம். பேராசி ரியர் சுந்தரலிங்கம் டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சரவையில் இடம்பெறாவிடின் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்திருக்கமாட்டாது.

இந்தியப் பிரஜா உரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது தனது அமைச்சர் பதவியை சுந்தரலிங்கம் இராஜினாமாச் செய்தார். இதேவேளை தமிழர்களுக்கு இலங்கை நாடாளுமன்றத்தில் சமபிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் எனப் பிரிட்டனுக்குச் சென்று வாதாடிய ஜி.ஜி.பொன்னம்பலம் தனது கோரிக்கைக்கு இலங்கைத் தமிழர்கள் ஆதரவு அளிக்காத காரணத்தினால், தனது 50-50 கோரிக்கையைக் கைவிட்டு அரசாங்கத்துடன் இணைந்து கைத்தொழில் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டார்.

மூன்று தமிழ்த் தலைவர்களும் மூன்று விதமான கோரிக்கைகளை முன்வைத் தனர். அமைச்சரவையிலிருந்து விலகிய சுந்தரலிங்கம் தமிழீழம்தான் (தனிநாடு) தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்றார். அமைச்சரவையில் இணைந்து கொண்ட ஜி.ஜி.,அரசாங்கத்தை எதிர்த்து எதுவும் செய்யமுடியாது அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே தமிழர்களுக்கு நன்மை என்றார். செல்வநாயகம் சமஷ்டி ஆட்சி முறைதான் தமிழர்களின் பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வு என்றார்.

இலங்கை சுதந்திரமடைந்தபோது தாம் விட்ட தவறுகளை சோல்பரி பிரபுவும் சுந்தரலிங்கமும் உணர்ந்துகொண்டனர். தனது தனிநாட்டுக் கோரிக்கையை (தமிழீழம்) விளக்கி சுந்தரலிங்கம் சோல்பரி பிர புவுக்கு எழுதிய கடிதங்களுக்கு சோல்பரி பிரபு அனுப்பிய பதில் கடிதம் இங்கு பிரசுரமாகிறது. இக் கடிதம் தமிழர்கள் எல்லா வகைகளாலும் ஒடுக்கப்பட்ட பின்னர்; - "அடிமை" நிலைக்குத் தள்ளப்பட்ட பின்னர்; - 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி எழுதப்பட்டதாகும்.

அன்பின் சுந்தரலிங்கம்,

நீங்கள் அனுப்பிய கடிதங்களை ஆர்வமாக மனவேதனையுடனும் விசனத்துட னும் வாசித்தேன்.

நான் இலங்கையில் மகாதேசாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் இலங்கையில் சிங்கள - தமிழ் சமூகங்களுக்கிடை யில் கசப்புணர்வும் பிளவும் ஏற்படுமென ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. இந்தப் பிளவை உருவாக்கியது சேர்.ஜோன் கொதலாவலையும் அவரது அரசாங்கமும்தான் என நீங்கள் எழுதியது முற்றிலும் சரி. ஆனால் அவர் தமிழர்களைத் தாக்குமாறு தூண்டி விட்டிருந்தால், மறைந்த பிரதமர் பண்டாரநாயக்காவோ ஊசிகள் பொருத்தப்பட்ட சாட்டையால் தமிழர்களைத் தாக்கியுள்ளார். தமிழர்கள் மீதான சிங்களவர்களின் அணுகுமுறை குறுகிய நோக்கமுடையதும் முட்டாள் தனமானதுமாக உள்ளது.

### தமிழர்கள் ஸ்கொட்லாந்து மக்களைப் போன்றவர்கள்

1945ஆம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பை உருவாக்கியபோது அதன் தலைவராக இருந்து இரு சமூகங்களுக்கு மிடையேயான உறவைப்பற்றி நான் ஆராய்ந் தேன். நான் அதிக கவனத்தில் எடுத்துக் கொண்ட பிரதானமான விடயம் தமிழர் களதான் இலங்கையின் பொருளாதாரத்தை உருவாக்கியவர்கள், உருவாக்குபவர்கள் - அத்துடன் இலங்கைத் தமிழர்கள் சிங்களவர்களைவிட கல்வியறிவில் சிறந்து விளங்கினார்கள், சுறுசுறுப்பானவர்கள் கஷ்டப்பட்டு உழைப்பவர்கள். பல வழிகளிலும் ஸ்கொட்லாந்துக்காரர்களைப் போலிருந்தார்கள். இங்கிலாந்தின் பொருளாதாரத்தில் இப்போதும் ஸ்கொட்லாந்துக் காரர் ஆதிக்கம் செலுத்துகின்றனர். 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்கள் ஸ்கொட்லாந்துக்காரரைப் பார்த்து பொறாமைப்பட்டனர். இங்கிலாந் தில் அவர்களது சனத் தொகைக்கு ஏற்ப வழங்கப்பட்ட எண்ணிக்கையைவிட கூடுதலான எண்ணிக்கையில் அவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருந்தனர். இதற்குக் காரணம் ஸ்கொட்லாந்துக் காரர் சிறந்த கல்வியறிவுடையவர்களாகவும் சுறுசுறுப்பானவர்களாகவும் விளங்கியமையே என நான் நினைக்கிறேன். வடக்கு மக்கள் எப்போதும் தென்பகுதி மக்களைவிட கடின உழைப்பாளிகள். காலநிலையும் மண்ணும் அவர் களை இவ்வாறு கடினமாக உழைக்க நிர்ப்பந்திக்கின்றன. ஆனால் ஆங்கிலேயர்கள் முட்டாள்தனமாக ஸ்கொட்லாந்துக்காரர்களைப் பகைவர்களாகக் கருதவில்லை. ஆங்கிலேயர்களும், சிங்களவர்கள் தமி ழர்களை நடத்துவதுபோல் ஸ்கொட்லாந் துக்காரரை நடத்தியிருந்தால் பிரிட்டன் உள்நாட்டில் அபிவிருத்தியடைந்திருக்கவோ வெளிநாடுகளுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் விஸ்தரிக்கப்பட்டிருக்கவோ முடியாது.

18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்துக்கும் ஸ்கொட்லாந்துக்கு மிடையே யூனியன் சட்டமூலம் உருவாக கப்பட்ட போது ஆங்கிலேயர்கள் இரு நாடுகளுக்கும் ஆங்கிலமதான் மொழி என (English only) அமுல்படுத்தியிருந்தால் ஒவ்வொரு ஸ்கொட்லாந்துக்காரரும் ஸ்கொட் மொழியுடனேயே தொங்கிக் கொண்டிருந்திருப்பான். ஒவ்வொரு ஸ்கொட்டிஷ் தாய் மாரும் தமது பிள்ளைகளுக்கு உணர்வுபூர்வமாக ஆங்கிலத்தைப் போதித்தனர். காரணம் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு பெரு மளவு வேலை வாய்ப்புகள் காணப்பட்டன. சிங்களம் படிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் ஒவ்வொரு தமிழ்த்தா யும் ஆத்திரத்துடன் தனது பிள்ளைகளுக குச் சிங்களம் போதிப்பாள். இப்போது ஒரு சிறந்த தீர்வோ அல்லது ஏதாவது தீர்வோ எனக்குத் தெரியவில்லை.

## சிங்களவர்களைப் போன்று ஆங்கிலேயரும் முட்டாள்களாக இருந்திருப்பின் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் விஸ்தரிக்கப்பட்டிருக்காது

### மன்னிப்புக் கோருகிறேன்

நான் சிபார்சு செய்த அரசியல் யாப்பு சிறுபான்மையினரை பாதுகாப்பதற்குப் போதுமானது என அப்போது நான் எண்ணினேன். ஆனால் நான் நினைத்ததுபோல் 29 ஆவது பிரிவு அதிகாரமுடையதாக இருக்கவில்லை. நான் இப்போது இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் உள்ளது போன்ற மனித உரிமை ஷரதது ஒன்றைச் சிபார்சு செய்ய விரும்புகிறேன. ஆனால் மாநில அரசாங்கமோ (Federation) சுயாதீன தமிழ் அரசாங்கமோ அமைப்பது நடைமுறையில் செயற்படுமென நான் நம்பவில்லை. மாநில சுயாட்சியை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது அத்துடன் சுயாதீனத் தமிழ் அரசை இயககு வதும் கடினமானது.

நான் மட்டும்தான் ஆலோசகராகவும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவனாகவும் அதிகாரம் மிகக் ஒருவனாகவும் சனப் பிரதிநிதிகள் சபையில் (House of Representatives) இருந்ததையிட்டு நான் அஞ்சுகிறேன் - கழிவிரக்கமடைகிறேன்.

நீங்கள் அயர்லாந்துக்காரர் (House of Commons) முன்பு சமர்ப்பித்ததை கொப்பியடித்திருக்கிறீர்கள். தற்செயலாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டட்லி சேனநாயக்காவுக்கு ஆதரவளிக்க விரும்பவில்லை. அவர்களால் அவரை ஆட்சியில் அமர்த்த முடியுமென நினைக்கிறேன். தோட்டத் தொழிலாளர்களும் கடுஞ்சினமுற்றுள்ளனர். பெருந் தொகையான ஆண்களும் பெண்களும் வாக்குரிமையின்றி அதிர்ச்சியுற்ற நிலையிலுள்ளனர். கண்டியிலுள்ள தேர்தல் தொகுதிகளைத் தாம் சுவீ கரிப்பதற்காகவே சிங்களவர் இந்த விரும்பத்தகாத செயலைச் செய்துள்ளனர் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு நியாயமான தீர்வு நான்கு அல்லது ஐந்து ஆசனங்கள் தமிழ் வாக்காளர்களுக்கு மட்டுமென உருவாக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்களுக்காக அவர்கள் தீவின் எப்பாகத் தில் வசிப்பவர்களாகவும் இருக்கலாம். நான் உங்களிடமும் உங்களது சமூகத் திடமும் உளப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன்.

-30.04.1964 ஒப்பம் சோல்பரி.

**ந.பரமேஸ்வரன்**

---

# எவரையும் பலவீனப்படுத்துவது பிரிவு என்பதற்கு உதாரணமாகத் திகழும் இடதுசாரிக் கட்சிகள்

**ஜே.வி.பி தரப்பின் அண்மைய பிளவை மையமாக வைத்து "கட்சியில் பிளவுகள், இந்நாட்டு இடதுசாரி அரசியலின் வழமையான இலட்சணமே" என நிறுவ முயலும் இக் கட்டுரை 'லங்காதீப' பத்திரிகையில் வெளிவந்ததொன்றாகும்.**

இலங்கை அரசியலில் இடதுசாரித் தரப்புகளது வரலாறு போராட்டங்கள் நிறைந்ததொரு வரலாறாகும். தொழிலாளர் வர்க்கத்தினர் மற்றும் விவசாயிகள் தரப்பினரின் போராட்டங்களை நெறிப்படுத்தி, அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதே இடதுசாரிகளது உத்தியாகும். தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காகச் சில சந்தர்ப்பங்களில், அரசுக்களுடன் இணைந்து ஆதரவளித்துச் செயற்படுவதையும், கட்சிகள் மட்டத்தில் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு செயற்படுவதையும் தமது தந்திரோபாயமாக இடதுசாரித் தரப்புகள் மேற்கொண்டு வந்துள்ளன; மேற்கொண்டும் வருகின்றன. இத்தகைய இடதுசாரி தரப்புகள் பல சந்தர்ப்பங்களில் தம் மத்தியில் ஏற்படும் கருத்து - வேறுபாடுகள் காரணமாகப் பிளவுபட்டுச் செயற்படும் வரலாற்றையும் கொண்டுள்ளன. இந்நாட்டின் வரலாற்றில் கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிளவுபட்டுப் போகும் இடதுசாரிக் கட்சிகளிலிருந்து பிரிந்து வெளியேறிச் செல்லும் தரப்பினர்கள் புதிய கட்சியொன்றை உருவாக்கிக்கொள்ளும் சம்பவங்களும் அரங்கேறியதுண்டு. அவ்விதம் புதிதாக உருவான அணியினர் பின்னர், முகவரியே அற்றுப் போய் செயலிழந்துபோன சம்பவங்களும் இந்நாட்டின் அரசியலரங்கில் இடம் பெற்றுள்ளன.

இந் நாட்டின் இடதுசாரித் தரப்புகளது, ஆரம்பமாக, 1935ஆம் ஆண்டில் உருவான லங்கா சமசமாஜக் கட்சியின் தோற்றத்தைக் குறிப்பிட இயலும். கலாநிதி என். எம். பெரேரா கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்த்தன மற்றும் எஸ். ஏ. விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் அக் கட்சி அன்று ஆரம்பிக்கப்பட்டது. அதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அரசியல் கட்சியெனவும் கொள்ளத்தக்கதாகும்.

### தலைமறைவாக வாழ்ந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றவர்கள்

டிறொஸ்க்கி வாதக் கொள்கையை பின்பற்றிய தரப்பினருக்கு யோசெப் ஸ்டாலினின் தலைமையிலான அரசியல் தரப்புகளுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் உருவாகித் தீவிரமடைந்ததும் ரஷ்யப் புரட்சி இடம் பெற்ற காலகட்டத்திலாகும். அதன் பிரதிபலனாக இந்நாட்டின் இடதுசாரிகள் தரப்பின் மத்தியிலும் முதலாவது பிளவு உருவாகியது.

*சிங்கள மூலம்:* **சீ.ஜே.அமரதுங்க**
*தமிழில்:* **ராஜா**

இலங்கை சமசமாஜக் கட்சியின் முக்கிய அணி டிறொஸ்கி வாதக் கொள்கையையே பின்பற்றி வந்தது; இதன் காரணமாக அதிருப்தியுற்ற எஸ்.ஏ.விக்கிரமசிங்க, ஆரியவன்ச குணசேகர ஆகிய சமசமாஜக் கட்சித் தலைவர்கள் 1939 ஆம் ஆண்டில் சமசமாஜக் கட்சியினின்றும் வெளியேறினர். அவர்கள் அந்த வேளையில் ரஷ்யாவின் ஜோசப் ஸ்டாலினின் கொள்ளைகளால் பெரிதும் கவரப்பட்டனர். அந்த வகையில் இலங்கையின் ஆரம்ப கால இடதுசாரித் தரப்பின் பிளவு டிறொக்கி வாதம் மற்றும் ஸ்டாலின் வாத தரப்புகளின் உதயமாக அமைந்தது.

1940 ஆம் ஆண்டில் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்ற தரப்பினரால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் புதிய இடதுசாரி அரசியல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் இடதுசாரிக் கொள்கைத் தரப்புகளது முதலாவது பிளவு என்ற வகையில் இதனைக் கருத்தில் கொள்ள இயலும்.

இரண்டாவது உலக யுத்த வேளையில் இலங்கை சமசமாஜக் கட்சியை பூண்டோடு ஒழித்துக்கட்டிவிடும் முனைப்பில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் செயற்பட்டனர். இதையுணர்ந்து கொண்ட அவ்வேளைய சமசமாஜக்கட்சித் தலைவர்களான கலாநிதி என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி சில்வா, லெஸ்லி குணவர்த்தன, விவியன் குணவர்த்தன மற்றும் ஹெக்டர் அபேவர்த்தன ஆகியோர் தலைமறைவாக வாழ்ந்து, பின்னர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர்.

1940பதுகளில் கடைசிப் பகுதியில் சமசமாஜக் கட்சித் தலைவர்கள் இலங்கைக்குத் திரும்பி வந்தனர். அவ்விதம் அவர்கள் இலங்கைக்கு திரும்பி வந்து மீண்டும் தமது அர்சியல் நடவடிக்கைகளை ஆரம்பித்த வேளையில், இலங்கை சமசமாஜக் கட்சி அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்ததை தெளிவாக உணர முடிந்தது.

கலாநிதி என்.எம்.பெரேரா தலைமையில் சமசமாஜக் கட்சி தொடர்ந்தும் செயற்பட்டு வந்த போதிலும், பிலிப் குணவர்த்தன உட்பட மற்றொரு அணியினர் புரட்சிவாத இலங்கை சமசமாஜக் கட்சியென்ற பெயரின் கீழ் தனியாகச் செயற்பட ஆரம்பித்திருந்தனர். கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவின் தலைமையில் பிறிதொரு அணி பொல்செவிக் லெனின் வாதக் கட்சியாக உருவாகிச் செயற்பட்டனர். பின்னர் பொல்சிவிக் லெனின் வாதத் தரப்பினர் மீண்டும் இலங்கை சமசமாஜக் கட்சியுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர் அதே·சமயம் பிலிப் குணவர்த்தனவின் தலைமையில் இயங்கி வந்த புரட்சிவாத சமசமாஜக் கட்சித் தரப்பினர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட மக்கள்ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். பண்டார நாயக்கா மரணமடைவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் அரசிலிருந்து வெளியேறிய பிலிப் குணவர்த்தன தலைமையிலான அணியினர் பின்னர் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரிலான அரசியல் கட்சி உறுப்பினர்களாகவே செயற்பட்டு வந்தனர். அக்கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தை தினேஸ் குணவர்த்தனவே ஏற்று நடத்தி வருகிறார்.

### ரஷ்ய சார்பு கம்யூனிஸமும் சீன சார்பு கம்யூனிஸமும்

இடதுசாரித்தரப்பின் இரண்டாவது பிளவு 1963 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட அந்தப் பிளவு, ரஷ்ய சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தரப்பு மற்றும் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தரப்பு என்பவற்றுக்கிடையே இடம்பெற்ற அரசியல் விவகாரங்கள் தொடர்பான விவாதங்களின் பலாபலனாக ஏற்பட்டதொன்றே. என்.சண்முகதாஸன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சித் தரப்பொன்று, புதிதானதொரு அரசியல் கட்சியை உருவாக்கிக் கொண்டனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு தரப்புகளாக பிரிந்தது மட்டுமன்றி, பின்னர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க மற்றும் பீற்றர் கெனமன் ஆகியோரின் தலைமையிலான தரப்பு ரஷ்ய சார்பு தரப்பு என அடையாளப்படுத்தப்பட்டது. பின்னர் அது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் செயற்பட்டது.

என்.சண்முகதாசனின் தலைமையிலான சீன சார்புத் தரப்பு காலப் போக்கில் மென்மேலும் உடைந்து பிளவுபடலாயிற்று. பிரேமலால் குமாரசிறி, கல்யாணந்த திரணகம அணி என்பது அவ்விதம்.சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினின்றும் பிரிந்து தனியாக இயங்க ஆரம்பித்த முதலாவது அணியாகும்.

( 12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவு



அமரர்
**கதிரன் கனகலிங்கம்**

அன்னை மடியில் 09.01.1971
அரக்கர் பிடியில் 06.06.1996

திதி: பஞ்சமி (08.06.2008)

குடும்பத்தின் குலவிளக்கே!
உனை இழந்து தினமும் தவிக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
கைதடி கிழக்கு.

(75189)

## இந்தியாவில் படியுங்கள் பிருந்தாவன் கல்லூரி

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

பங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

Join With 2 A/L Passes

Courses to Commence in July

Fix an appoinment for interview
Contact: 0777-317043
Company Secretarial Services (Pvt) Ltd
285C 1/1, Stanley Tillakaratne Mawatha,
Jubilee Post, Nugegoda.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**இரத்தினம் சந்திரஜெயம்**
(தவம்)
(தவம் கடை மீசாலை கிழக்கு)

பிறப்பு 07.02.1963

இறப்பு 25.04.2008

பார் புகழ எம்மைப் பக்குவமாய் வளர்த்தெடுத்த
பாசமிகு தலைவனே! ஊர் புகழ உயர்த்தி
உத்தமனாய் வாழ்ந்தவனே!
திடீரென வந்த மின்னல் கொண்டு சென்றதோ?
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மீசாலை கிழக்கு,
மீசாலை. (75187)
**குடும்பத்தினர்.**

## நீங்காத நினைவில் ஐந்தாம் ஆண்டு



| வையத்துள் | வானுலகில் |
|---|---|
| 09 | 04 |
| ★ | ★ |
| 02 | 06 |
| ★ | ★ |
| 1932 | 2003 |

**அமரர் கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்**
(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், சோலைவரிப்பகுதி, யாழ்.மாநகரசபை)
திதி: வளர்பிறை பஞ்சமி (08.06.2008)

பஞ்சமி திதிதனிலே கந்தனவன் பதம் அடைந்திட்டீரே - ஐயா எதற்கும்
பஞ்சமில்லாது பாசமுடன் பக்குவமாய் எமை வளர்த்தெடுத்தீரே!
சிவபதமடைந்த சிவபாதசுந்தரரே எம் சித்தத்துள் உறைகின்றீரே - எக் கணமும்
சீரான எம் வாழ்வுதனைச் சிறப்புடன் காண நீரில்லாமல் எம் சிந்தை வேகுதே என் செய்ய.

(75190)

118/4, பிறவுன் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ, பட்டதாரி ஆங்கில ஆசிரியர், Vegetarian, வயது 30, செவ்வாய்க் குற்றம் உள்ள மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு: நிர்மலன்
T.P:4591735. (பகல் 8.00-6.00)
(75177)

## விற்பனைக்கு


நினைவு மலர்களுக்கான
பல வர்ணக் கவர்கள் விற்பனைக்குண்டு.
**பிள்ளையார் அச்சகம்**
பச்சை மாளிகை,
வண்ணார்பண்ணை சிவன்கோவிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## வட இந்தியா யாத்திரை

பூரி, புவனேஸ்வர், கோனாராஜ், காசி, கயா புத்தகயா, அலகாபாத், டெல்லி, ஆக்ரா, ஹரித்துவார், ரிஷிகேஸ், பத்திரிநாத், கேதார்நாத் இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, சென்னை 32 நாள்கள், 15 பேர், ஆரம்பம்: 20.07.2008 இல். விருப்பமுடையவர்கள் கடவுச் சீட்டு போட்டோ பிரதி 2, அடையாள அட்டை போட்டோ பிரதி 1, முத்திரை அளவு கலர் புகைப்படம் 3 மட்டும் அனுப்பி 10.06.2008இற்கு முன் பதிவு செய்யத் தொடர்பு கொள்ளவும்.

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
T.P.: 0777 680102, 077- 6264301

## 23 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் அம்பலவாணர் சுப்பிரமணியம்**
(சின்னத்தம்பி)
(விக்கினேஸ்வரா மர அரிவு ஆலை)

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (09.06.2008) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (75183)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## புரோகித பாடநெறி (2008-2010)

**பூஜ்ய சுவாமி தேஜோமயானந்தா அவர்கள்**
உலகளாவிய சின்மயா மிஷனின் தலைவர்
இந்த புரோகித பாடநெறிக்கான
விண்ணப்பங்களைக் கோருகின்றார்.
(பூஜா விதிகள், ஷோடஷ ஸம்ஸ்காரங்கள், வேதம் ஓதுதல், சமஸ்கிருதம், இந்து கலாசாரம் என்பவற்றின் கற்கை)

**கல்வித்தராதரம்:** க.பொ.த. (சாதாரண தரம்) பாடநெறி பெரும்பாலும் ஆங்கிலத்தில் நடைபெறவுள்ளதால் விண்ணப்பதாரிகளுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.

**வயது:** 15இற்கும் 30 இற்கும் இடையில்.

**வதிவிட ஆசாரியர்:** பூஜ்ய பிரம்மச்சாரி ஸம்வித் சைதன்யா.

**கல்விப் பீடம்:** சின்மய வைதிக வித்யாபீடம், சின்மயா தோட்டம், கோயம்புத்தூர், இந்தியா.

**பாடநெறி:** பூர்த்தியாக எடுக்கும் காலம் ஒன்றரை வருடங்கள். பாடநெறியின் போது விடுமுறைகள் விடப்படமாட்டாது. இது ஒரு வதிவிடப் பாடநெறி. பாடநெறி 2008 ஒக்டோபர் 9ஆம் திகதி விஜயதசமியன்று ஆரம்பமாகவுள்ளது.

**கட்டணம்:** பாடநெறி இலவசம். அத்துடன் தங்குமிட வசதி, உணவு, உடை, சுகாதார வசதி மற்றும் புத்தகங்கள் என்பன சின்மயா கார்டன் டிரஸ்டினால் இலவசமாக வழங்கப்படும்.

**விண்ணப்பத்திற்கான கடைசித் திகதி:** 2008 ஜூன் 30

**நேர்வு காணல்:** அனைத்து விண்ணப்பதாரிகளுக்குமான பிரத்தியேக நேர்வுகாணல் நடத்தப்படும். நேர்வுகாணலிற்கான இடங்கள் அறிவிக்கப்படும்.

இந்தப் பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் புரோகிதர்கள் சின்மயா மிஷனில் சேர்ந்து கொள்ளலாம். அல்லது தமது தனிப்பட்ட வாழ்க்கையைத் தொடரலாம்.

**விண்ணப்பப் பத்திரங்கள்:**
கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**Chinmaya Mission of Sri lanka**
**Chinmaya Pragati,**
**32, 10th Lane, Colombo 03.**
**Tel: 011- 4862470, 011-2591344**
**E-mail: info@chinmayalanka.org**

(5/553159)

## கோம் நீட்ஸ் தையல் நிலையம்

* சிறுவர்கள், பெண்களுக்கான உடைகள் தைத்துக் கொடுக்கப்படும்.
* ஜசிங் கேக் விரும்பிய வடிவங்களில் செய்து கொடுக்கப்படும்.
* மணப்பெண் அலங்காரமும் செய்து கொடுக்கப்படும்.
* முக ஒப்பனை (FACIAL), சிகை அலங்காரம் (HAIR CUTTING)

பயிற்சி வகுப்புகள்: 18.06.2008, 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்புகளுக்கு:
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.: 0773944486.
ராஜி பீடில். (75188)

### வெளிக்களப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 8

குடும்ப நல உத்தியோகத்தர் களுக்கானவிணைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கான வெளிக் களப்பரீட்சை நாளை மறுதினம் கோண்டாவில் பிர தேச வைத்தியசாலையிலும் மறுநாள் புதன்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் நடைபெறவுள்ளது. (202)

### செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்8

யாழ். மாவட்ட கலை, கலாச்சாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ... செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் ஸ்ரீரவீந்திரன்



மட்டக்களப்பு, செங்கலடியைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், நீலியம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் ஸ்ரீரவீந்திரன் 04.06.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் செல்வநாயகம் மற்றும் பவளரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் நவரட்ணம் (அமரர்), சிவபாக்கியம் (அமரர்) தம்பதியரின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரசன்னா (ATI மாணவன், திருநெல்வேலி), நேமினா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலாம்பிகை, ரஞ்சினிதேவி, மகேந்திரன், ஸ்ரீலோகராஜினி, சிவேந்திரன், ஜெயேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலசேகரம், மனோரஞ்சிதம் (அமரர்), அரியரட்ணம், நவமணி, ஸ்ரீரங்கநாதன், குணரட்ணம், ஸ்ரீகாந்தா, பகவதி, ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீலியம்பனை,
மல்லாகம். (75192)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களைக் கொண்டு செல்வதற்கு நாடகங்கள் சிறந்த பசளையும் நீரும் ஆகின்றன

**மூத்த நாடகக் கலைஞர், மூத்த கவிஞர், சிறுகதை மற்றும் நாவல் எழுத்தாளர் இளைப்பாறிய பட்டதாரி ஆங்கில ஆசிரியர் நவாலியூர் ந.செல்லத்துரை பல முகங்களைக் கொண்டவர். சுமார் 75 நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து தாமே முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்தும் உள்ளார். நான்கு தசாப்தங்கள் இத்துறையில் முத்திரை பதித்தவர். அவரது பல்துறைத் திறமைகளை இந்தச் செவ்வி வெளிப்படுத்துகிறது.**

**மூத்த கவிஞரும் ஆசிரியருமான நவாலியூர் ந.செல்லத்துரை அவர்களை உதயனுக்காகச் செவ்வி காணச் சென்ற வேளை இன்முகத்துடன் வரவேற்றார். கம்பீரமான தோற்றம், வார்த்தைகளில் பிசிறு இல்லை. இத்தனைக்கும் அவர் 80 வயதைத் தாண்டிய மூத்த கலைஞர்.**

***அவர் பெற்ற பட்டங்களும், பரிசுகளும், விருதுகளும்*- கலாபூசணம் விருது - 1998, முதுகலைஞர் விருது -2004, கலைப் பேரரசு விருது - 2005, புதுமை நடிகன் பட்டம், கலைமதி பட்டம், சர்வகலாவல்லவன் பட்டம் 1983, நடிப்பிசைத் திலகம் பட்டம் - 1987 , நாடகக் குரிசில் பட்டம் - 1989 , தமிழ்க் கலைத்திலகம் பட்டம் - 2002, கலைஞானச்சுடர் பட்டம் - 2003, கலைத் தென்றல் பட்டம் - 2003, கலைஞர் பட்டம் - 2004, நாவல் - 1968.**

## 40 வருடங்கள் நாடகத்துறையில் முத்திரை பதித்த கலைஞர்; ஆசிரியர் நவாலியூர் ந. செல்லத்துரையுடனான செவ்வி

***கலைவழிப் பயணத்தில் தங்களது பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?**

•1951ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நாடக்க கலையில் எனது முதல் தடத்தைப் பதித்தேன். சர்வாதிகாரி (Dictator) என்ற நாடகத்தில் சர்வாதிகாரியாக நடித்தேன். அது தான் நான் வேடமேற்று நடித்தமுதல் பாத்திரம். அன்றைய காலப்பகுதியில் நான் கொழும்பில் மூத்த சகோதரருடன் தங்கியிருந்து படித்துக் கொண்டிருந்தேன். ஆரம்பத்தில் கொழும்பு கிராண்ட்பாஸில் உள்ள சென்.ஜோசப் கல்லூரியிலும், பின்னர் கொட்டாஞ்சேனையிலுள்ள கதிற்றல் கல்லூரியிலும் (Cathedral College) கல்வி கற்று வந்தேன். அங்கே எஸ்.எஸ்.சி சிறப்பாகச் சித்தியடைந்தேன். இதில் ஆங்கில பாடத்தில் சிறப்புச் சித்தியடைந்தேன். அதன் விளைவாக மட்டக்குளி சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக கல்வி கற்பிக்க வாய்ப்புக் கிடைத்தது. அப்போதுதான் ''சர்வாதிகாரி'' என்ற நாடகத்தில் நடிக்குமாறு கல்லூரி முதல்வர் கேட்டார். ஆனால் எனக்கு நாடகம் நடித்த முன் அனுபவம் இல்லை. இருந்தும் கல்லூரி முதல்வரின் கோரிக்கையை ஏற்று நடிக்கச் சம்மதித்தேன். ஆனால் எனது அண்ணனுக்கு நான் நாடகம் நடிப்பது விருப்பமில்லை. நான் உயர்தரம் படித்து பட்டதாரியாக வேண்டும் என விரும்பினார். முதலில் கல்வியில் வெற்றி பெறு; அதன் பின்னரே கலை என்றார். அந்வேளையில் நான் திண்டாடினேன். இருந்தும் குறித்த நாடகத்தில் நான் நடிப்பது உறுதியாயிற்று


ந.செ.பங்குபற்றிய நாடகம் ஒன்றின் காட்சி...

### நாடகம் மீதான போதை

குறிப்பிட்ட திகதியில் சர்வாதிகாரி என்ற நாடகம் மேடையேற்றப்பட்டு பெருவெற்றி கண்டது. என்னையும் சக கலைஞர்களையும் சிங்கள, முஸ்லிம் மக்கள் வெகுவாகப் பாராட்டினார்கள் இதன் பின்னரே நாடகம் மீதான 'போதை' என் தலைக்கேறியது.

***நாடகத்தில் நடிகனாக பிரவேசித்த நீங்கள் நாடகம் எழுத முயற்சித்தீர்களா?**

• ஆம், நான் முதலில் நடிகனானேன். அது தந்த உத்வேகம் என்னை நாடகத்தை எழதத் தூண்டியது. 'ஒழுக்க விழுமியத்தை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்' என்பதே எனது குறிக்கோளாயிருந்தது. அதனைக் கருப்பொருளாக வைத்து நாடகம் எழுதத் தொடங்கினேன்.

***நீங்கள் எழுதி நடித்த முதல் நாடகம் எது? அதற்கு மக்கள் மத்தியில் வரவேற்பு எப்படி இருந்தது?**

• நான் முதலில் எழுதி நடித்து மேடையேற்றப்பட்ட நாடகம் ''முதற்கல்'' இது 1952ஆம் ஆண்டு நவாலியில் மேடையேற்றப்பட்டது. மக்கள் மத்தியில் பெரு வரவேற்பை பெற்ற நாடகம். இந்த நாடகத்தில் நடித்ததன் பலனாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமிர்தலிங்கம் அவர்கள் எனக்கு ''புதுமை நடிகன்'' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தார். இந்த நாடகத்திற்கு இன்னொரு சிறப்புண்டு. இதில் ஹார்மோனியம் வாசித்தவர் பிரபல நாடக்க கலைஞர் வி.வி.வைரமுத்து ஆவார்.

***இதுவரை நீங்கள் எத்தனை நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளீர்கள்?**

•இதுவரை 75 வரையான நாடகங் களை எழுதியுள்ளேன். எழுதியது மட்டுமல்லாது பாடலை யாத்து இசையமைத்து நெறிப் படுத்தியதும் நான்தான்.

***இந்த நாடகத்திற்கு அண்ண னுடைய பங்கு எப்படி இருந்தது?**

•நாடகத்திற்கு முதலில் தடை போட்டது அண்ணன்தான். பின்பு என்னை வாழ்த்தி உற்சாகப்படுத்தியதும் அவர் தான்.

***நாடகத்துறையில் விருப்புக் கொண்டு நகர்ந்த பொழுது நீங்கள் எத்தகைய சவால்களை எதிர்கொண்டீர்கள்?**

•ஒருசில சவால்களை எதிர் கொண்டேன். கண்டியில் முதன் முதலில் ''மயானம் காத்த மன்னன்'' என்ற நாடக்தை உரை நடையில் எழுதி மேடையேற்றினேன். அரிச்சந்திரனாக நானும், விசுவாமித்திரராக வாழ்நாள் பேராசிரியர் நந்தி (சிவாஞான சுந்தரம்) அவர்களும் சந்திரமதி யாக கண்டியைச் சேர்ந்த பெண் ணும் மற்றும் பலர் இணைந்து கொண்டார்கள். இதற்காக நாம் கடுமையான ஒத்திகையில் ஈடுபட்டோம். எனது நாடகத்தில் சந்திர மதியாக நடித்த பெண் எனது நாடகத் துடன் சேர்த்து தனது பிற நாடாக மொன்றையும் மேடையேற்ற வேண்டும் எனக் கேட்டார். நான் மறுத்து விட்டேன்.

ஏனெனில் துண்டுப் பிரசுரத்தில் (நோட்டீஸ்) நிகழ்ச்சி நிரலின்படியே நிகழ்ச்சிகள் நடைபெறுமெனவும் இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன என வும் ஏற்பாட்டாளர்கள் என்னிடம் தெரிவித் திருந்தார்கள். இதற்கிடையில் இன்னொரு நாடகத்தைச் செருக முடியாது. இன்னொரு தடவை குறித்த நாடகத்தை மேடையேற்றலாம் எனக் கூறினேன்.

அதற்கு இணங்க முடியாது குறித்த பெண்மணி எனது நாடத்தில் நடிக்க மறுத்து விட்டார். நான் மிகவும் இக்கட்டான நிலைகக்குத் தள்ளப்பட்டேன். நாடகம் மேடையேறுவதற்கு நான்கு நாள்களே இருந்தன. அப்போது நந்தியின் ஆலோசனைப்படி வேறொருவரை இந்த நாடகத்தில் இணைக்க முடிவாகியது. அந்த வேளையில் நாடகத்தில் மிகவும் ஈடுபாடுள்ள மோகனா என்ற பெண்மணியிடம் சென்று என்னுடைய நிலையை விளக்கி நாடகத்தில் சந்திரமதியாக நடிக்க விருப்பமா எனக் கேட்டோம். அவரும் சம்மதம் தெரிவிக்க கடுமையான ஒத்திகையின் பின்னர் ''மயானம் காத்த மன்னன்'' என்ற நாடகம் குறித்த திகதியில் குறித்த நேரத்தில் மேடையேறியது. இது உண்மையிலே நான் எதிர்கொண்ட பெரிய சவால்.



### ஆசிரியரும் மாணவரும் வாள்ச் சண்டை

பிறிதொரு தடவை கண்டி திரித்துவக் கல்லூரியின் (Trinity College) பரிசளிப்பு விழா நிகழ்வில் ''கெட்ட குமாரன்'' என்ற நாடகத்தை எழுதி நடித்தேன். இந்த நாடகத்தில் எனது மாணவன் ஒருவனும் நடித்தான். நாடகத்தின் இடையிலே வாள்ச்சண்டைக்காட்சி இடம்பெற்றது. இந்தச் சண்டைக் காட்சி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கும் போது எனது எதிராளி வீசிய வாள் எனது தலையை பலமாகத் தாக்கியதில் மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டது. ஆனால் அதை நான் பொருட்படுத்தவில்லை. நாடகம் நிறைவுற்ற பின்னரே நான் மருந்து கட்டினேன். நாடகத்தை நடித்து முடிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தில் தான் நான் அதனைப் பொருட்படுத்தாது நடித்தேன்.

***இப்போது உங்களது முயற்சி எந்தளவில் இருக்கிறது?**

•இப்போதும் நான் நாடகங்களை எழுதி நடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண் டிருக்கிறேன். கடந்த ஆண்டு (2007) நல்லூர் பிரதேச செயலகத்தின் கலை இலக் கிய விழாவிலே ''சூழ்ச்சியும் வீழ்ச்சியும்'' என்ற சிந்து நடைக்கூத்தை எழுதி மேடை யேற்றினேன். பாண்டவர், துரோணாச்சாரி யார், ஏகலைவன் ஆகியோரை வைத்தே இந்தக் கதை பின்னப் பட்டது. துரோணாச் சாரியார் செய்தவை மிகமிகத் தவறு என் பதையும், மனிதனுக் கு நல்ல மனச்சாட்சி தான் தேவை என்பதையும் உணர்த்திய நாடகம் அது.

*செவ்வி கண்டவர்:*
**சிந்தூரன்**

எனது முதலாவது சிந்து நடைக் கூத்து ''சின்னவனா? பெரியவனா?''. இந்தச் சிந்து நடைக்கூத்தை பேராயர் ஜெபநேசன் அவர்கள்தான் மேடையேற்றி வைத்தார். இந்தச் சிந்து நடைக்கூத்து பின்னர் 1999ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது.

***சினிமா, சின்னத்திரைகளுக்கு மத்தியில் மேடை நாடகங்களின் வரவு மிகக் குறைவாக உள்ளதே...?**

•உண்மைதான், இருந்தும் குறை சொல்ல முடியாத நிலை. காலமாற்றத்திற்கு ஏற்ப அனைவரும் மாறி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். சினிமா உச்சந் தலை தொடக்கம் உள்ளங்கால் வரைக்கும் கொஞ்சல் காட் சிகளையும், அரைகுறை நிர்வாணக் காட்சிகளையும் காட்டுகின்றன. இன்றைய இளைய சமுதாயமும் இதனால் கவரப்பட்டு தங்கள் வலுவான ஆளுமைகளை இழந்துகொண்டிருக்கிறார்கள். சினிமாவாலும், சின்னத்திரையாலும் எம்தேச கலாசார விழுமியங்களை மக்கள் முன் கொண்டு செல்ல முடியாதுள்ளது.

ஆனால் நாடகமோ நல்ல ஒழுக்க விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்கு பசளையாகவும், நீராகவும் இருக்கிறது. நாடகத் துறையில் சிறுவர்களை ஈடுபடுத்தி, நல்ல முறையில் வளர்த்து புதிய மறுமலர்ச்சியின் மூலம் நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதில் அக்கறையும் ஆர்வமும் சமூக நோக்கும் கொண்டு ஒன்றுபட்டு உழைத்தால் வெற்றி பெறலாம் என்பது எனது நம்பிக்கை.

***நாடகத்துறையில் இளசுகளை ஈடுபடுத்த முடியாதெனக் கருதுகிறீர்களா?**

•இளசுகளிடம் வளர்த்துவிட்ட சிந்தனைகளை உடைப்பது கடினம். ஆனால வளரும் பிஞ்சுகளிடம் (சிறுவர்கள்) நல்ல சிந்தனை மாற்றத்தினை ஊட்டி வளர்ப்பது இலகு. இதைச் சிலர் செய்கிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள நாடக அரங்கியலிலே இது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

***காலமாற்றத்தில் தங்களது பங்களிப்பு எப்படி?**

•இன்றைய காலமாற்றத்திற்கு ஏற்ப மாற்றங்களை செய்து வருகிறேன். அதற்கேற்ப ''பட்டமரம்'' என்ற நாடகத்தை எழுதினேன். கொழும்பு அங்கிலிங்கன் தேவாலயம் அதனை மேடையேற்றியது.

***தங்களது நாடகங்களில் இடம்பெறும் பாடல்களை யார் எழுதுவது?**

•அதையும் நான்தான் எழுதி வருகிறேன். நாடகங்களே என்னை கவிதையெழுதத் தூண்டின. 'உதயன்' பத்திரிகையின் ''சஞ்சீவி'' வாரமலர் வெளி வந்த காலப்பகுதியில் நான் ''சஞ்சீவி'' இல் கவிதைகளை எழுதியுள்ளேன். இதை விட அறுபதுக்கும் மேற்பட்ட நினைவு மலர்களுக்குக் கவிதை எழுதியுள்ளேன்.

***நாவல் எழுதியது பற்றி...**

•1968ஆம் ஆண்டு ''முகைவெடித்த மொட்டு'' என்ற நாவலை எழுதியிருந்தேன். இந்த நாவலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. இப்போது ''வீசிய புயல்'' என்ற நாவலையும் எழுதி வருகிறேன். மிக விரைவில் வெளியிடவுள்ளேன்.

***திரைப்பட முயற்சியில் ஈடுபட்டதாக அறிந்தோம், அதுபற்றிக் கூற முடியுமா?**

•ஆம், ''காத்திருப்பேன் உனக்காக'' என்ற திரைப்படத்திற்குத் திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளேன். அந்தப் படம் அந்தக் காலப் பகுதியில் யாழ். வின்ஷர் தியேட்டரில் ஐம்பது (50) நாள்களுக்கு மேல் ஓடியது. இந்தப்படம் இலங்கையின் அநேகமான திரையரங்குகளில் திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடியது.

## கண்டியில் நடைபெற்ற ''கெட்டகுமாரன்'' நாடகத்தில் மாணவன் வீசிய வாள் இவரின் மண்டையைப் பதம்பார்த்தது

***நாடகம், திரைப்படம், கவிதை போன்றவற்றில் - பலதுறைகளில் - திறமை காட் டிய நீங்கள் இப்போது என்னுடன் பேசும் போது (80 வயதில்) கூட உங்கள் வார்த்தைகளில் நறுக்குத் தெறிக்கிறதே; அதற்கு என்ன காரணம்?**

•கடவுள் இந்த துறையில் நீடிக்க என்னை வாழ்த்துகிறார் அதுதான், வேறொன்றும் இல்லை.

செவ்வியின் நிறைவாக நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நாடகம் என்ற கலைமூலம் அனைவரையும் நல்வழிப்படுத்தலாம். நாடகங்களை மேடையேற்றுவதற்கு இப்போது காலம் சீராக இல்லை. இருந்தும் எமது இளைய சமுதாயம் ஒழுக்க நெறிகளைக் கற்று உயர்ந்தவர்களாகத் திகழ வேண்டும். இதுவே எனது பெருவிருப்பமாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதிக்குறைவுகள், சந்தை வாய்ப்பின்மை மத்தியிலும் குடாநாட்டில் உற்பத்தியில் ஈடுபட்டு நிமிர்ந்து நிற்கும் கைத்தொழில் நிறுவனங்கள்


பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம்

சர்வதேச தரத்திற்கு இணையான பலதரப்பட்ட மருந்துப் பொருள்களையும் பானங்களையும் உயிர்நுட்பு உற்பத்தி செய்கிறது.

இத் தொழில் நிறுவனம் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தனது பதினைந்தாவது ஆண்டை நோக்கி வீறுநடை போடுகின்றது. நவீன தொழில்நுட்பங்களையும் விலையுயர்ந்த தொழில் சாதனங்களையும் பயன்படுத்தி இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களின் உற்பத்தித்தரம் மிகவும் உயர்வாகக் காணப்பட்ட போதிலும், அதில் யாழ்.மக்கள் நாட்டம் கொள்ளாதிருப்பதுதான் மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் சிறந்த வழிகாட்டலின் கீழ் இயங்கி வரும் இத்தொழில் நிறுவனம் இன்று விற்பனைக்கும், ஆரோக்கியத் திற்குமென ஒரு நிலையத்தைக்கூட திருநெல்வேலியில் திறந்து தனது சேவையை எம் மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது.

**உற்பத்திப் பொருள்கள்**

**சிறுகுறிஞ்சாப் பொருள்கள்:**

சிறுகுறிஞ்சா (Gymnema Sylvestre) மூலிகை, நீரிழிவு வியாதிக்கு மட்டுமல்லாது உயர் குருதியமுக்க வியாதிக்கும் அதிகநிறை உடையவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதும் பக்கவிளைவற்றதுமாகும். இத்தொழில் நிறுவனம் இந்த மூலிகையிலிருந்து மூன்று உற்பத்திப்பொருள்களைத் தயாரிக்கின்றது.

1.சிறுகுறிஞ்சா இலைத்தூள், 2. சிறுகுறிஞ்சா நீரிழிவு "ரீ" தேயிலை, 3. குரக்கன் கலந்த சிறுகுறிஞ்சா அசிரிமா ஆகியவையாகும்.

**சிறுகுறிஞ்சாவின் உபயோகம்**

* நீரிழிவு வியாதி உள்ளவர்களின் குருதியிலுள்ள வெல்ல அளவைக் குறைக்கின்றது. அத்துடன் குருதியிலுள்ள கொலஸ்ரோல், மூகிளிசரைட்டு ஆகியவற்றின் அளவையும் குறைத்து இதயத்தை உற்சாகப்படுத்தும் காரணியாகவும் அமைகிறது.

* அதிகநிறை உடையவர்களின் நிறையையும் குறைக்கின்றது.

**யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த உணவு விவசாய சிறப்புப் பிரிவின் மாணவர்கள் ஐவர் சேர்ந்து நடத்திய கள ஆய்வில் கிடைத்த தரவுகளின் தொகுப்பு இது.**

* சிறுநீருடன் வெளியேறுவதையும் குறைக்கின்றது.

இதன்விளைவாக இவர்களின் புரதம், ஈமோகுளோபின் கூடுவதால் உடல்பருமன் குறைகிறது. அத்துடன் இரும்பு, செம்பு, விற்றமின் சி ஆகியவை இருப்பதால், ஈமோகுளோபின் தொகுப்பைத் துண்டுவதால் அவர்கள் துடிதுடிப்பாகச் செயற்படுவார்கள்.

சிறுகுறிஞ்சா தூள் போசாக்குடன் மருத்துவ உபயோகத்தையும் வழங்குகிறது. எனவே இதனை Functional Food or Nutraceutical என அழைக்கப்படுகின்றது. இதில் காணப்படும் போசாக்குகளாவன: விற்றமின் சி, பீற்றா கரோட்டீன், விற்றமின் பி சிக்கல் நார்ப் பொருள்கள் மற்றும் குரோமியம், கல்சியம், நாகம், இரும்பு, கோபோலற், செம்பு போன்ற கனியங்களும் காணப்படுகின்றன.

* குரோமியம்: குருதியிலுள்ள வெல்லம், உடற்கலங்களை அடைய உதவும்.

* கல்சியம்: எலும்பு வளர்ச்சிக்கு உதவும்.

* நாகம்: இன்சுலின் (Insulin) சுரப்பைத் தூண்டுவதுடன் காயங் களையும் குணமடையச் செய்யும்.

சிறுகுறிஞ்சா நீரிழிவு "ரீ", நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதுடன் நல்ல ஆராக்கியத்தையும் வழங்குகின்றது. அத்துடன் நல்ல சுகந்தத்தையும் (Flavour) சுவையையும் கொண்டுள்ளது.

எமது முன்னோர் கீரைப்பிட்டை அடிப்படையாகக் கொண்டு இன்றைய விஞ்ஞான கொள்கையைத் தழுவி குரக்கன் கலந்த அசிரிமா தயாரிக்கப்படுகிறது. இது உடையல் பச்சை அசிரி 85%, குரக்கன் 10%, குறிஞ்சா பவுடர் 5% கொண்டுள்ளது. இவை நீரில் நனைய விட்டு அரைத்து பின் 'ரோஸ்ற்' (Roast) பண்ணப்படுகிறது. இவ் உற்பத்திப் பொருளின் முக்கியநோக்கம் நீரிழிவு நோயைக்கட்டுப் படுத்துவதும் அவர்களின் சந்ததியினருக்கும் நீரிழிவு நோயை வராமல் தடுப்பதுமாகும்.

தற்போது சிறுகுறிஞ்சாவிலிருந்து வில்லைகள் செய்வதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

**குளிர்பானங்கள்**

தற்போது பல சுவைகளில் வாயு/ஏற்றம் (Aerated) செய்யப்பட்ட குளிர்பானங்களைத் தயாரித்து விநியோகிக்கின்றது. அவற்றில் ஒரேஞ் ஸ்பெசல், நெக்ரா, 2 டி கோலா ஆகியன அடங்கும். சோடாவானது குறைந்த வெப்ப நிலையிலும் அதிக அமுக்கத்துடனும் காபனீரொட்சைட்டு சேர்க்கப்படுகின்றது. இவ்வாறு சேர்க்கப்படுவதால் காபனீரொட்சைட்டு கரைசலுடன் கரைவதால் சோடாவைத் திறந்த பின்பும் "காஸ்" எளிதில் வெளியேறுவதில்லை. குளிர்பான வரிசையில் புதியவராக உள்ளவர் 2 டி கோலா. உலகத்தில் இல்லாததும் தனக்கு என ஒரு தனியிடம் பிடிக்கிறது. இது கலோரி குறைந்தது, சீனியற்றதுமாகக் காணப்படுகிறது. இனிப்பான குளிர்பானங்களை ருசித்துக் குடிப்பவர்களை ஏக்கத்துடன் பார்க்கும் நீரிழிவு வியாதிக்காரர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யவே 2 டி கோலா அருந்துவதால் வராது என்ற உத்தரவாதத்துடன் இதனை விற்பனைக்கு விடுகிறது உயிர்நுட்பு நிறுவனம். ஆகவே இதனை அருந்தினால் இரத்தத்தில் குளுக்கோஸ்அதிகரிக்காது இருப்பதை மட்டுமல்லாது சிறுநீரில் வெல்லம் வராது. அத்துடன் 2 டி கோலாவில் அழகின் இரகசியமும் அடங்கியுள்ளது.என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

## அவற்றில் ஒன்றுதான் "பயோரெக்"



**வைன்**

நவீன தொழில்நுட்பம் மூலமே வைனை உற்பத்தி செய்கிறார்கள். தொடர்ச்சியான செய்முறையால் தாழ்வெப்பநிலை உருவாக்கப்படுவதால் நறுமணம், சுவை என்றும் இழக்கப்படுவதில்லை. திராட்சைப்பழம் தேங்கி நின்ற காலத்தில் குடாநாட்டுவளம் வீணாகி மண்ணாகிப் போகக்கூடாது என நினைத்து தம்மால் வைன் செய்ய முடியும் எனத் துணிந்து எழுந்தார்களே அதுதான் உயிர்நுட்பின் சிறப்பான சேவை.

**பிரச்சினைகள்**

* குடாநாட்டுமக்கள் வெளிப்பொருள்களை நாட்டம் கொள்ளுதல்.

* ஏ-9 பாதை மூடியமையால் உற்பத்திப் பொருள்கள்குடாநாட்டுக்கு வெளியில் செல்வது வீழ்ச்சியடைந்துள்ளது. தென்னிலங்கை போன்ற பிற இடங்களில் உயிர்நுட்பின் தயாரிப்புகளுக்கு இருந்தும் அவற்றை அனுப்புவதற்கு போக்குவரத்து வசதியின்மை.

சிறுகுறிஞ்சா (நீரிழிவு ரீ) பொதி செய்வதற்கு கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது. முன்னைய காலத்தில் எற்பட்ட செலவிலும் பார்க்க தற்போதைய செலவு மிகவும் கூடுதலாக காணப்படுகின்றது.

காபனீரொட்சைட்டு கொள்கலன் கொழும்பிலிருந்து வருவிக்கப்படுகிறது. இதனை உயிர்நுட்பு தற்பொழுது கூடிய விலையில் பெறுகிறது. ஆனால் சோடாவின் விலையில் பெரியளவில் மாற்றமில்லை. உயிர்நுட்பு சோடா விலையின் இரு மடங்கே வெளிச் சோடாவின் விலை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உயிர்நுட்பு தனது உற்பத்தியை அதிகரிக்கும்போது குடாநாட்டு மக்ளுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. உயிர்நுட்பு தனது தயாரிப்புகளில் சுத்தம், தரம் இவை இரண்டையும் உயிர்போல உயர்நிலையில் காத்து வருகிறது. எத்தனை இடர்கள் வந்த போதும் தனது இலட்சியத்தைக் கைவிடாது தமது உற்பத்திப் பயணங்களை அது தொடர்கிறது.* * * * * * * * * * * * * * * *

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 15



அனுப்புபவர் பெயர்:..........

விலாசம்:..........

..........

கையொப்பம்:..........

**மேலிருந்து கீழ்**

1. தாழ்ந்து போகும்படி ஒருவனைத் தூற்று.
2. படைவீரர்.
3. துப்பாக்கி.
4. சிறுதானியம்.
5. தீமைக்கு எதிரானது.
8. மணம்.
11. இலட்சுமி.
12. புத்தி.
13. சோகத்தின் 'ம்' மைக் காணோமே!
14. தங்கம்.
15. நல்லூரின் சுருக்கம்.
17. மரக்கலம்.
18. தடி.
19. அறிவு.
21. தொன்மையான யுத்த ஆயுதம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 15**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (18.06.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.13 இல் வெற்றிபெற்றோர் விவரம் 22.06.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

**இடமிருந்து வலம்**

1. எல்லாவற்றையும் ஒன்றாக மதிக்கும் பண்பு.
6. மற்றைய.
7. இப்போதெல்லாம் விலை கொடுத்துத் தான் இவனை வாங்குகிறார்கள். ஆனால் கடைசி எழுத்து இல்லாமல் இருக்கிறான்.
8. ஆகாயம்.
9. ஒரு திசை.
10. உணவைத் தயார் செய்.
11. இடமிருந்து வலம் 7 இல் வருபவனுக்குக் கொடுப்பது.
12. வீடு.
14. பொட்டலம்.
16. கணபதி.
19. மண் திரண்டு பல வருடம் உருண்டு இது உருவாகிறது.
20. மாதத்தில் இது நான்கு.
21. குளிகை.
22. படுப்பதற்கு உதவும்.
23. மகள்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 11 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) அமரத்துவம். (5) வைரி. (7) மகம். (9) பண். (10) திணி. (11) பால்மா. (13) கைகேயி. (15) சிவன். (18)வரவு. (19) குசலம் (21)குசன். (22) தும். (23) கைவினை.

**மேலிருந்து கீழ்**
(1)அனுமதி. (2)ரசம். (3) துவையல். (4) வரி. (6)நண்பன். (8)கணிகை. (11) பாயிரம். (12)மாசி. (14) கேவலம். (16) வஞ்சனை. (17)வாகு. (20)சது. (21) குவி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 11 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — *திருமதி இ.செல்வநாயகம், 'சாருஜா' சிவன் கோயில் வீதி, புத்தூர்.*

**2 ஆம் பரிசு** — *செல்வி அஜந்தி வில்வராசசிங்கம், இல.26/1, மத்திய கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு** — *ச.இராகவன், சமுர்த்தி மகா சங்கம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) B.சஞ்சயன், இல.37, ஓடை லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(2) செல்வி சரண்யா பத்மயோகன், 'சிவபதி', 14/1, விதானையார் வீதி, கண்டிக்குளி.

(3) செல்வி ஏ.காசனி, இல. [illegible] அரியாலை.

(4) திருமதி எஸ்.ஏ.ஜி.பத்மதாசன், இல.72, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(5) சி.பத்மயோகன், இல.18, விதானையார் வீதி, கண்டிக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர்களின் உடலியல், உளவியல் வளர்ச்சிகளை மேம்படுத்தும் சூழல் முன்பள்ளிகளில் பிரதானம்

பாலகர்களுக்காக நிலை பெற்றிருக்கும் கல்வியானது அவர்களை மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு வழி வகுப்பதாக இருக்க வேண்டும். முன்பள்ளிக் கல்வி தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள இரண்டரை வயதிலிருந்து ஐந்து வரையான காலம் பாலகரின் பாலகர்களின் வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பருவமாகும். முறைசார் கல்விக்கான அடித்தளம் இப்பருவத்திலேயே இடப்படுகின்றது. அண்மைக்காலத்தில் இப்பருவம் தொடர்பான ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. புதிய கல்வியியற் செயலாற்றுகைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம், அரசு ஆகியோர் புரிந்து இப்பருவ பாலகர்களின் அபிவிருத்தியில் மிகக்கூடுதலான அக்கறை எடுக்க வேண்டியுள்ளது. இத்துறை தொடர்பான விழிப்புணர்ச்சி இன்று எல்லோரிடமும் ஏற்பட்டு வருகின்றது.

இப்பருவ பாலகர்களிடையே உடல் வளர்ச்சி (Physical Development) இயக்க வளர்ச்சி (Motor Development) மனஎழுச்சி வளர்ச்சி (Emotional Development),



குடாநாட்டில் உள்ள முன்பள்ளிகளில் ஒன்றில் பாலகர்களின் அணிநடை.

அறிவு வளர்ச்சி (Intelectual Development), சமூகவளர்ச்சி (Social Development) ஆகிய அனைத்தும் வேகமாக வளர்கின்றன. இவ்வளர்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து விருத்தியாக்கினால் தான் பூரணமான ஆளுமையுடைய பிள்ளைகளையும், எதிர்கால சந்ததிகளையும் உருவாக்க முடியும். இதற்கேற்ற வாய்ப்புக்களையும், சூழ்நிலைகளையும் அளிப்பதில் முன்பள்ளிக்கல்வி பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றது. இவ்வகையில் நவீன முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோளாகப் பின்வருவன உள்ளன.

1. பாலர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருத்தல்.

2. அவர்களிடையே நல்ல பழக்கவழக்கங்களை வளர்த்தல்.

3. பாலகர்களின் முழுமையான வளர்ச்சிக்கான சூழ்நிலைகளையும், ஊக்கலையும் உருவாக்குதல்.

3. மகிழ்ச்சிகரமான கற்றலினூடாக மகிழ்வுடன் வாழும் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

5. அடுத்த கட்ட வளர்ச்சி நிலைகளுக்குத் தயாராக்குதல்.

6. உடல் - உளரீதியில் சுகதேகிகளாக இருக்க வழியமைத்தல்.

7. ஆரோக்கியமான நற்பிரசைகளை உருவாக்குதல். இங்கு ஆரோக்கியம் என்பது உடல் - உள - சமூக - ஆத்மீக நல் நிலைகளில் அடையக் கூடிய அதி உயர் நிலையாகும்.

இப்பருவத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது. இதில் உடலியற் தேவைகளான (Phsyical needs) காற்று, சுத்தமான நீர், சத்துணவு, உறைவிடம், உடை வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளும் உளவியற் தேவைகளான (Phsychological needs) காப்புணர்ச்சி, அன்பும் பாசமும், சுதந்திர உணர்வு, கணிப்பு, சுயஉணர்வுத் தேவைகள், துணிவாகச் செயலாற்றல் என்பவை உள்ளன. இவற்றில் தற்போதைய பாலகர்களிடையே உளவியல் தேவைகளே மேலோங்கி உள்ளதாக அண்மைய துறை சார் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

## அவர்களின் மனவெழுச்சி சீரான முறையில் செயற்பட ஆசிரியர்களிடம் அரவணைக்கும் அன்பு வேண்டும்

இவ்வாறான தேவைகள் மறுக்கப்படும் போது, தடை செய்யப்படும்போது அமைதியின்மை, விரக்தி, மன அழுத்தம், சந்தேகம், குற்ற உணர்வு ஆகியவை ஏற்பட்டு பாலகர்கள் மனநிலை ரீதியாக பாதிப்படையலாம். இன்றைய பெரும்பாலான பாலகர்களுக்கு இத்தேவைகளை உரிய முறையில் வழங்க முடியாத குடும்ப - முன்பள்ளிப் பாடசாலைச் சூழல் உள்ளது. இதைப் போக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன் முன்பள்ளி ஆசிரியர் வளர்ப்புத்தாயாக இருந்து பாலகர்களுக்கு இத் தேவைகளை வழங்குவதுடன் பெற்றோர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு முன்பள்ளிப் பாலகர்களின் தனியாள் வேறுபாடுகளையும் இனம் கண்டு செயலாற்ற வேண்டும்.

### பாலகர்களின் அறிவுத் தாகம்

முன்பள்ளிப்பருவ பாலகர்கள் இயல்பாகவே அறிவுத்தாகம் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆனாலும் அதை அறியாத நிலை மேலோங்கி காணப்படுகின்றது. கல்வி நிலைகளில் அடித்தளமாக முதற்படியாக அமைவது முன்பள்ளிக் கல்வியாகும். அடித்தளம் இல்லாத கட்டடம் எவ்விதம் திறனுள்ளதாக அமைய முடியும். நம் கல்வி முறையில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்குக் காரணம் முறையான முன்பள்ளிக் கல்வி வழங்காத நிலையேயாகும்.

இப்பருவப் பிள்ளைகளின் இயக்க வளர்ச்சியை ஊக்குவிப்பதில் விளையாட்டுக்களும், உபகரணங்களும் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் இப்பாலர்களின் மனவெழுச்சி சீரான முறையில் வளர்வதற்கு ஆசிரியருடைய அரவணைக்கும் செயலாற்றுகை வேண்டப்படுகின்றது. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவும், சீரான முறையில் வெளிப்படுத்தவும் இப்பருவ கற்றல் செய்முறைகள் உதவுகின்றன. உலகளாவிய ரீதியில் நவீன முன்பள்ளியில் பொதுவான நோ[illegible] பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என இத்துறை சார் ஆய்வாளர்கள் எடுத்தியம்புகின்றனர்.

1. இறை வணக்கம் (Prayer Assembly) - பாலர்களில் விழுமிய நம்பிக்கைகளை ஏற்படுத்தல்.

2. ஆரோக்கிய பரிசோதனை (Health Checkup) - உடல் உறுப்புக்களை உற்று நோக்கி கவனித்தல்.

3. சுதந்திர உரையாடல் (Free conversation) - பாலகர்களுடன் அளவளாவி ஆலோசனை வழிகாட்டல் வழங்குதல்.

4. வெளிவிளையாட்டுக்கள் - (Out door play) - ஓடி, ஆடி தசை நார் பயிற்சிக்கான விளையாட்டுக்கள்.

5. கை, கால், சுத்தமும் கழிவிடத்துக்குச் செல்லும் - (Toilet and wash) - உரிய சுத்தமான பழக்கவழக்கங்கள் பெறல்.

6. கதை சொல்லுதல் - (Story Telling) - கதை மூலம் கற்றல்.

7. பாடல்கள் - (Rhymes) - பாடல்கள் பாடி இசையும் அசைவும்.

8. ஆக்கச்செயல்கள் - (Creative Activities) - விரல்பயிற்சி, வெட்டுதல், கிழித்தல், ஒட்டுதல், வர்ணம்பூசுதல்.

9. ஆயத்தச் செயல்கள் - (Readiness Activities) - மொழி, எண் சுற்றாடல் எண்ணக்கருக்களை கற்பதற்கான ஆயத்தம்.

10. வருகையும் வீட்டுக்குத் திரும்பலும் (Arrival and Departure)

### ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்

இவ்வாறான விடயங்கள் நெகிழ்ச்சியுடையதாக நாளாந்தம் பல்வேறு செயன்முறைகளுக்கு ஆசிரியரால் உள்ளாக்கப்படுகின்ற போது இப் பருவ பாலர்களின் அறிவுத்தாகம் விருத்தியடையும். வாராந்தம், தவணை, வருடம் என்ற வகையில் சூழல் நிலைமைகளை அனுசரித்துப் பாடத் திட்டங்களை முற்கூட்டியே தயாரிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட



மகிழ்வுடன் விளையாடும் முன்பள்ளிச் சிறார்கள்.

## பெற்றோர்களின் விழிப்புணர்வுக்கு முக்கிய பங்கு

வேண்டியுள்ளது. மேலும் சுற்றாடல் சுற்றுலா, கல்விச்சுற்றுலா, களவேலைகள், ஆக்க சக்தியைக் கலைகள் மூலமாகப் பெறுதல், பெற்றார்களுடன் இணைந்து வெளிப்பயணங்களை (Fields trips) ஒழுங்குபடுத்தி அனுபவங்களை வழங்குதல் வாயிலாக முன்பள்ளிப் பாலகர்களின் தேர்ச்சிகளை விருத்தியாக்கலாம்.

குழந்தை இலக்கியங்கள் மூலமாகவும் பல்வேறு கற்றல் சாதனங்கள் மூலமாகவும் விஞ்ஞான அனுபவங்களை (Science Experience) வழங்கி பாலர்களின் ஆராய்வு, கண்டுபிடிக்கும் ஊக்கத்தை விருத்தியாக்க வேண்டும். மற்றும் முன்பள்ளி விழாக்களை (Festivals in pre schools) நடத்துவதன் மூலம் பாலர்களின் சமூகமயமாதல் செயன்முறையை விருத்தியடையச் செய்யலாம். அதிலும் சமய விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், தேசியவிழாக்கள் என்ற வகையிலும் போட்டிகளாக அல்லாத விளையாட்டு விழாக்களை நவீன உளவியல் அடிப்படைகளில் நடாத்தி பாலர்களின் ஆளுமையைச் சிறந்த முறையில் விருத்தியாக்கலாம்.

### பெற்றார் கல்வி

இன்றைய நவீன முன்பள்ளி கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பெற்றார்களுக்கான கல்வி (Parent Education) மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. பெற்றார்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் இணைந்து செயலாற்றுவதன் மூலம் முன்பள்ளிக் கல்வியின் நோக்கம் நிறைவேறும். பெரும்பாலான படித்த, படிக்காத பெற்றோர்களுக்கு முன்பள்ளிக்கல்வி தொடர்பான விழிப் புணர்வு போதாமல் உள்ளது. எனவே பெற்றோர்களை முன்பள்ளிப் பாடசாலைகளுடன் இணைத்து பல செயலமர்வுகளையும், விழிப்புணர்வுச் செயற்திட்டங்களையும் முறையாக மேற்கொள் வேண்டியிருக்கின்றது.



பா. தனபாலன் - உபபீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

முன்பள்ளிப்பாலகர்கள் இன்றைய கால சமூகப் பண்பாட்டுச் சூழலில் பல பாதிப்புக்களுக்கும் தாக்கங்களுக்கும் உட்பட்டுக் காணப்படுகின்றார்கள். இதனால் குழந்தைகளிடையே பல பிரச்சினைகள் எழுகின்றன. பிரிவுத்துயர், பொறாமை, கவலை, பயம், சினம், எதிர்மனப்பான்மை, பொருந்தா மனவெழுச்சி உணர்வுகளை வெளியேற்றும் பாலகர்களது குடும்பநிலை, பெற்றோர் பிரிவு, பெற்றோர் மது அருந்துதல் புரிந்துணர்வற்ற குடும்பநிலை என்பவற்றின் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை மீட்க பெற்றோர்களுக்கான கல்வியும், வழிகாட்டல் ஆலோசனையும் மிக அவசியமாகவுள்ளது. இதற்குப் பெற்றோர்களுக்கான கூட்டம், குழு விவாதம், குழுச்சமர்ப்பிப்புக்கள், மனம் திறந்த கலந்துரையாடல்கள், செயலமர்வுகள், ஒளி, ஒலி உபகரணங்கள் மூலமான விழிப்புணர்வுகள் தேவையாகவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நோயின் பிந்திய நிலையில் கிசிச்சைக்குச் சென்றால் அதனைக் கட்டுப்படுத்துதல் கஷ்டமாகி மரணம் வரலாம்

உண்ணிக் காய்ச்சல் குறித்து அறிந்துகொள்ளுங்கள் 03

நோயின் குணங்குறிகள்

• உண்ணிக் காய்ச்சலின் நோயரும்பு காலம 6-20 நாள்களாகும். (சராசரி 10-12 நாள்கள்) அதாவது கிருமி தொற்றியதிலிருந்து நோய்க்குரிய குணங்குறிகள் தோன்ற எடுக்கும் காலமாகும்.

• இவ் நோயரும்பு காலப்பகுதிக்குள், நோய்த் தொற்றிற்குள்ளானோரில் 60% ஆனோரில், உண்ணி கடித்த இடத்தில் 'எஸ்கார்' (Eschar) உருவாகும்.



•'எஸ்கார்' என்பது சிகரெட்டினால் சுட்ட அடையாளம்போன்றதொரு காயமாகும்.

• ஆரம்பத்தில் சராசரியாக 1cm விட்டமுடைய சிவப்புத் தடிப்பாகக் காணப்பட்டு கொப்புளமாக மாறி (Vesiculation), உடைந்து, நாளடைவில் கறுப்பு நிறமான பொருக்கால் (Scab) இக்காயம் மூடப்படும்

• அத்துடன் இவ்விடத்தைச் சுற்றியுள்ள நிணநீர்க் கணுக்கள் வீக்கமடைந்து வலியைக் கொடுக்கும்.

•'எஸ்கார்' பொதுவாக்க் காணப்படும் இடங்கள்
- தோல் மடிப்புகள் {உ+ம் - கமக்கட்டுப் பகுதி மடிப்புகள் (Axillary folds)}
- கைகள், கால்கள்

• நோயரும்பு கால முடிவில் பின்வரும குணங்குறிகள் திடீரென வெளிப்படுத்தப்படும்
- காய்ச்சல்
- தலையிடி
- தசை உளைவு (Myalgia)
- சோம்பல் தன்மை (Lethargy)
- இயலாமை (Weakness)
- இருமல்

காய்ச்சல்

• விட்டு விட்டுக் குறைகின்ற (Remittent) காய்ச்சலாகும்

• முதல் வாரத்தில் மிக உயர்வாகக் காணப்படும் (104°F – 105°F)

தலையிடி

• கண்ணிற்குப் பின்புறமாக (Retro orbital) வலிப்பதுடன் மிகவும் கடுமையானதாக இருக்

சொறி (Rash)

• இது மிகவும் அரிதாகவே ஏற்படும்.

• காய்ச்சல் ஏற்பட்டதிலிருந்து 5-7 நாள்களுள், தோலில் ஒருவகையான (Maculo papular rash) சிவந்த சொறி உருவாகலாம்.

• இது உடலின் நடுப்பகுதியில் (முகம், நெஞ்சுப் பகுதி) ஆரம்பித்து, கால் கைகளுக்குப் பரவி, உள்ளங்கை, உள்ளங்கால்களையும் உள்ளடக்கும்.

• ஆனால் இது அநேகமான வேளையில் கண்ணிற்குப் புலப்படாது

• இதன்போது, உடலில் உள்ள சகல நிணநீர்க் கணுக்களும் வீங்கிக் காணப்படும்.

•முதல் வாரத்தில் காய்ச்சலுடன் ஆரம்பிக்கும் இருமல் பின்பு நுரையீரல் அழற்சியாகவும் (Pneumonia) மாறலாம்.

• மிகவும் கடுமையான நோய்த் தொற்றின் போது மாறாட்டம், இருதய மற்றும் சிறுநீரக செயலிழப்பு என்பன ஏற்படலாம்.

• இதைத்தவிர நோயாளர்களில் மூன்றில் ஒரு ($^1/_3$) பங்கினரில் கேட்டல்திறன் குறைந்திருந்தமை (Deafness) கண்டறியப்பட்டுள்ளது.

நோயாளியைப் பரிசோதிக்கும் போது,

•இருதயத் துடிப்பு அதிகரித்தும், குருதி அமுக்கம் குறைந்தும் இருக்கும்

• கல்லீரல் பெருத்துக் காணப்படும் (Splenomegaly)

•சுவாசவீதம் அதிகரித்து நோயாளி சுவாசிக்கச் சிரமப்படலாம்

இதனைத் தவிர, மிக அரிதாக இந்நோய் நிலைமையானது வலிப்பு மற்றும் சுய நினைவற்ற நிலைக்கு (Coma) இட்டுச் சென்று இறப்பில் முடிவடையலாம்.

அடுத்து, உண்ணிக் காய்ச்சல் நோய் எவ்வாறு கண்டறியப்படுகிறது என்று பார்ப்போம்.

நோயைக் கண்டறிதல்

சாதாரணமாக ஒரு நோயைக் கண்டறிவதாயின் நோயாளியின் நோய் நிலையையும், ஆயவுகூட பரிசோதனைகளும் கருத்திற் கொளளப்படும்.

எனினும் யாழ்ப்பாணத்தில், போதிய ஆய்வுகூட வசதிகள் இன்மையால், உண்ணிக் காய்ச

## இந்த நோயைக் கண்டறியக் குடாநாட்டில் போதிய ஆய்வுகூட வசதிகள் இல்லை!

சலானது பெரும்பாலும் நோயாளியில் நோயின் குணங்குறிகளை அவதானிப்பதன் மூலமாகவே கண்டறியப்படுகிறது (Clinical diag nosis).

முதலாவதாக, நோயாளியிடம் பின்வருவனவற்றைக் கேட்டறிவது நோயைக் கண்டறிவதற்கு உதவும். நோயாளி, அண்மைக் காலத்தில் நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு (Endemic area) பயணம் மேற்கொண்டிருந்தாரா எனவும், அவருடைய தொழில், உண்ணிகள் செறிந்து வாழும் சிறிய காட்டுப் பகுதிகளுடன் தொடர்புடையதா எனவும் கேட்டறிதல் வேண்டும்.

அடுத்ததாக, நோயாளியின் உடம்பில் காணப்படும் 'எஸ்கார்' (Eschar) எனப்படும் அடையாளம், பாலுண்ணி கடித்ததற்கான சான்றாகும். எனவே 'எஸ்கார்' காணப்படுகிறதா, எனப் பரிசோதித்து அறிய வேண்டும்.

இவற்றைத் தவிர, கொழும்பு போன்ற இலங்கையின் பிற பாகங்களில் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மூலமும் நோயானது கண்டறியப்படுகிறது. அவையாவன 'வேல்(f)பீலிக்ஸ்' பரிசோதனை (Weil-Felix test) மற்றும் எலைசா (ELISA) என்பனவாகும்.

'வேல்(f)பீலிக்ஸ்' பரிசோதனையானது குருதியிலுள்ள நோய்க்குரிய பிறபொருளெதிரியைக் கண்டறியச் செய்யப்படும் பரிசோதனையாகும். எனினும் இது உண்ணிக் காய்ச்சலுக்கு மட்டுமின்றி, எல்லா வகையான றிக்கெட்சிய நோய்களுக்கும் சாதகமான முடிவுகளைத் தருவதால், உண்ணிக் காய்ச்சலுக்கு தனித்துவமற்றதாகும் (Non specific).

அடுத்து 'எலைசா' பரிசோதனை மூலம் உண்ணிக் காய்ச்சலைக் கண்டறியலாம். இது உணணிக் காய்ச்சலுக்குத் தனித்துவமானது (Specific).

இவ்வாறு மேற்குறிப்பிடப்பட்ட பல்வேறு முறைகளால் கண்டறியப்பட்ட உண்ணிக் காய்ச் சல் நோயை முற்றாக குணப்படுத்த முடியுமா, அவ்வாறு முடியுமெனில் எவ்வாறு என இனிப் பார்ப்போம்.

சிகிச்சை முறை

உணணிக் காய்ச்சலானது, நுண்ணுயிர் கொல்லி (Antibiotic) மருந்துகளின் கண்டுபிடிப்பிற்கு முன்பு, மிகவும் பயங்கரமான நோயாகக் கருதப்பட்டது. அண்ணளவாக ஐம்பது சதவீதமாக (50%) இந்நோய்க்குரிய மரணவீதம் காணப்பட்டது.

ஆனால் தற்பொழுது நுண்ணுயிர்கொல்லிப் பாவனையால் மரணவீதம் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. எனினும் வட தாய்வானில் இவ்வீதம் உயர்வாகவே காணப்படுகிறது. இதற்குரிய காரணங்களாக, நோயன் பிந்திய நிலையில் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படல், நோய் காலம் தாழ்த்திக் கண்டறியப்படல் மற்றும் நுண்ணியிர் கொல்லிக்கு எதிர்ப்பைக் (Drug resistance) காட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனினும் அதிஷ்டவசமாக இலங்கையில் உணணிக் காய்ச்சலை நுண்ணியிர் கொல்லிகளால் நன்றாகக் கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

• நுண்ணியிர் கொல்லியாக பொதுவாக 'டொக்சிசைகிளின்' (Doxycyclinc) பயன்படுத்தப்படும்

•அல்லது இதற்குப் பதிலாக 'டெட்ராசைகிளின்' (Tetracycline) ஐயும் பயன்படுத்தலாம்.

• மிகவும் கடுமையாக நோயால் பாதிக்கப்பட்டோருக்கு மேற்குறிப்பிட்ட மருந்துகள் நாளதத்தின் வழியாக (Intravenous) உடலினுள் செலுத்தப்படும்.

• சிறுவர்களுக்கு 'குளோரம்பெனிக் கோல்' (Chloramphenical) நுண்ணுயிர்கொல்லி, அவர்களின் உடல் நிறைக்கேற்ப கணிக்கப்பட்டு வழங்கப்படும்.

• இதைத் தவிர சிகிச்சையின் போது, நோயாளியின் உடலின் நீர்ச்சமநிலையைப் பேணும் வகையில் நாளத்தின் வழியே திரவங்களும் ஏற்றப்படும் (Intravenous fluid).

• மேலும் உடல் வலியைக் குறைப்பதற்கும் மருந்துகள் வழங்கப்படும் (Pain Relief)

இங்கு குறிப்பிடப்பட்ட பல்வேறு சிகிச்சைகள் மூலமாகவும் மருத்துவ ஆலோசனைகளிற்கூடாகவும் உண்ணிக் காய்ச்சலில் இருந்து முற்றாக குணப்பட முடியும். *(வளரும்)*

யாழினி கனகரத்தினம்
நான்காம் வருடம், யாழ்.மருத்துவபீடம்.

---

# 85 வயதிலும் குறுக்கெழுத்து போட்டிகள் தயாரிக்கும் பார்பரா அம்மையார்

*மூளையை துடிப்புடன் செயற்பட வைத்திருக்க வேண்டுமானால் மனதை எப்போதும் பயிற்சியில் வைத்திருக்க வேண்டும். இதற்கு உதாரணமாகத் திகழ்கிறார் பார்பரா ஹெறால்.*

*இந்த அம்மையாருக்கு 85 வயது - கடந்த 70 வருடங்களுக்கு மேலாக குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தயாரித்து விற்று வருகின்றார்.*



*1938ஆம் ஆண்டு பார்பராவுக்கு 15 வயதாக இருக்கும் போது தமது முதலாவது குறுக்கெழுத்துப் போட்டியைத் தயாரித்து விற்றார் - அந்த ஆண்டில் தான் நெவில் சேம்பர்லேன் - அடோல்ப் ஹிட்லரைச் சந்தித்துப் பேசியிருந்தார். சவூதி அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டதும் அந்த ஆண்டில்தான்.*

*70 வருடங்கள் பார்பரா குறுக்கெழுத்துத் துறையில் இடைவிடாமல் ஈடுபட்டு வந்துள்ளார். 85 வயதில் கடந்த மார்ச் மாதம் தமது பிறந்த நாளைக் கொண்டாடிய பார்பரா லண்டன் சென்.பென்க்ராஸ் ரயில் நிலையத்துக்கும் 490 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கார்ல்ஸி ரயில் நிலையத்துக்குமிடையிலுள்ள ரயில் நிலையங்களின் பெயர்களை வரிசைப்படி மிகச்சரியாக ஒப்புவித்து நண்பர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர். இந்த நிலையங்களின் பெயர்களை ஒரு பரீட்சைக்காக சிறுவயதில் பாடமாக்கியிருந்தாராம். கடந்த 60 வருடங்களாக நினைத்துக் கூட பார்த்ததில்லை.*

*"மூளை ஒருவிசித்திரமான பொருள். ஞாபக சக்தியில் எவ்வளவோ விடயங்களை தேக்கி வைத்துக் கொள்ள முடிகிறது. அதனால்தான் ஆய்ஷமர் (வயதானவர்களுக்கு வரும் ஞாபகமறதி) எனக்கு வந்து விடாமல் தடுக்க அவ்வப்போது ஏதாகிலும் வேலை செய்து கொண்டே இருக்கிறேன்" என்று கூறுகிறார் பார்பரா.*

*'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு ஒரு குயுக்தி அம்சம் அவுஸ்திரேலிய வாரப்பத்திரிகையொன்றுக்கு இன்னொரு சொற்சிலம்பம் மற்றும் சில சஞ்சிகைகளுக்கு குறுக்கெழுத்து போட்டிகள் என்று வாரத்தில் நான்கு நாள்கள் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார். பிறகு அவைகளை மெருகுபடுத்தி அனுப்பிவிடுகிறார்.*

*குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்பாக சிந்திப்பதும் எழுதுவதும் அவரது வாழ்க்கையின் முக்கிய அம்சமாக இருந்து வந்துள்ளது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது இராணுவத்துடன் தொடர்புடைய துறையிலும், ஆபிரிக்காவில் பத்திரிகை நடத்திவந்த கணவருக்கு உதவுவதிலும், தாய்வானில் ஷியாங்கேஷேக்கின் செயற்பாடுகள் தொடர்பாக செய்தி சேகரிப்பதிலும் ஈடுபட்டு வந்துள்ள இவர் தனது குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான விடயங்களை இந்த அனுபவங்களிலிருந்து சேகரித்துக் கொண்டுள்ளார். அவர் தாயாரிக்கும் போட்டிகள் 12 நாடுகளில் பிரசுரமாகின்றன. இப்பொழுது தனிமையில் வாழும் அவர் லண்டனில் உள்ள 'ரைம்ஸ்' காரியாலயத்துக்குத் தாமே காரை ஓட்டிக் கொண்டு போகிறார். வேலையிலிருந்து இப்போதைக்கு ஒய்வுபெறும் நோக்கமில்லை.*

*1938ஆம் ஆண்டு அவர் தயாரித்த முதல் குறுக்கெழுத்துப் போட்டியில் லண்டன் மாலை பத்திரிகையொன்றின் 2 கினி சன்மானமாகக் கிடைத்தது. அப்பொழுது 15 வயது. தொடர்ந்து ஈடுபடுவதற்கு ஊக்கம் பிறந்தது. அம்மா உதவிசெய்தார் - அதிகமாக வாசித்தேன் - ஞாபகசக்தியை வளர்த்துக் கொண்டேன், புத்தகப் பிரிவிற்கு வரும் அன்பர்கள் அதை யார் எழுதினார், இதையார் எழுதினார் என்று கேட்கும்போது மிக மகிழ்ச்சியுடன் விடை கூற முடிகிறது - என்கிறார். (நன்றி: CPO)*

---

# மருத்துவ உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள ஆஸ்திரேலியத் தமிழ் 'அதிசயக் குழந்தை' துர்க்கா

ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கைத் தமிழ்ப் பெண்ணொருவருக்கு அதிசயக் குழந்தை பிறந்துள்ளது.

முழுக் காலத்திலும் கர்ப்பப்பைக்கு வெளியிலேயே வளர்ந்து இக் குழந்தை பிறந்துள்ளமை மருத்துவ உலகையே பெரும் ஆச்சரியத்துக்குட்படுத்தியுள்ளதுடன் இவ்வாறானதொரு குழந்தை பிறப்பு உலகில் இதுவே முதல் தடவையெனவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ரவி தங்கராஜா மீரா தம்பதியர் ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு காயத்ரி என்ற 6 வயது மகள் உள்ளார். இந்நிலையில் மீண்டும் மீரா கர்ப்பம் அடைந்தார். நிறை

## கருப்பைக்கு வெளியே குழந்தை வளர்ந்து பிறந்தது உலகில் முதல் தடவை என்கிறார்கள் மருத்துவர்கள்

மாதக் கர்ப்பிணியாக இருந்த அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதால், ஆஸ்திரேலியாவில் டார்வின் நகரில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் பிரசவத்துக்காகச் சேர்த்தனர்.

அங்கு அவருக்கு மகப்பேறு டாக்டர்கள் சத்திரசிகிச்சை மூலம் குழந்தையை எடுக்கத் தயாரானார்கள். அப்போது மீராவின் வயிற்றில் கண்ட காட்சி, டாக்டர்களைத் திடுக்கிட வைத்தது. குழந்தை, கர்ப்பப்பையில் இருப்பதற்குப் பதிலாக, அதற்கு வெளியே உள்ள சினைப்பையில் இருந்தது.

ஒரு சிலருக்கு இப்படி சினைப்பையில் கரு உருவாகியிருந்தாலும், அதை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து, அந்தக் கருவை அழித்து விடுவார்கள். ஏனென்றால், கர்ப்பப்பைக்கு வெளியே கரு வளர்ந்து பெரிதானால், அது தாய்க்கும், சேய்க்கும் உயிருக்கு ஆபத்தாக முடிந்துவிடும்.

ஆனால், மீராவுக்கோ, முழு கர்ப்ப காலத்திலும் கர்ப்பப்பைக்கு வெளியிலேயே கரு வளர்ந்து குழந்தையாக உருவெடுத்துள்ளது. அது உயிருடனும் பிறந்து டாக்டர்களை ஆச்சரியப்பட வைத்துள்ளது. இப்படி நடப்பது உலகிலேயே இதுதான் முதல் முறை என்று கருதப்படுகிறது. இதனால் அந்தப் பெண் குழந்தையை அதிசயக் குழந்தை என்று டாக்டர்கள் வர்ணிக்கிறார்கள். அந்தக் குழந்தைக்கு "துர்க்கா" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பெண்ணின் சினைப்பை உற்பத்தி செய்யும் கரு முட்டையுடன், ஆணின் உயிரணு இணைந்து கரு உண்டாகும். இந்தக் கரு, கருக்குழாய் வழியாக பயணம் செய்து கர்ப்பப்பையை அடைந்து குழந்தையாக வளரும். இதுதான் இயல்பான நடைமுறை. ஆனால் மீராவுக்கோ கரு, கருக்குழாய் வழியாகக் கர்ப்பப்பைக்குச் செல்லாமல், சினைப்பையிலேயே தங்கி குழந்தையாக வளர்ந்துவிட்டது.

மீராவுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர் அன்ட்ரூ மில்லர் கூறியதாவது:

சினைப்பையின் வலப்புறத்தில் குழந்தையைப் பார்த்தவுடன் என்னால் நம்ப முடியவில்லை. சினைப்பையின் தோல் மெல்லியதாக இருந்ததால் உள்ளே இருந்த குழந்தையின் தலை முடியையும், முகத் தோற்றத்தையும் என்னால் பார்க்க முடிந்தது. குழந்தை வளரும்போது சினைப்பை கிழியும் அபாயம் உள்ளது. எந்த நேரமும் சினைப்பை கிழிந்து, அதனால் தாய்க்கும், சேய்க்கும் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் மீராவுக்கு அப்படி நடக்கவில்லை. அவர் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி. இன்னும் சொல்லப் போனால், அவருக்கு கர்ப்பப்பைக்கு வெளியே குழந்தை வளர்வதை ஆரம்பத்திலேயே கண்டிருந்தால், அதை கலைக்கச் சொல்லியிருப்போம் ஆனால், அப்படி நடக்காமல், அவர் நன்றாக குழந்தையைப் பெற்றுள்ளார். இது மருத்துவ உலகிலேயே ஓர் அதிசய சம்பவம். இப்படி ஒரு சம்பவத்தை இதற்கு முன்பு நான் கேள்விப்பட்டது கூடக் கிடையாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் துரையப்பா வைத்திலிங்கம் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களில் மூன்றாவது சந்ததியைச் சேர்ந்தவர். சிறுகதைகள் மட்டுமன்றி நாவல்கள், குறுநாவல்கள் என்று நிறையவே எழுதியுள்ளார். மூன்று தசாப்தங்களாகத் தமது எழுத்துத் திறமையைக் காண்பித்துள்ளார்.

மிகக் குறிப்பாக, பின்தங்கிய கிராமப்புறங்களில் அரச நிர்வாகப் பதவிகள் வகித்த காலத்தில் சமூகத்தின் நிலைகண்டு குமுறும் நெஞ்சுடன் பல கதைகளைப் படைத்தவர். அவரது எழுத்து நடை, தான் சொல்ல விரும்பியதை ஆற்றொழுக்காக வாசகர்களைக் களைப் படைய வைக்காது தெளிந்த நீரோடையிலிருந்து அள்ளிப் பருக வைப்பதாக இருக்கும்.

நிறைய வாசித்ததால் எழுத வேண்டும் என்ற ஆவல் பிறந்ததாக அவர் சொல்வார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகளே தமக்கு இலக்கியத் தாகத்தை ஊட்டியவர்கள் என்றும் கூறுவார்.

வீரகேசரி, சுதந்திரன், ஈழநாடு, சஞ்சீவி, சிரித்திரன் ஆகிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளி வந்துள்ளன. ''மண்ணின் கனவுகள்'' என்ற இவரது சிறுகதைத் தொகுதி யாழ். இலக்கிய வட்டத்தினரால் 1994 இல் வெளியிடப்பட்டது.''பூம்பனிமலர்கள்'', ''மண்ணின் குழந்தைகள்'' ஆகிய நாவல்களைப் படைத்தவர். இவரது ''ஒரு திட்டம் மூடப்படுகிறது'' என்ற குறுநாவல் பிரசித்தமானது. உதயனின் வார இதழ் சஞ்சீவியில் 1986 ஆண்டில் இருமாதக் குறுநாவல் வரிசையில் வெளிவந்த ''சிறைப்பறவை'' பலராலும் பாராட்டப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க அதிபராக அரச நிர்வாகச் சேவையில் பணிபுரிந்த து.வைத்திலிங்கம் தமது 69 ஆவது வயதில் கடந்தமாத இறுதியில் இயற்கை எய்தினார்.

அவரது எழுத்துப்பணியைக் கௌரவித்து அஞ்சலி செலுத்தும் வகையில் இன்றைய உதயன் ஞாயிறு இதழில் ''ஆலடி வயிரவர்'' சிறுகதையை மறுபிரசுரம் செய்கின்றோம்.

-ஆசிரியர்.

# ஆலடி வயிரவர்

ஆலமரத்து இலைகள் சலசலத்து அசைகின்றன. காற்றின் அசைப்பிற்கு ஈடுகொடுக்க முடியாத பழுத்த இலைகள், வயிரவ கோயில் கூரையில் விழுகின்றன. ஆலமரத்தின் கீழ் எவனோ ஒரு பக்தன் நாட்டி விட்ட வயிரவ சூலத்தினை மழை வெய்யிலில் இருந்து காப்பாற்றுவதற்காக கடைக்கார மாணிக்கத்தார் ஓலையால் சிறு கொட்டில் போட்டு விட்டிருந்தார்.

யார் யாரைக் காப்பாற்றுவது.....?

அக்கொட்டிலின் ஓரமாக அதோ அவர் நிற்கின்றார். எவ்வளவு கம்பீரம்.....? கறுத்த அந்த உடலின் முறுக்கும்..... நிமிர்ந்த நோக்கும்...... அப்பப்பா, அவர்தான் எவ்வளவு அழகு?

கொழும்பில் நான் கண்ட எத்தனையோ ஆள்களில் காணாத பேரழகு அல்லவா இவர் மேனியில் கொலு வீற்றிருக்கின்றது!

வாலை மெதுவாக அசைத்து உடலையும் மெதுவாக அசைத்து என்னைப் பார்க்கின்ற அவர் விழிகளில்தான் எத்தனை ஆர்வம்; எத்தனை ஆசை.

நான் அவரை சில நாள்களாகப் பார்த்து வருகின்றேன். அவர் என்னை இன்றுதான் கவனித்திருக்கிறார் போலும். அவரிடம் ஓடி விடவே என் உள்ளம் விரும்புகின்றது.

ஆனால்......

மெதுவாக என்னை நாடி அவர் நடந்து வருகின்றார். என் உடல் நடுங்குகின்றது. அவருக்கும் எனக்கும் இடையே நீண்ட மதிலும் இரும்புக் கேற்றும் உள்ளன.

அவரை வைத்த விழி எடுக்காமல் பார்க்கின்றேன்.

'நீ மிக அழகாக இருக்கிறாய்! நீ யார்? இவ்வளவு காலமும் எங்கு இருந்தாய்?

அவர்தான் கேட்கின்றார்.

எவ்வளவு துணிச்சல்! இந்த யாழ்ப்பாணத்து ஆண்களுக்கு துணிச்சல் அதிகம் தான்...... ஆனால்........

என்னால் பேசமுடியவில்லை. வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்கிறது.

'ஏன் வெட்கப்படுகிறாய்? நாய்களுக்கு வெட்கம் ஏன்?'

'நாய்களுக்கு இருக்கக் கூடாதோ?'

'ஓ... நீ ஊமையல்ல!'

'போங்கள் ... நீங்கள் யார் என்று சொல்லுங்களேன்' என்று கேட்டபடி அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவரும் என்னையே பார்க்கிறார்.

'என் பெயர் வயிரவன். ஆலடிதான் என் இருப்பிடம். புத்தி தெரிந்த நாள் முதலாக இங்குதான் இருக்கிறேன்!'

'ஆலடிவயிரவர்.... நல்ல பெயர்! என் பெயர் ரோஸி... கொழும்பில் இருந்தனான். இங்கு வந்து ஐந்தாறு நாள்தான்!

'ரோஸி! ரோஸி!' என்றார் அவர்.

'இங்காலை வந்துவிடேன்'

-அவர் கண்களில் ஆசை சதிராடியது.

'எப்படி வாறது? நீங்கள் வாருங்களேன்!'

'நானும் எப்படி வாறது?'

வழி தெரியாது திகைத்து நிற்கின்றோம். அவர் நிலையைக் காண எனக்குப் பரிதாபமாக இருந்தது. கேற் நீக்கலூடாக அவர் முகத்தை நக்கி விட்டேன்.

'ரோஸி! ரோஸி!' என்னை வீட்டில் யாரோ கூப்பிடுகிறார்கள். அக்காதான்; புவனம் அக்கா எப்பவும் இப்படித்தான்..... ஒரு... இது.... தெரியாத அக்கா....!

'நான் வாறன்.... வீட்டை கூப்பிடுகினம்.... நீங்கள் போங்கோ.... பிறகு வாறன்....' என்று வீட்டுக்குள் பாய்ந்து ஓடினேன்.

இருள் சூழ்ந்துவிட்டது. அவரை என்னால் மறக்கவே முடியவில்லை. 'ஆலடி வயிரவர்.... ஆலடிவயிரவர்!.....' என்று என் பெண் மனம் அவரையே சுற்றிச் சுற்றி வந்தது. இருப்புக் கொள்ளாது கேற்றடிக்கும் திண்ணைக்கும் அலைந்தேன். ஆலடியில் அவர் கேற்றடியைப் பார்த்தபடி நிற்பதை என்னால் காண முடிந்தது. (10 ஆம் பக்கம் பார்க்க)

மரம் என்கிறோம்
தனியாக நிற்பதால்!
சோலை என்கிறோம்
சேர்ந்து நிற்பதால்!!

★★★

ஒருசதம் என்பதேன்?
தனியே இருப்பதால்!
ஒருரூபா என்பதேன்?
நூறு சேர்ந்ததால்!!

★★★

எழுத்து என்கிறோம்
தனித்துள்ள வரையில்!
சொல்லு என்கிறோம்
கருத்துடன் இணைகையில்!!

★★★

தனித்துள்ள வரையில்
அதன் பெயர் வசனம்!
இசையுடன் இசைக்கையில்
அதன்பெயர் கீதம்!!

★★★

தீயினில் இடும்வரை
சாணம் என்பார்கள்!
தீயினில் நீறியபின்
விபூதி என்பார்கள்!!

★★★

பிரையிடும் வரையில்
அதுவே பசும்பால்!
பிரையிட்ட மறுநாள்
அதுவே தயிராம்!!

★★★

பெட்டியில் உள்ளபோது
பணம் என்பார்கள்!
மணமகனுக்குத் தரும்போது
சீதனம் என்பார்கள்!!

முருகு

# பெண்களுக்காகப் பரிந்து பேசும் ஆண்கள்; அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?

மேன்மக்கள் அனைவருமே பெண்மையை மதிப்பவர்கள். பெண்மையை மதிப்பவர்கள் அனைவரும் மேன்மக்களே.

மேன்மக்கள் அன்புகாட்டி பெண்களை அடிமை கொள்ளமாட்டார்கள்; மாறாக, பெண்களுக்குச் சுதந்திரம் கொடுத்து அவர்கள் முன்னேறுவதையே விரும்புவார்கள்.

உண்மையிலேயே பெண்மைக்கு மரியாதை செய்தல் என்பது என்ன?

பெண்மைக்கு ஆதாரமாயுள்ள தெய்வீக சக்தியைப் புரிந்துகொண்டு அதை வணங்குதலே அல்லவா அதற்குரிய சரியான மரியாதை!

இதோ, இந்தச் சம்பவம் அதை நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இந்து மதத்தைப் பிரசாரம் செய்து கொண்டிருந்த காலகட்டம்.

எந்த நேரமும் அவரைச் சுற்றி ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டிருந்த ஆண், பெண் இளைஞர் கூட்டம் கூடியிருக்கும்.

அவர்களுடைய ஆன்மிக ஆற்றலை உணர்த்தவே சமயத்தில் சுவாமிஜி அவர்களுடன் ஒரு தாயின் அன்போடும் இருப்பார். சமயத்தில் தந்தையின் கண்டிப்போடும், சில நேரங்களில் நண்பனின் குதூகலத்தோடும் அந்த வெளிநாட்டுச் சீடர்களுக்கு வேதாந்தத்தைப் போதித்தார்.

சுவாமிஜி சிலநேரங்களில் தம் சீடர்களுடன் சேர்ந்து இயற்கை எழில்கொஞ்சும் இடங்களை நாடி செல்லத் தொடங்குவார். அன்றும் அதே போல் சுவாமிஜி தமது சிஷ்யைகளான சகோதரி கிறிஸ்டைன் மற்றும் வேறு சிலருடன் ஒரு மலை மீது ஏறிக்கொண்டிருந்தார்.

சுற்றிலும் லேசாகப் பனி படர்ந்திருந்தது. சுவாமிஜி செங்குத்தான பாறைகளைத் தாண்டி மின்னல் வேகத்தில் மலையுச்சியை நோக்கி ஏறிக்கொண்டிருந்தார்.

ஆனால் அவருடைய சிஷ்யைகளுக்கு மலையேறுவது அவ்வளவு எளிதாக இல்லை.

மலையின் ஈரத்தில் அவர்களின் பாதங்கள் வழுக்கின. அங்கிருந்து விழுந்தால் அதோ கதிதான். ஆதலால் அவர்கள் தைரியமில்லாமல் மிகவும் சிரமப்பட்டு மலையேறினார்கள்.

சுவாமிஜி இவற்றையெல்லாம் பார்த்தாலும் அந்தப் பெண்களுக்கு அவர் எந்த உதவியும் செய்ய முன்வரவில்லை.

அது அந்தப் பெண்களுக்கு மிகுந்த மன வருத்தத்தை தந்தது. சுவாமிஜி என்ன ஈவிரக்கம் அற்றவரா?

மலையுச்சியை அடைந்தவுடன் அந்தச் சிஷ்யைகள் தங்கள் மனத் தாங்கலை குருவிடம் வெளியிட்டார்கள்.

**பெண்கள் பலவீனர்களா?**

பெண்களைப் பொதுவாகப் பலவீனமான வர்கள் என்று ஆண்கள் சொல்கிறார்கள்.

இதைப் பெண்களும் நம்பி, மற்றபெண்களையும் அதே போல் நம்பச் செய்கிறார்கள்.

பெண்களை Better Half என்று கூறுவதெல்லாம் Better மக்கள் மட்டுமே.

ஆனால் சுவாமி விவேகானந்தர் பெண்களின் பலத்தையும் அதனால் அவர்கள் அடையும் சுதந்திரம் பற்றியும் கூறுவதைப் பாருங்கள்.

தமது குழந்தைகளின் மனவருத்தத்தை உணர்ந்துகொண்ட ஒரு தந்தையைப்போல் சுவாமி விவேகானந்தர் அவர்களிடம் 'குழந்தைகளே! நீங்கள் வயதானவர்களாகவோ பலவீனர்களாகவோ, ஆதரவற்றவர்களாகவோ இருந்தால் நான் உங்களுக்கு நிச்சயம் உதவ வேண்டும். ஆனால் யாருடைய உதவியும் இல்லாமலே உங்களால் இந்தக் கடினமான பாதையில் தாண்டிக் குதித்து ஏறமுடியும். அதற்கான வல்லமை உங்களிடம் உள்ளது.

''என்னைப் போன்றே நீங்களும் பலமுள்ளவர்கள். பின் எதற்காக நான் உங்களுக்கு உதவ வேண்டும்? நீங்கள் பெண்கள் என்பதற்காகவே உங்களுக்கு உதவ வேண்டுமா, என்ன?

''ஆண்கள் பெண்களுக்கு உதவ முற்படுவதிலெல்லாம், ஆசைகளை உள்ளுக்குள் மறைத்துக்கொண்டு அவர்கள் பெண்களிடம் காட்டும் வெற்று வீரம்தான் (Chivalry) என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கூறினார்.

சுவாமி விவேகானந்தரின் இந்த வித்தியாசமான உபதேசத்தைக் கேட்ட அந்தப் பெண்களுக்குச் சில உண்மைகள் தெளிவாகின.

பொதுவாக, பெண்களுக்காகப் பரிந்து பேசுபவர்கள் பெண்களைப் பலவீனர்கள் என்றே சாதிக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் பெண்களில் உடலையோ, மனதையோ மட்டுந்தான் காண்கிறார்கள்.

ஆனால், சுவாமி விவேகானந்தர் பெண்களிடம் மட்டுமல்ல, அனைத்து மக்களிடமும் உடல், உள்ளப் பலங்களோடு ஆன்ம பலத்தையும் கண்டவர். அவர் அன்று அந்தப் பெண்களுக்கு ஆன்ம ஆற்றலை உணர்த்தவே உதவவில்லைப் போலும்!

ஒரு குழந்தை தத்தித் தத்தி நடந்து வருகிறது. நடை பழகட்டும் என்று நல்ல தாய் ஒருத்தி அதனை அன்போடு, அதே சமயம் கவனத்தோடு கண்காணிப்பாள். குழந்தை நடந்தால் காலை முறித்துக் கொள்ளும் என்று தன் இடுப்பிலேயே வைத்துக் கொண்டு குழந்தையின் வளர்ச்சிக்குத் தடையாக நிற்பவள் நடுத்தர, சாதாரண பெண் ஆவாள். ★

# இலக்கியப் பொழில்

# அந்தகா! வந்துபார்!! என்று பாடிய அருணகிரிநாதரும் போடா என்று துரத்துமாறு அம்பிகையைக் கேட்ட சங்கப் புலவரும்

நாம் பிறந்து அறிவுபெற்ற நாள் தொடக்கம் இறப்பைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். கொள்ளும் கொடுங்கூற்றுவன் கொல்ல நம்மைத் தேடிக் கொண்டு பின்னால் திரிவதாகச் சதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். வாழ்வில் பிடிப்பின்றி கவலையே உருவமாக ஊடாடிக் கொண்டிருக்கிறோம். ''காடு வா, வா என்கிறது; வீடு-போ, போ என்கிறது'' என்ற பேச்சைக் கேட்டிருக்கிறோம்.

இந்த எண்ணம் நமக்கு நன்மையே செய்யும்; அறவழியில் செல்லத் தூண்டும் எனப் பலர் நம்புகிறார்கள். அந்த எண்ணம் வாழ்வையே கெடுத்துவிடும் எனச் சிலர் சொல்கிறார்கள்.

அழியும் பொருளை நம்பி, அதுவே கதியென நினைத்து எவ்வகையிலும் அதைத் தேடி இகலோக மகிழ்வை எண்ணியிருப்பவர்களுக்கு சாவு என்பது ஒன்று உண்டு என்று நினைக்கும் நினைப்பு அடிக்கடி வருவது நல்லதுதான். பிறர்க்குத் துன்பம் செய்யாமல் அறவழியில் பொருள்தேடி அருள் வழிகாட்ட நடப்பவர்களுக்கு இயமனைப் பற்றிய எண்ணமே தேவையில்லை. அந்தகா! வந்துபார்!! என்று இறுமாந்திருபார்கள். அவர்களைத் திருவள்ளுவர் முதலிய அறநெறிப்புலவர்கள் பயப்படுத்தாமல்,

*''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு''*

என ஊக்குவிப்பார்கள். மற்றவர்களைச் சமண நூலாசிரியர்கள் இளமை நிலையாது, யாக்கை நிலையாது, செல்வம் நிலையாது எனப் பச்சைப்படியாக எச்சரிக்கை செய்து கொண்டிருப்பார்கள். சிலருக்கு இது வறட்டுக் கூச்சலாகவே படும்.

**அந்தகா வந்துபார்!!**

சரியான பற்றுக்கோடு ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் இறப்பைப் பற்றியே சிந்திப்பதில்லை. அவர்கள் இயமனைப் பார்த்துக் கேலியாகவும் நகைக்கிறார்கள். பயங்கரமான இயமனைப் பார்த்து ஒரு பக்தர் பயமெல்லாவற்றையும் விட்டுவிட்டு, *''அடா எமனே, கிட்ட வந்து பார் என் கெட்டித்தனத்தை; என் கைக்கு எட்டும்படியாக வந்து பார் உனக்குத் தைரியமிருந்தால்''* என்று பய முறுத்துகிறார். ''அந்தகா வந்து பார் சற்றென்கைக் கெட்டவே'' என உரப்புகிறார். அதோடு விட்டாரா? இன்னும் ஒருபடி மேலே போகிறார். நீ கையில் வைத்திருக்கும் தண்டாயுதமும், திரிசூலமும் தூரப் போய்விழும்படியாக உன்னை அடித்து நொருக்கித் திண்டாடச் செய்து விடுவேன்; தைரியமிருந்தால் வந்த பார்'' என்று மிரட்டுகிறார்.

*''தண்டாயுதமும் திரிசூலமும் விழத்*
*தாக்கியுனைத்*
*திண்டாட வெட்டி விழவிடுவேன்''*

என்பது அவர் உறுதியான வாக்கு.

இந்த உறுதி- இயமனைக் கண்டும் பயப்படாத பலம் - அவருக்கு எப்படி வந்தது? அவரே சொல்கிறார்:- ''வெறும் உடற்பலத்தால் மட்டும் இதை நான் சொல்லவில்லை. என்னைவிட எத்தனையோ மடங்கு உடற்பலமுள்ளவர்களை நீ கண்டிருப்பாய். நான் சரியான பற்றுக்கோடு ஒன்றைப் பிடி தளராமல் பிடித்துக் கொண்டிருக்கிறேன். அது என்ன தெரியுமா? திருச்செந்தூர் வேலவன் மீது உள்ள பக்தி. அவனது தொண்டன் நான். அவர் எனக்கு [illegible] ஞான பலத்தை அளித்துள்ளார். அந்த ஞானச்சுடர் என் கையில் வாளாக இருக்கிறது. அதை நான் வைத்திருக்கும் போது உன்னால் என்னிடம் நெருங்க முடியாது'' என்கிறார்.

*''.... செந்தில் வேலனுக்குத்*
*தொண்டாகிய வென்அவிரோத ஞானச்*
*சுடர் வடிவாள்*
*கண்டாயடா அந்தகா, வந்து பார்*
*சற்றென் கைக்கெட்டவே''*

என்பது அவர் அருள்பெற்ற ஞானப்பேச்சு.

இப்படியெல்லாம் இயமனுக்கே சவால் விடும்படியாகப்பாடும் அருட்செல்வர் யார் தெரியுமா? திருப்புகழ்,கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியவற்றைப் பாடியருளிய அருணகிரிநாதர்தான்.

ஒரு புலவர் இயமன் எனக்கு, ''அடியேன் தெண்டனிட்ட விண்ணப்பம் என்று மன்றாடி ஓலை எழுதியிருக்கிறான் பாருங்கள்'' என்று பெருமிதத்தோடு கூறுகிறார். அவரைச் சற்று நிமிர்ந்து பார்க்கிறோம். அவர் நெஞ்சை நிமிர்த்திக் காரணம் சொல்கிறார். நான் சாதாரண ஆளல்லத்தம்பி! கூடற் பிராட்டியின் பக்தன். அவளோ சிறு பெண் பிள்ளைதான். ஆனாலும் அவளைப் பக்தியோடு நான் கைகூப்பித் தெண்டனிட்டேன். அவ்வளவுதான் நான் செய்தவேலை. இயமன் கிட்டக கூட வரவில்லை. தூரத்திலேயிருந்து பக்தனாகிய எனக்குப் பணிவோடு தெண்டனிட்டு ஓலை எழுதி அனுப்பிவிட்டுப் போய் விட்டான்'' என்கிறார் அவர். பாடலைப் பாருங்கள்:-

*''கான் தெண்டனிட்ட நெடுங்குழலாளை*
*என் கண்மணியைத்*
*தென்தொண்டைவாய்ச்சியைத் தென்கூடலிற்*
*சிறுபெண்பிள்ளையை*
*யான் தொண்டனிட்ட பொழுதே இயமன்*
*எனக்கும் அடி*
*யேன் தெண்டனிட்ட விண்ணப்பமென்றோலை*
*எழுது வனே''*

பக்தியினால் எழுந்த நெஞ்சுரத்தைப் பார்த்தீர்களா?

**போடா - வாடா**

மற்றொரு புலவர் வாடா, போடா என்று பாடுகிறார். சாதாரணமாகக் குழந்தைகள் பேசும் தொனியில் பேசுகிறார். பக்தியோடு கூடிய உயர்ந்த பொருளைச் சாதாரண எளிய நடையில் கையாளுகிறார். அவர் ஈஸ்வரியைப் பார்த்துக் கேட்கிறார்:- ''அம்மா! தாயே!! அதோ கேடாய் வரும் இயமன் கிட்ட வருகின்றான். எங்கெங்கோ எல்லாம் ஓடினேன். யாரும் காப்பாற்ற முன்வரவில்லை. கடைசியாக உன்னிடம் வந்திருக்கிறேன். அன்னையாகிய உன்னிடம் வந்திருக்கிறேன். நீ இயமனைப் பார்த்து என் பக்தனைத் தொடாதே; போடா என்று துரத்து; என்னை மகனே வாடா! என்று கூப்பிடு. உன் பாதாரவிந்தத்தில் எனக்கு அடைக்கலம் தந்து வாழ்வி. இதை நீ செய்தல் வேண்டும். நீ இப்படிச் செய்தால் உன்னை யார் தடுக்கப் போகிறார்கள்? இச்செயல் கூடாதென்று யார் சொல்லப் போகிறார்கள்? ஒருவருமில்லயே'' என்கிறார் அவர். அவர் பாடல் வருமாறு:-

*''கேடாய் வரும் யமனைக் கிட்டவராதே தூரப்*
*போடா என்றோட்டி உந்தன் பொற் கமலத்தாள் நிழற்கீழ்*
*வாடா என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்*
*கூடாதென்றார் தடுப்பார் கோமளத்தாய் ஈஸ்வரியே''*

அந்தகா! வந்துபார் என்று பெருமிதப் படக் கூறிய அருட்கவியாகிய அருணகிரிநாதர் பாடலையும், இயமன் தனக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறான் எனப் புதிய

**கனக செந்தில்நாதன்**

பாணியில் கூறிய கவிஞரையும் இயமனைப் போடா என்று துரத்து, என்னை வாடா என அழைத்து வாழ்வி என்று எளிமையாகக் கூறிய புலவரையும் சந்தித்தோம். பக்தி இலக்கியமானாலும் கவிதை நயம் சொட்டும் வகையில் அமைந்த பாடல்கள் என்றும் இரசனைக்கு உரியவையே. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி வயிரவர்.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் எல்லோரும் தூங்கிவிட்டனர்.

'இதென்ன மதிலோரமாக ஆரோ போகினம்....' தலையை நிமிர்த்தி, மூக்கை அசைத்துப் பார்க்கின்றேன். புவனம் அக்கா தான். தன் வீட்டிலேயே கள்ளனைப் போல ஏன் நடக்க வேணும். அதுவும் எல்லோரும் தூங்கிய பிறகு.

நானும் மெதுவாக அவள் பின்னால் போனேன். அக்கா சத்தமின்றி கேற்றைத் திறந்தபடி ஆல மரத்தை நாடிப்போகின்றாள். நல்ல சந்தர்ப்பம். நானும் 'டக்' கென்று வெளியே பாய்ந்தோடினேன்.

'ரோஸி!' என்று அக்கா மெதுவாக அழைக்கின்றாள். பயத்துடன் நான் ஒருகணம் நின்று அவளைப்பார்த்து விட்டு வயிரவரை நாடி ஓடினேன்.

'வந்துவிட்டியா ரோஸி' என்றபடி அணைத்துக் கொண்டார் அவர்.

'புவனம் என் புவனம்!'

யாரோ மெதுவாக அழைக்கின்ற குரல் எழுகின்றது. அக்காவை யார் கூப்பிடுகின் றார்கள்? ஆலமரத்தின் மறைவில் இருவர் நிற்பது தெரிகிறது.

ஒன்று புவனம் அக்கா; மற்றது....?

'என்ன ரோஸி.... பார்க்கிறாய்?..... கடைக்கார மாணிக்கத்தாற்றை கடையிலை வேலை செய்கிற பெடியன் சுப்புறு அது. மற்றது உன் எசமானி! ஓவசியர் நடராசாவின் மகள் புவ னம்! இரண்டு பேரும் இப்படி அடிக்கடி சந்திக்கிறவை.'

புவனம் 'விம்மி விம்மி' அழுகின்றாள், அக்கா! அக்கா! ஏன், அழுகிறாய்?

'புவனம் அழாதே! உன்னைக் கடைசி வரை கைவிட மாட்டேன்'.

'இந்த ஆலடிவயிரவர் ஆணையாக உன்னைத்தான் மணப்பேன்' என்கிறான், சுப்புறு.

''உங்களை நான் சந்தேகிக்கவில்லை, என் அப்பாவை நினைக்கத்தான் பயமா இருக்கு! எங்கடை கலியாணத்துக்கு உடன் படவே மாட்டார்! என்னால் உங்களைவிட வேறொருவருடன் வாழவே முடியாது' என்று அழுகிறாள் அக்கா.

'புவனம்! உன் அந்தஸ்துக்கு ஏற்றவன் நான் அல்ல, நீ பணக்காரர் ஒருவரின் மகள். நான் அநாதை. கடையிலே வேலை செய்து பிழைப்பவன்! புவனம்! நாங்க காதலிக்கக் கூடாது? புவனம் இந்த உலகமே எதிர்த் தாலும் என்னால் உன்னை மறக்கவே முடி யாது. யார் எதிர்த்தாலும் உன்னை என்னி டமிருந்து பிரிக்கவே முடியாது.'

'நீங்கள் இல்லாவிட்டால் எனக்கும் வாழ்வில்லை. என் உலகமே நீங்கள் தான்!' என்று புவனம் அக்கா விம்முகிறாள்.

'ரோஸி! அவையளை விட்டிட்டு என்னைப்பார்' என்று என்னைக் கூப்பிடுகிறார் அவர், அவசரக்காரர். வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள், நாங்களும்தான். வீட்டுக்குப் போகும்போது அக்காவுடன் அவரைப் பிரிய மனமின்றி நானும் போனேன்.

கொடிய நாள்கள் மூன்று அவரை என் னால் சந்திக்கவே முடியவில்லை. கேற்றைத் திறந்து விடுவார் எவருமே இல்லை. கேற்றுக்கு அப்பால்ஆலமரத்தின் கீழ் கவலையோடு 'அவர் எனக்காக மூன்று நாள் களாகக் காத்திருக்கிறார். கேற்றடிக்கு அடிக்கடி நான் ஓடுவேன். அவரும் வருவார்!

நாங்கள் சந்தித்துக் கொள்வதை ஓவ சியர் ஐயா அவதானித்து விட்டார்.

'டேய்- கணபதி!' என்று கூச்சல் போட்டு வேலைக்காரனை அழைத்தார். 'அல்சேஷன் நாய் பழுதாகப் போகப் போகுது.... உங்கை றோட்டிலை ஒரு பறநாய் நிக்குது. அடிச்சுத் துரத்து அதை!'

என் இதயம் ஒரு கணம் நின்றது போல இருக்கிறது. அவர் என்னைப் பார்த்தால் என்ன? நான் உயர்சாதி நாயாம். அவர் அந் தஸ்துக் குறைந்தவராம்,

கணபதி பெரிய கற்களாகப் பொறுக்குகின்றான். கேற்றைத் திறந்து கொண்டு வெளியே போகின்றான். நானும் வெளியே ஓட எத்தனிக்கின்றேன், வலுவான இரு கரங்கள் என்னைப் பற்றிச் சங்கிலியை மாட்டுகின்றன.

'புவனம்! ரோஸியைக் கூட்டில் அடைச்சு வை! பறைநாயளோடு சேரப்பாக்குது.'

வெளியே 'டொக்! டொக்!' என்று கற்கள் விசப்படும் ஒலி கேட்கின்றது. 'வாள்! வாள்!' என்று அவர் கதறியழும் ஓசையும் கேட்கிறது. என்னால் தான் அவருக்கு இந்தத் தண்டனை.

நான் பாவி! கூட்டை உடைத்து விடும் ஆவேசத்தோடு நான் துடிக்கின்றேன்.

புவனம் அக்கா என்னையே ஆதரவோடு பார்க்கின்றாள். பின் திரும்பிப் போகின்றாள்.

பெண் மனம் பெண்ணுக்குத் தானே புரியும்!

இரண்டு நாள்கள் கழிந்துவிட்டன. ஊண் உறக்கமின்றிக் கிடக்கின்றேன்.

கணபதி கூட்டில் போட்ட இறைச்சித் துண்டுகள் அப்படியே சிதறிக்கிடக்கின்றன.

என் ஆசைகளும் அப்படியே.

என் மனதை ஏதோ ஒன்று வந்து அடைத் துக் கொள்கிறது.

புவனம் அக்கா மகிழ்ச்சியாகத்தான் காணப் படுகின்றாள். வழக்கம் போல எல்லோரும் தூங்கிய பின் ஆலமரத்தடிக்குப் போகின்றாள். நேரம் கழித்து வருகின்றாள். அவ்வேளைகளில் கேற் திறந்தபடிதான் கிடக்கின்றது. ஆனால் என் கூண்டு திறக்கவில்லை!

இன்று இரவு எப்படியாவது வெளியேறி விட வேண்டும், என் அவருடன் எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடிவிட வேண் டும்! அவருடன் தனிக்குடித்தனம்.... ஆகா! நினைக்கவே இனிக்கிறது.

இருள் படர்கின்றது - ஆலடியில் அவர் கதறும் ஒலி கேட்கின்றது, 'அன்பே!' அவர் அழைக்கின்றார்.

இதோ! புவனம் அக்கா போகின்றாள். பதுங்கிப் பதுங்கிக் கேற்றைத் திறந்து கொண்டு போகிறாள்.

அவள் கொடுத்து வைத்தவள்.

ஆ.......... இதென்ன? நம்பவே முடிய வில்லை. என் அவர் ஆலடி வயிரவர்............ திறந்த கேற்றுக்குள்ளால் புகுந்து என் கூண்டை நோக்கிப் பாய்ந்து வருகின்றார்.

'ரோஸி! ரோஸி!'

கூண்டை உடைத்தெறிகின்ற வெறியோடு மோதுகின்றேன். அவர் கூச்சலிட்டபடி கூண் டின் மீது பாய்கின்றார்.

என் ராசாவுக்குத்தான் எத்தனை தைரியம்! எங்களை மறந்தோம்.

இருந்தாற் போல் வீட்டு லைற்றுகள் எல் லாம் எரிந்தன. ஓவசியரும் கணபதியும் கதவுகளைத் திறந்தபடி ஓடி வந்தார்கள்.

'ஓடிவிடுங்கள்..... ஓடிவிடுங்கள்....... என்று நான் கூச்சல் போட்டேன். அவர் கவனிக்கவே இல்லை,

அத்தனை ஆத்திரம்!

'கணபதி! அடிச்சுக் கொல்லடா!' என்று ஓவசியர் கூச்சலிட்டார். கணபதி பாய்ந்து ஓடி வந்தான். ஒரே வீச்சு........... 'ரோஸி' என்று அவர் கதறினார். மண்டையில் அலவாங்கு அடி பலமாக இறங்கி விட்டது!

என் கண்முன்னால் என் காதல் தெய்வம்' என் இன் உயிர் துடித்துத் துடித்து....... ஐயோ... நான் பாவி!

'என்னெண்டு இந்தப் பறைநாய் உள்ளுக்குள் வந்தது..... உதென்ன கேற் திறந்திருக்கு'

'ஓவசியர் வேகமாக வெளியே ஓடுகிறார்.

'கணபதி....! ரோச்சை எடுத்து வா'

கணபதி ஓடிப்போகின்றான்.

புவனம் அக்காவும் சுப்புறுவும் அகப்பட்டுக் கொண்டார்கள். ஓவசியரின் கைகளில் அகப்பட்ட சுப்புறு துவைக்கப்படுகின்ற ஒலி கேட்கிறது.

'ஐயோ! அப்பா! அவரை ஒன்றும் செய்யாதையுங்கோ..... அவரை விட்டிடுங்கோ' என்று புவனம் அக்கா துடிக்கிறாள்.

'போடி, உள்ளே. உவனை அடிச்சுக் கொல்லடா, கணபதி

சுப்புறு என்ன நாயா, கணபதி அடிப்பதற்கு?

பலர் வெளியே கூடிவிட்டார்கள் போல இருக்கிறது. யார் யாரோ விளக்குப் பிடிக்கிறார்கள்.

'என்னை விடுங்கோ! நான் இனி உள்ளே வரமாட்டேன்' என்று புவனம் அக்கா வீரிடுகின்றாள்.

'புவனம்! யோசித்துத்தான் கதைக் கிறாயா? என்று ஓவசியர் குமுறுகிறார்.

'ஓம்..... நான் இனி உங்கை வர மாட்டன்......... அவரோடை எங்காவது போகப் போகின்றேன்.'

'வெளியில் போன நாய் இனி உள்ளுக்கு வேண்டாம்..... போடி.... நல்லாய்ப் போ! இண்டையிலிருந்து எனக்கு நீ மகளல்ல. டேய், கணபதி, 'கேற்'றைப் பூட்டு!'

ஓவசியர் தள்ளாடித் தள்ளாடி வருகிறார். கணபதி 'கேற்' றைப் பூட்டி விடுகின்றான்.

என் தெய்வம் இரத்தச் சேற்றில் கிடக்கின்றது.

கம்பீரமான அந்தக் கறுத்த உடம்பு... அந்த முறுக்கு, நிமிர்ந்த நாக்கு..... ஐயோ!

எல்லாம் கனவாய்ப் போச்சே!

இது என்ன நீதி!

ஆலடி வயிரவர் ஆணையா, நீ போன இடத்திற்கு நானும் வருவேன். என்னைத் தடுத்து, அடைத்து வைக்க, ஓவசிய ரென்ன, கணபதி யென்ன, அப்போது எவராலும் முடியாது! ✱

*(1971). நன்றி: மண்ணின் கனவுகள் சிறுகதைத் தொகுதி.*


# STUDY IN EASTERN EUROPE
## MEDICINE & ENGINEERING

Colombo Ads. 0714315841 (Asitha)





Group of Sri Lanka Students at Vitebsk State Medical University (Belarus)

Belarus இல் உள்ள மாநில பல்கலைக்கழகங்களில் அனுமதி உத்தரவாதம்

✱ இலங்கை மருத்துவசபை, உலகசுகாதார ஸ்தாபனம், ஜி.எம்.சி.பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் 150 நாடுகளில் அங்கீகாரம் பெற்றது.

✱ உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்தும் இடமாற்றம் பெற ஆவணம் செய்யப்படும்.

✱ 200 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிடலாம். அவர்கள் கூறும் கருத்துக்களைப் பரிசீலிக்கலாம்.

✱ மருத்துவத்துறையில் PhD/ சிறப்பு கற்கை.

✱ ஜூன் 15ஆம் திகதி முதல் குழு புறப்படும்.

விஸா - 100% உத்தரவாதம்

பதிவுகளுக்கும் தகவல்களுக்கும் 0773017883

PATHE ACADEMY

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

**Head Office**
37, School Lane (Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271

**Overseas Student Placement Department**
111-1/2, Maya Avenue, Colombo-6.
Tel :0112586418

www.patheacademy.org


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 04.11.1926

ஆண்டவன் அடியில் 09.05.2008



## திருமதி கனகரட்ணம் நாகம்மா

**திதி: சதுர்த்தி 08.06.2008**

அன்னை என்ற அன்புச்சுடரே நீங்கள்
அணைந்தமை உங்கள் பிள்ளைகளாகிய
எம் நெஞ்சில் இடியாக விழுந்ததம்மா
மாதங்கள் பல சென்றாலும்
அன்னையே உங்களை மீண்டும் பெறமுடியுமா?

நீங்கள் அன்பு காட்டி அரவணைத்த
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளை
பூவுலகில் தவிக்கவிட்டு விண்ணுலகத்திற்கு
தனியே செல்ல துணிச்சல் எங்ஙனம்
உமக்கு வந்ததம்மா?

பிள்ளைக்கு பிள்ளையாய் பார்த்த
மருமக்களையும் விட்டுப் பிரிந்து
விட்டீங்களே அம்மா!
உறவுகளை உற்பத்தி செய்யலாம் அம்மா
உங்களை மீண்டும் உற்பத்தி செய்ய முடியுமா?

உங்கள் நீங்கா நினைவில் என்றும் வாடும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

32, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

எங்கள் அம்மா நோய் வாய்ப்பட்டு ஒன்றரை மாத காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது அம்மாவிற்கு சகலவித மான பரிசோதனைகளையும் மேற்கொண்டு பாடுபட்ட டாக்டர்கள், தாதிமார் கள், ஊழியர்கள் அனைவ ருக்கும் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குடும்பத்தினர்.**

*தகவல்:*
*திருமதி. R. விஜயலட்சுமி*

(75102)

# ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 10 ★ 10 ★ 1936



விண்ணில் 21 ★ 05 ★ 2007

## அமரர் குமாரு கந்தசாமி (கிட்டுமாமா)

பன்னிரு திங்கள் பறந்துதான் வந்ததுவோ
எண்ணி நாம் இருக்கவில்லை - எண்ணங்கள்
உன் நினைவாக அன்பைத் தேடினவே
அன்பான ஐயாவே! ஆற்றொணாத் துயரில் நாம்
அமிழ்ந்திப் போனோமே
நினைவுகளைச் சுமந்து கொண்டு - நின்
நிழற் படத்தை பார்க்கின்றோம்
நான்கு சட்டத்தினுள் நாம் காணும் ஐயாவே!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது எம் துயரம்
ஊழி உள்ளவரை உன் நினைவே தொடர்ந்திருக்கும்
உன் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை
வேண்டுகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

கண்ணாதிட்டி,
யாழ்ப்பாணம்.


*தகவல்:*
**குடும்பத்தினர்**
*(நவினா - பேத்தி - லண்டன்)*

(74857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையவுள்ள போதனா வைத்தியசாலையின் 'புற்றுநோய் மருந்துச் சிகிச்சைப் பிரிவு'

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்று நோயியல் சிகிச்சைக் களத்தில் ''புற்று நோய் மருந்து சிகிச்சைப் பிரிவு'' (Cancer Chemotherapy Unit) என்னும் புதிய கூறு எதிர்வரும் 9ஆம் திகதி திங்கள் காலை 9 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. 09.06.2005 அன்று தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் முதன் முதல் புற்றுநோயியல் கதிர் வீச்சுச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதே தினத்தில் மூன்று ஆண்டுகள் முடிவில் ''புற்றுநோய் மருந்து சிகிச்சைப் பிரிவு'' யாழ்.போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.


கணனி வடிவமைக்கப்பட்ட முப்பரிமாணச் சிகிச்சைத் திட்டமிடலின் போது புற்றநோயியல் வைத்திய நிபுணர் என்.ஜெயகுமாரன், மருத்துவ பௌதிகவியலாளர் ஜெ.ஜெயசுகித்தன்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதிகளான கணேசமூர்த்தி தம்பதியினர் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள். சிறப்பு விருந்தினராக யாழ்.வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். ஜனக்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

**யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றநோய் சிகிச்சைப் பிரிவின் தோற்றமும் வளர்ச்சியும்**

தொழிற்பாடு இன்றி இருந்த நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவின் 4 அறைகளைக் கொண்ட ஒரு பகுதிக் கட்டடத் தொகுதி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரால் புற்றுநோய்ச் சிகிச்சைக் காக அப்பிரிவினரிடம் கையளிக்கப்பட்டது. 14.12.2004 அன்று இரண்டு அறைகளில் 9 கட்டில்களுடன் ஆண்கள் பகுதியாகவும் மற்றைய இரண்டு அறைகளில் 9 கட்டில்களுடன் பெண்கள் பகுதியாகவும் 18 கட்டில்களுடன் புற்று நோய்க்கூறு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஏ-9 வீதி திறந்து இருந்ததால் வடமாகாணத்தில் உள்ள சகல புற்று நோயாளர்களுக்கும் சிகிச்சையளிக்கும் நிலையமாக அது காணப்பட்டது. இதனால் இடநெருக்கடி ஏற்பட ஆரம்பித்தது. எனவே தெற்குப் பகுதியில் இருந்த கட்டடப்பகுதியும் உள்வாங்கப்பட்டு பெருப்பிக்கப்பட்டது. நரம்பியல் சிகிச்சைப் பிரிவின் ஒரு பகுதிக் கட்டடத் தொகுதியில் இயங்கி வந்த யாழ்ப்பாண வைத்தியர் சங்கத்தின் நூலகம் பல சிரமங்களின் மத்தியில் பாலியல் தொற்று நோய் கிளினிக்கின் கீழ் தளத்திற்கு மாற்றப்பட்டு நூலகம் இயங்கி வந்த பகுதி பெண்களுக்கு உரிய புற்று நோய்ப் பிரிவாக மாற்றியமைக்கப்பட்டது. முன்பு இருந்த புற்றுநோய்ப் பிரிவு ஆண்கள் புற்று நோய்ப் பிரிவாகவும் மாற்றி அமைக்கப்பட்டது.

புற்று நோய்ச் சிகிச்சை கதிரியக்கச் சிகிச்சையாகவும், மருந்தியல் சிகிச்சையாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கதிரியக்கச் சிகிச்சை தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் தனி அலகாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் மருந்தியில் சிகிச்சைப் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்று நோய்க் கூற்றியல் பகுதியிலேயே நடைபெற்று வருவதால் பல இடநெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

நெடுந்தூரத்தில் இருந்து நாளாந்தம் மருந்துச் சிகிச்சைக்காக வந்து செல்லும் நோயாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர் கொள்வதால் அவர்களின் நலன் கருதி அது ஒரு தனி அலகாக விஸ்தரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் இப்புதிய கட்டடம் கட்டப்பட்டு எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

## மஹரகம நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு இணையாக யாழ்ப்பாணத்திலும் விரைவில் உரிய மருத்துவ வசதி

இப்புதிய கட்டடம் 12 கட்டில்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட தொகுதியாக உருவாக்கபட்டுள்ளதுடன் மெல்லிய ஒலி அமைப்புடனான (இசை மருத்துவ வகையிலான) அலகாகப் புதுப் பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளது. டாக்டர் எஸ்.தேவகாந்தன் அமெரிக்காவில் உள்ள தமிழ் வைத்தியர்களின் அமைப்பான ஐ.எம்.எச்.ஓ. ஊடாக 18 இலட்சம் ரூபா பணத்தினை அன்பளிப்புச் செய்ததன் பயனாக இக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு நோயாளர் பயனடைய வாய்ப்புக் கிட்டியுள்ளது.


புற்றுநோய் மருந்துச் சிகிச்சைப் பிரிவின் முன்பக்கத் தோற்றம்.

**நோயாளர்களுக்கான ஒதுக்கீடு**

''ஆண்கள் பகுதியில் 19 கட்டில்களும், பெண்கள் பகுதியில் 19 கட்டில்களும் 38 கட்டில்கள் உள்ளன. நாளாந்த மருத்துவ சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு 12 கட்டில்களும் உள்ளன. 6 கட்டில்கள் மேலதிக தேவைக்காக காணப்படுகிறது. மொத்தமாக பெரியவர்களுக்காக 56 கட்டில்கள் உள்ளன.

சிறுவர்களுக்கு ஆண்கள் பகுதியில் 4 கட்டில்களும் பெண்கள் பகுதியில் 4 கட்டில்களும் உள்ளன. பெரியவர், சிறியவர்களுக்காக மொத்தமாக 64 கட்டில்கள் உள்ளன. 18 கட்டில்களுடன் ஆரம்பித்த புற்று நோய் சிகிச்சைக் கூறு 64 கட்டில்கள் கொண்ட பகுதியாக வளர்ச்சி கண்டுள்ளது. இரு புற்று நோய் வைத்திய நிபுணர்கள் கடமையாற்றக் கூடிய அலகாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எனினும் புற்று நோய் வைத்திய நிபுணர் டாக்டர் என்.ஜெயகுமாரன் மட்டுமே கடமையாற்றுகிறார்.

**ஆளணிப் பற்றாக்குறை**

புற்றுநோய் வைத்திய நிபுணர்கள் 3பேர் தேவையாக உள்ளபோதும் தற்போது ஒருவரே கடமையில் உள்ளார். அதேபோன்று மருத்துவ அதிகாரிகள் 10பேர் தேவையாக உள்ளபோதும் 5 பேரே கடமையில் உள்ளனர். மருத்துவப் பௌதிகவியலாளர்கள் 2 பேர் தேவையான இடத்தில் ஒருவரே கடமையாற்றுகின்றார். அதேபோன்று கதிர்வீச்சுச் சிகிச்சையாளர் 4பேர் தேவைப்படுகின்றார்கள்.எனினும் தற்போது ஒருவரே உள்ளார். தாதிகள் 15பேர் தேவையான இடத்தில் 9 பேர் மட்டுமே உள்ளனர்.


**நோய்க் கூற்றியல் வைத்திய நிபுணர் இல்லை**

புற்று நோயாளர்களுக்கான நோய்க் கூற்று வைத்திய நிபுணரின் (Pathologyst) ஆய்வு அறிக்கையிலேயே பெருமளவு தங்கி இருக்கின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் நோய்க் கூற்றியல் வைத்திய நிபுணர் எவரும் இல்லாதது வேதனைக்குரியதே. ஆய்விற்குரிய மாதிரிப் பொருள்கள் யாவும் கொழும்பு வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டே அறிக்கை பெறப்பட்டு வைத்தியம் தொடரப்படுன்றது. இதனால் பலமாத காலத் தாமதம் கூட ஏற்படுவதால் நோயாளர்களுக்கு காலதாமதம் காரணமாகப் பாதிப்புகள் ஏற்படுவதும் வேதனைக்குரியது.


கதிரியக்கச் சிகிச்சைக்காக நோயாளி ஒருவரைத் தயாப்படுத்தும் போது, மருத்துவக் கதிரியக்கவியலாளர் திரு. எஸ்.இராமலிங்கம் புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என்.ஜெயகுமாரன், மருத்துவ பௌதிகவியலாளர் திரு.ஜெ.ஜெயசுகித்தன்.

நோயாளர்களில் மூன்றாவது அதிகப்படியான நோயாளர்கள், புற்று நோயாளர்களாகக் காணப்படுகின்றனர். அது மட்டுமல்லாது சில புற்றுநோயாளர்களுக்கு ஒரு மாதத்தில் பல லட்சம் பெறுமதியான மருந்துகள் வழங்கப்படுகின்றன. நோயாளர்களில் அதிகளவான பணம் செலவிடப்படுவது புற்று நோயாளர்களுக்கே ஆகும்.

நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற இரசாயனப் பதார்த்தங்கள் சாதாரணமானவர்களில் தொடுகையுறுமானால் அவர்களுக்கு புற்று நோயைத் தூண்டும் பாதிப்புகள் ஏற்படும். அங்கு சேவையாற்றும் தாதியர் மற்றும் பலர் அர்பணிப்புடன் சேவையாற்றுகின்றார்கள். கதிரியக்கம் பாதிப்பை அளந்து அறிந்து கொள்வதற்கு ரி.எல்.டி.என்னும் கலம் மற்றும் உடல் மேலங்கி, கண்ணுறை, கையுறை, வாயுறை போன்றவற்றைப் பயன்படுத்தி தம்மைக் காத்துக் கொள்கின்றார்கள்.


விடுதியில் நோயாளர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டில்கள்.

**எதிர்காலத் திட்டம்**

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மித்த பண்ணைப் பிரதேசத்தில் அரசாங்க அதிபரால் ஒன்றரை ஏக்கர் நிலம் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது .பதிவு செய்யப்படவும் உள்ளது.

இக்காணியில் புற்றுநோய்க் சிகிச்சை விடுதித் தொகுதிகள் (Cancer Ward Complex), கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு (Linac), குறுந்தூர கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு (Brachy Theraphy) கதிரியக்க அயடின் சிகிச்சைப் பிரிவு, புற்று நோயியல் தகவல் மையம் போன்ற பல்வேறுபட்ட புற்றுநோய் சிகிச்சை தொடர்பான கட்டுமானங்களுடன் மகரகம புற்று நோய் சிகிச்சைப் பிரிவிற்கு இணையான பிரிவு விரைவில் அமைக்கப்படும் திட்டம் உள்ளபோதிலும் சமகால அசாதாரண சூழ்நிலை காரணமாகத் திகதி குறிப்பிட முடியாதுள்ளது. இது அமைக்கப்படும் இடத்து பல புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர்கள் (Oncologyst) புற்று நோய் சத்திரசிகிச்சை நிபுணர்கள், மருத்துவ பௌதிகவியலாளர்கள், கதிர்வீச்சுச் சிகிச்சையாளர் என விசேட உத்தியோகத்தர் பலர் மேலதிகமாக இங்கு நியமிக்கப்பட வேண்டும்.

**புற்றுநோய் சிகிச்சைகள் நடைபெறும் இடங்கள்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள புற்றுநோய் வைத் தியக்குழு நோயாளர்களின் நன்மை கருதி மற்றைய வைத்தியசாலைகளிலும் நடமாடும் வைத்தியசேவையினை நடத்தி வருகின்றார்கள்.

- தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை (திங்கள் காலை 9.00- 12.00).
- பருத்தித்துறை ஆதார வைத்தியாலை (புதன் காலை 9.00- 1.00).
- சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலை (இரண்டாவது புதன் காலை 9.00-1.00).
- சங்கானை சுற்றயல் வைத்திய சாலை (மூன்றாவது புதன்காலை 9.00-12.00).
- காரைநகர் சுற்றயல் வைத்திய சாலை (மூன்றாவது புதன் மாலை 2.00- 4.00)
- கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை (நான்காவது புதன் காலை 10.00- 3.00).(ஏ-9 பாதை மூடிய பின் நடைபெறுவதில்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரையும் பலவீனப்படுத்துவது!.....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது பிளவுக்குப் பின்னர் கடுந் தீவி ரப்போக்கை கடைக்கொண்ட ரோஹண விஜே வீரவின் தலைமையில் ஒரு அணியினர் கம் யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து வெளியேறி ஜே.வி.பி. என்ற பெயரிலான தரப்பாக இயங்க ஆரம்பித்தனர். 1964 ஆம் ஆண்டில் இலங்கை சமசமா ஜக் கட்சியில் மீண்டும் ஒரு பிளவு ஏற்பட் டது. சுதந்திரக்கட்சியுடன் இணைந்து அரச மைக்க சமசமாஜக் கட்சித் தலைவர்கள் தீர் மானித்தமை காரணமாக ஏற்பட்ட அதிருப்தி யின் வெளிப்பாடே அப்பிளவுக்கான காரண மாக அமைந்தது. எட்மண்ட் சமரக்கொடி மற் றும் பாலாதம்பு ஆகிய சமசமாஜக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கட்சியைவிட்டு வெளி யேறி புதிய கட்சியொன்றை ஆரம்பித்தனர். இவர்கள் புரட்சிகர அரசியல் கொள்கை வழியில் இயங்க ஆர்வம் கொண்ட தரப்பினராகக் கொள்ளப்பட்டனர்.

**கடும் போராட்ட நிலைப்பாட்டில்**
**எஸ்.ஏ.விக்கிரமசிங்க தரப்பினர்**

1972-73 ஆண்டுகள் காலப்பகுதியில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் மற்றுமொரு பிளவு ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது. எஸ்.ஏ. விக்கிரமசிங்க மற்றும் பீற்றர் கெனமன் ஆகிய சிரேஷ்ட தலைவர்களது தரப்புகள் மத்தியில் உருவான கருத்து மோதலே அப் பிளவுக்குக் காரணமாக அமைந்தது. அந்த வேளையில் கூட்டு முன்னணி அரசில் அமைச்சர் பதவி யொன்றினை வகித்து வந்த பீற்றர் கெனமன் ஐக்கிய முன்னணி அரசின் நிலைப்பாட்டைக் கடைபிடித்து வந்த அதேசமயம், எஸ்.ஏ. விக்கிரமசிங்கவின் தலைமையிலான தரப்பினர் கடும் போராட்ட முனைப்பு நிலைப்பாட்டைக் கடைக் கொண்டு வந்தனர். இருந்த போதிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் இவ்விரு தரப்புகள் மத்தியிலும் நிலவி வந்த கருத்து வேறுபாடு தீவிரமடைவதற்கு முன்னரேயே, இவ்விரு தரப்புகளும் தம்மிடையேயான கருத்து மோதல்களைச் சுமூகமான விதத்தில் தீர்த்துக் கொண்டமையால், கட்சி உடைந்து போகும் அபாயம் தவிர்க்கப்பட்டது.

நாட்டின் இடதுசாரித் தரப்புகள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகள் வரிசையில் 1970 துகளில் ஆரம்ப கால கட்டத்தில் கூட்டு அரசியல் நடைமுறை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வேறு காரணங்களின் அடிப்படையில் சமசமாஜக் கட்சியின் மத்தியில் பிளவு உருவாக நேர்ந்தது. ஆரம்பத்தில் சமசமாஜக் கட்சியின் புதிய அணுகுமுறை என ஆரம்பமான அந் நடைமுறை பின்னர் சமசமாஜக் கட்சியைப் பிரபல்யமடையவைக்கும் ஒரு நடவடிக்கையாக மாற்றமுற்றது. வாசு தேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணா ரத்ன, சிறிதுங்க ஜயசூரிய, மற்றும் சுமணசிறி லியனகே ஆகிய தலைவர்கள் அம் முயற்சியில் முன் நின்று செயற்பட்டனர். எனினும் அக்கட் சியில் தற்போது விக்கிரமபாகு கருணா ரத்ன, புதிய சமசமாஜக் கட்சி என்ற பெயரிலான கட்சிக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டு வருகிறார். அதே சமயம் சிறிதுங்க ஜயசூரிய ஐக்கிய சோஸலிஸக் கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியை ஆரம்பித்து அதற்குத் தலைமை தாங்கி வருகிறார். இன்றைய கூட்டணி அரசுடன் அடிக் கடி தொடர்புகளைப் பேணிவரும் வாசு தேவ நாணயக்கார ஜனநாயக இடதுசாரி முன் னணி என்ற பெயரிலான அரசியல் கட்சிக் குத் தலைமைதாங்கி வருகிறார்.

ஜே.வி.பி. கட்சி 1978, 1983 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் உட்கட்சிப் பூசல்கள் காரணமாக வெவ்வேறு அணி களாகிச் செயற்பட்டமையை, அக்கட்சி யில் ஏற்பட்ட பிளவுகள் எனக் கொள்ள முடியும். இன்று ஜே.வி.பியில் சோம வன்ஸ தரப்பு மற்றும் விமல் வீரவன்ஸ தரப்பு என இரு அணிகள் உருவாகியி ருப்பது. அக்கட்சியின் வரலாற்றில் மற்றொரு பிள வுக்குக் கட்டியம் கூறுமொன் றாக அமை கின்றது.

அந்த வகையில் இந்நாட்டின் இடது சாரி அரசியல் தரப்புகளின் வரலாறு ஒரு புறத்தில் போராட்ட வரலாறு எனக் கொள்ளப்பட்டாலும், மறு புறத்தில் பிள வுகள் நிறைந்த வரலாறு கொண்ட தொன்றேயாகும். அது ஒரு வகையில் இடதுசாரிக் கொள்கை பேணும் தரப் புகளது அரசியல் செயற்பாடுகளின் இலட்சணமாகவும் கொள்ளத்தக்கதே!


## உடன் தேவை

நெல்லிக்கிரஸ், சவர்க்காரம், பெரியபேக்கரி, மினரல் வாட்டர், சோடா(மென்பானம்), கோழித்தீவனம், முள் ளுக்கம்பி, கல்வனைஸ், இரும்புவாளி மற்றும் கணனி பயிற்சி மையம் போன்ற தொழில்களுக்கு ஆலோசனை வழங்கக் கூடியவர்களும் அனுபவமுள்ள பணியாளர்களும் உடன் தேவை.

தொடர்பு:- 0041 786080269 (SMS)
or.E.mail Jaffnaol@hotmail.Com (ீ/553163)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் , கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் செல்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (75132)

## திருமண சேவை

நீங்கள் அடுத்து வெள்ளவத்தைக்கு வரும்வேளை முன்னேற் பாட்டு ஒழுங்குமுறையில் வேல் அமுதனைச் சந்திக்கலாம்! முகவரி: 8-3-3 மெற்றோமாடிமனை, 55ஆம் ஒழுங்கை, கொழும்பு-06. விவரங்களைச் சுயதெரிவு முறை முன்னோடி, சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துனர் குரும்ப சிட்டியூர், மாயெழு வேல் அமுதனிடம் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் விசாரித்தறிக!

தொ.பே.: 2360488, 2360694, 4873929. (ஸ்/553106)


## மரண அறிவித்தல்கள்

### செல்வி இந்திரா துரைசாமி (கனகலிங்கம்)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட செல்வி இந்திரா துரைசாமி 06.06.2008இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இராமலிங்கம் துரைசாமி (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) - காலஞ் சென்ற கமலாவதி தம்பதியரின் ஏகபுத்திரியும் மகேந்திரன் நவீந்திரன், நரேந்திரன் (ஆஸ்தி ரேலியா), பாலேந்திரன் (ஜேர்மனி), காலஞ் சென்ற சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அனு ஷியா, கௌரிநாயகி, பத்மஜா (ஆஸ்திரேலியா), மேனகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் செந்தூரன், லலிதா, கிரு ஷணா, ஆதவன், கௌசிகா ஆகியோரின் அன்பு மாமியும் சிவபர மானந்தன், சதா, சறோஜா Dr. இரத்தினேஸ்வரன், றதி ஆகி யோரின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.06.2008) சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய் யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நாரந்தனை வடக்கு,*
*ஊர்காவற்றுறை.* (75193)

தகவல்:
இ.துரைசாமி (தந்தை).

### திருமதி நமசிவாயம் சிவபாக்கியம்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு சுன்னாகம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய நமசிவாயம் சிவபாக்கியம் 06.06.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும் நாகரட்டினம், ஜெயசிங்கம், தனபாலசிங்கம், ஜீவசிங்கம் ஆகியோரின் பாச மிகு சகோதரியும் சிவஞானசவுந்தரி (ஜேர்மனி), சத்தியவதி (U.K), சத்தியசீலன் (இந்தியா), காலஞ்சென்ற பாலச் சந்திரன் மற்றும் நந்தகுமார் (ஜேர்மனி), ரவிக்குமார் (பிரான்ஸ்), உதயகுமார் (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயும் கந்தவேல் (ஜேர்மனி), தங்கராசா(U.K), தங்கமலர் (இந்தியா), காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்), ரமேஜினி (கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியும் சர்மிலா, சுரேக்கா, வைகுந்தன், துவா, கஜன், கல்பனா, லவன், சாய், லக்ஸ்சனா, ரவீஸ், திருத்திகா, ரனிஸ், சான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.06.2008) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மதுரையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

N.உதயகுமார்,
*16/1, A.சாலிமன்றோட்,*
*கொழும்பு 6.*
T.P.*508001* (75197)

தகவல்:
உதயகுமார் (மகன்).





## உங்களுக்கு சுவிஸ் மினரலின் நன்றிகளும் பாராட்டுகளும்!

இதுவரை காலமும் எமது நிறுவனத்திற்கு ஆதரவு வழங்கிய அரச அதிகாரிகள், விற்பனை முகவர்கள், வியாபார நிறுவனங்கள், ஊடக நண்பர்கள் மற்றும் எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,

இன்று (08.06.2008) முதல் SLS தரச் சான்றிதழ் விதி முறைகளுக்கமைவாகவும் எமது உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சர்வதேச குறியீடுகளுக்கமைவாகவும் சுவிஸ் மினரல் எனும் எமது தயாரிப்புகள் "யாழருவி" என்ற பெயரில் 09.06.2008 வெளிவரவுள்ளதை உங்கள் அனை வருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**சுவிஸ் மினரல்**
*231, கோயில் வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*




(75194)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதன விவசாயத்தை வளர்த்தெடுத்து உயிரியல் தொழில்நுட்பத்தைப் புகுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும்

ஒவ்வொரு மண்ணுக்கும் அதற்குரிய சிறப் பியல்பு இருக்கும். தத்தமது தேவை கொண்டு புரட்சிகள் பல இவ்வுலகில் இம மண்ணில் நடந்தேறிக் கொண்டிருக்கின் றன. ஆனால் முழு உல கமுமே சேர்ந்து செய்த புரட்சி 1960களில் நிகழ்ந் தது. கத்தியின்றி சத்தமின்றி இரத்தமென்ற எதுவு மின்றி அனைத்து மக்களுமிணைந்து செய்த "பசுமைப் புரட்சி" அது.

நாகரீகம் தலைக்கேறி தம்மினம் பெருக்கி, காடுகளை களனிகளாக்கி, உணவு உற்பத்தி செய்து உண்டு வாழ்ந்த மக்களுக்கு, சனத்தொகை அதி கரிப் பிற்கேற்ப தேவையானளவு உணவுற்பத்தி செய்ய வேண்டிய தேவையெழுந்தது. தன னின உற்பத்தியில் காட்டிய ஆர்வத்தை உணவுற்பத்தியில் காட்ட மறந்ததினால் பட்டினியும் பஞ்சமும் தலைவிரித்தாடின. பலநூறு மக்களைப் பட்டினிச்சாவு காவு கொண்டது. 1980இல் ஜரிஸ் குடியரசில் முதலாவதாக ஜரிஸ் பஞ்சம் உருளைக் கிழங்கில் மாறி மாறி ஏற்பட்டபின் வெளி றல் நோயினால் நிகழ்ந்தது. 2½ மில்லி யன் மக்கள் பட்டினியினால் மாண்டனர். மனித குலத்திற்கு ஏற்பட்ட முதல் பேரிடி யிது. தொடர்ந்து 1943 இல் வங்கத்துப் பஞ்சம். நெற்பயிரில் ஏற்பட்ட மண்ணிறப் புள்ளி நோயினால் 3 மில்லியன் மக்கள் இறந்தனர். 1958-62 இல் சீனாவிலேற்பட்ட பஞ்சத்தில் 16.5 தொடக்கம் 23.5 மில்லி யன் மக்களும், 1972-75 இல் எதிபோப்பி யாவில் நிகழ்ந்த பஞ்சத்தினால் 2 இலட் சம் மக்களும், 1972-74 இல் பங்களாதேசி லேற்பட்ட பஞ்சத்தில் 1.5 மில்லியன் மக் களும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை யான அளவு போசாக்கும் உணவும் கிடைக்க வில்லை. உலக யுத்தங்களின் தாக்கங்களும் இப் பட்டினிச்சாவுகளுக்கு மூலகாரணங் களாக இருந்தன.

"தனியொருவனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜெகத்தினையே அழித் திடுவோம்" என தலைமைப் புலவன் பார தியை வீறுகொண்டெழ வைத்து பாட வைத்த பெருமைக்குரியது அப் போதிருந்த பட்டினிச்சாவு. அன்று பாரதி சொன்னது இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக் கின்றது. அக்காலகட்டத்தில் அவசரப்பட்டு மாற்று வழிகளேதுமின்றி பட்டினிச்சாவை தடுத்து நிறுத்தும் தீர்வாக "பசுமைப் புரட்சி" முன மொழியப்பட்டு அதன் மூலம் புது வழியும் கிடைதததது.

இதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் கலா நிதி நோர்லாக் போர்க் என்பவர். 1960 களில் அவர் இடித்துரைத்த "இங்கொரு பசுமைப் புரடசி செய்வோம்" என்னும் மகுட வாசகம்தான் உணவுற் பத்தியில் நிலை

உலகத்திலுள்ள அனைத்து உள்ளூர் இனங் களையும் தருவித்து அவ்வினங்கள் ஒவ் வொன்றினதும் இயல்புகள் கண்டறியப் பட்டு பிறப்புரிமையியலில் முதன்மை பெற்ற விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியில் தாவர இனங்கள் கலக்கப்பட்டுதிருந்திய பயிர் இனங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வா றாக உருவாக்கப்பட்ட திருந்திய இனங்

## அசேதனப் பசளைகளும் பீடை நாசினிகளும் எமது மண்ணையும், நீரையும் மாசடையச் செய்துவிட்டன.

களுக்கு உள்ளீடுகள் அதிகமாகத் தேவைப் பட்டன.

**அதீத பயன்பாட்டின் எதிர்விளைவு**

அதிக உள்ளீடுகளை உள்வாங்கி பயிர்கள னைத்தும் செழித்து வளர்ந்து அதிகவிளைச்சலைக் கொடுக்கத் தொடங் கின. உணவுற்பத்தி பெருகியது. அனைத்து உள்ளங்களும் குளிர்ந்தன. உள்ளீடுகளின் பாவனை அளவுக் கட்டுப்பா டின்றிருந்தது. விளைச்சலொன்றே குறிக்கோளாக இருந்ததனால் உள்ளீடுகளைப்பற்றி எது வித அக்கறையுமிருக்கவில்லை. அதீத

**யாழ்.தேசியக் கல்வியியல் கல்லூரியின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா நினைவுப் பேருரையை -**

**யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல்துறைத் தலைவர் கலாநிதி கு.மிகுந்தன் "இனியொரு பசுமைப் புரட்சி செய்வோம்" என்ற பொருளில் - ஆற்றினார்.**

**தற்காலத்தின் உணவுப் பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டி நமது மண்ணில் அதிக உணவு உற்பத்தி செய்யக்கூடிய வழிகளைத் தெளிவாகவும் துலக்கமாகவும் இங்கு விளக்குகிறார் அவர்.**

**விவசாயிகளுக்கு மட்டுமன்றி குடாநாட்டின் சகல மக்களும் அறிந்துகொள்ள வேண்டிய அம்சங்கள், தரவுகள் கொண்ட கலாநிதி மிகுந்தனின் உரையை இங்கு கட்டுரை வடிவில் தருகிறோம். - ஆசிரியர்.**

பயன் பாட்டின் எதிர்விளைவை உலகம் விரைவில் உணரத்தலைப்பட்டது. உள்ளீடு களெல்லாம் அசேதன இரசாயனச் சேர்வை கள். தாவரம் உறிஞ்சியது போக மீதி மண்ணினுள்ளே செறிவடைந்தன. அசே தன இரசாயனப் பொருள்களான செயற்கை உரங்கள் (தழைச்சத்து-N, மணிச்சத்து-P மற்றும் சாமபல்சத்து-K போன்ற முக்கிய மூலகங்களைக கொண்ட அசேதன இரசா யனச் சேர்வைகளின்றி பயிர்செய்கை யில்லை என்றாகிவிட்டது. அளவுக கதிக மான பயன்பாடாகியதால் முன்னனுபவ மும் இல்லாததால் விளைவு விபரிதமாகி விட்டது.

யாழ்ப்பாண மண்ணில் நெல்லும் சோள மும் சாதாரணமாகவே விளையக்கூடி

டிய நீர் நிலைகளான கிணறு, கேணி போன றவற்றுள் சிறிது சிறிதாக செறிவடைந்த தால இந்த மண்ணும் மண்ணிலுள்ள நீரும் மாசுற்றுவிட்டன. மண்ணிலுள்ள நீரில் நைதரேற்று நைதரசனின் அளவு உலக சுகா தார நிறுவனத்தின் லிற்றரொன்றிற்கு 10 மில்லிக்கிராம் என்ற அளவில் செறிந் திருப்பது. வெளிநாட்டிலிருக்கும் இத

னால் குடிதண்ணீருக்கு வேறிடம் தேடி யோட வேண்டிவந்துவிட்டது. ஒருபுறம் இது விருக்க இலங்கையிலேயே அதிகம் புற்றுநோய் நோயாளிகள் யாழ்ப்பாண குடாநாட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது என்ற செய்தி அனைவரையும் ஒருகணம் உலுக்கியெடுத்திருக்கிறது.

பீடைநாசினிகளின் அதீத பயன்பாடு மண் ணில், நீரில், மரக்கறிகளில், காற்றில், பழ வகைகளில் எனப் பல இடங்களில் நஞ்சாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இவ் வகையான நஞ்சாக்க மாதலை தடுக்கக்

கூடியதான அனைத்து வழிமுறைகளை யும் மக்கள் உணர்ந்து செயற்பட தலைப பட்டிருக்கின்ற இத்தருணத்தில் "இனி யொரு பசுமைப் புரட்சி செய்ய அழைத் திருப்பது" மிகவும் சாலப் பொருந்துகின் றது. தொடர்ந்து பெருகிவரும் மக்கள் தொகைக்கு உணவளிக்க வேண்டிய பொறுப்பு நம்கையில் இருக்கின்றது. ஆனால்....

இனியொரு பசுமைப் புரட்சியின் மூல மாக இன்னும் விளைச்சலை அதிகரிக்க வேண்டியிருக்கின்ற இவ்வேளையில் முத லாவது முறையில் விட்ட தவறினைத் திருத்தி சூழல் நஞ்சாக்கத் திற்கு துணை போகவிடாது விஞ்ஞானத்தின் சில்லு களை இறுகத்தட்டி உணவுற்பத்தியை மேலும்

இலங்கையிலிருக்கும் சனத்தொகைக்கு இருக்கின்ற வளங்களே போதுமானது. நாம் எமக கிருக்கும் வளங்களை சரியாக பயன் படுத்தவில்லை. இன்னும் எமது வளங்களை சரியாக இனங்காணவில்லை. "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட டில் ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில்" என பாட்டாக பாடுகின்ற சுகத்தை மட்டும் அனுப

விக்கும் நாங்கள் அதனையுணர்ந்து செய லில் காட்டுகின்ற நாள் வரவேண்டும்.

இயற்கையோடிணைந்த சேதன விவ சாயத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண் டும்.

1 வேளாண்செய்கையில் பயன்படும் உள் ளீடுகள

பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் வேளாண் உள்ளீடுகள் இலகுவில் அதிக செலவின்றி கிடைக்கக்கூடிய பொருள் களாக இருத்தல் வேண்டும் உள்ளூரில் பயன படுத்தப்படும் நம்மவரின் பயிரினங்களுக் கும் மிருக இனங்களுக்கும் முக்கியத் துவம் கொடுக்கப்பட்டு உள்ளூரில் தயா ரிக்கபபட்ட கூட்டெரு என்பவற்றை பயன் படுத்தி இச்சேதன விவசாயம் மேற்கொள்ள வழிசமைத்தல் வேண்டும். வன்னிஎருவுக்கு மாற்றான எரு உற்பத்தி செய்யப்படல் வேண டும்.

அ) கழிவு முகாமைத்துவமும் மண்புழு கூட்டெருவும

கமததிலிருந்து பெறப்படும் கழிவுகளை அநேகமானோர் அந்த இடத்திலேயே விட்டு விடு வதுண்டு. விழுந்த ஓலைகளும் சரிந்து முறிந்து விழுந்த மரங்களும் ஆங்காங்கே கிடந்து, அந்த இடத்தில் புதர் மண்டி யிட்டுக் கிடக்கும் நிலை பரிதாபத்திற்குரி யது. இவற்றையெல்லாம் யோசித்து பத மாக மரத்தினடியில் சுற்றவர வேர்களைப் பாதிக்காதவாறு அதரெடுத்து அதனுள் புதைககும் பழக்கம் மேலோங்க வேண்டும்.

இங்கே நிலசுகாதாரம் முக்கியமானது. விளை நிலம் சுத்தமாக இருந்தால் அதில் விளையும் பயிகளும் நன்றாகச் செழித்து வளரும். பூச்சி பீடைகள் மற்றும் நோய் களின் தாக்கம் குறைவாகவிருக்கும். கமத திலிருந்து பெறப்படும் கழிவுகளை இயற்கையான முறையில் கூட்டெருவாக மாற்றியும் பயன்படுத்தலாம். இது தவிர கமக் காரனின் நண்பனான மண்புழுவின் உதவியை நாடினால் நல்லதொரு மண்புழு உரமும் கிடைக்கும். மண்புழு உரத்தில் கனிமங்கள் கிடைக்கக் கூடியதாக இருப் பது விசேட அம்சமாகும். கழிவுகளை மீள சுழற்சிசெய்து மண்ணில் இடும்போது சேதன பொருளின் அளவு அதிகரிக்கும். இதன் மூலம் நல்ல அங்கிகளின் கூட்டு வாழ்க் கையைத் தூண்டிவிடவும் முடியும். மண் ணில் உயிர்த்தன் மையை ஊக்குவிக்க சேதன பயிரின் அளவு மிக முக்கியம் சேதன விவசாயத்தில் மண்ணிலுள்ள சேதன பொருள்களின் அளவு மிக மிக முக்கிய மானதாக கருத இடமுண்டு. சுருங்கக் கூறின் சேதன பொருளின்றி சேதன விவ சாயமுமில்லை.

ஆ) சேதன முறையில் பீடைக்கட்டுப்பாடு

அசேதன இரசாயனங்களை தாம் விரும்பிய அளவில் பயன்படுத்திவிட்டு திடீரென்று முழுமையான சேதன விவ சாயம் பற்றி வீராப்பு பேசமுடியாது. அசே தன இரசாயனங்களின் பாவனையைப் படிப்படியாக குறைத்துவிட்டு மாற்று வழி

## இனியொரு பசுமைப் புரட்சி செய்து மக்களின் உணவுத்தேவையை நிறைவு செய்வோம்

மையைச் சமாளிக்கக்கூடிதாக இருந் தது. முதலாவது பசுமைப் புரட்சி நிகழ்ந்தது. இத னால் அவருக்கு விஞ்ஞான உலகம் இதற் கான நோபல் பரிசினையும் வழங்கி கௌர வித்தது. இதன்மூலம் அவரே பசுமைப் புரட்சி யின் தந்தையுமானார்.

**"பசுமைப் புரட்சி"**

"பசுமைப புரட்சி" என்பது உணவுற்பத் தியில் செய்யப்பட்ட புரட்சி. முழுஉலகமும் திரண்டெழுந்து செய்த புரட்சி. அனைத்து மக்களாலும் உணரப்பட்டு உணவுற்பத் தியை முன்னைய அளவிலிருந்து பலமடங் காக அதிகரித்ததற்கான செயற்பாடு. குறிப் பிட்ட அளவு விளை நிலத்திலிருந்து பன் மடங்கு அதிகமாக உற்பத்தியை பெற முடிந்த கைங்கரியமிது.

உலகளாவிய ரீதியில் பசி, பட்டினி யைப் போக்க முதன்மைப் பயிர்களான நெல், கோதுமை, சோளம் என்பவற்றின் உற்பத்தியை விரைந்து அதிகரிக்க வேண டியதாயிற்று. இதற்காக உல களாவிய ரீதியிலான ஆய்வு நிலையங்கள் உரு வாக்கப்பட்டன. நெல்லில் ஆய்வு செய் வதற்கென பிலிப்பைன்ஸ் நாட்டில் "உலக நெல் ஆய்வு நிலையமும்" கோதுமை மற்றும் சோளப் பயிரிகளில் ஆய்வுக்காக "உலக கோதுமை மற் றும் சோளப் பயிர் ஆய்வு நிறுவனம்" மெக்சிக் கோவிலும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்விரு நிலையங் களிலும் இம்மூன்று பயிர்களுக்குமாக

யன. ஆனால் பண்டத்தரிப்பு விவசாயி யின் முன்முயற்சியில் கோதுமையும் விளை யக் கூடியது என செய்து காட்டியிருப்பது யாழ்குடாநாட்டில் எப்போதும் பஞ்சம் வர விடாமல் தடுக்கக்கூடிய ஆற்றல் யாழ்ப பாண மண்ணுக்கும் எங்களூர் கமக்கார னுக்கும் உண்டென பறைசாற்றியிருக் கிறதல்லவா! நல்ல செய்தி! வீரத்திற்கும் விவேகத்திற்குமான செயற்பாடு இது.

உயிரியல் தொழில்நுட்பத்தினை தேவை யானளவிற்கு உள்வாங்க வேண்டிய தேவை இனி வரும் பசுமைப் புரட்சிக்கு இருக்கிறது. புதிய இனங்கள் திருந்திய இனங்களென்ற நிலையினை சற்று உள் வாங்கி இயற்கையுடனிணைந்த விவசாயத் துடன ஒன்றிணைய வேண்டும். உலக நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நல்ல சேதியாக விற்றமின் ஏ குறைபாடு உடை யவர்களுக்காக "பொன் நெல்" உருவாக் கப்பட்டிருக்கின்றது. நெற்பயிரின் முழு பரம் பரையலகுகளும் கணடறியப்பட்டுள்ளன. இது இனிவரும் பசுமைப் புரட்சியில் பல உதவிகளைச் செய்ய இருக்கின்றது. அவ ரைத் தாவரங்களற்ற பயிர்களில் இத் தொழில் நுட்பத்தின் மூலமாக தழைச்சத்தை நிலை நாட்டும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டி யருக்கின்றது.

**இரசாயனங்களின் ...**

மண்ணில் ... இரசா யனங்களின் மீதிகள் செறிவடைந்து அண்

பெருக்க வேண்டியதாகி விட்டது. சேதன விவசாயத்தை வளைத்தெடுத்து அதனு டன் உயிரியல் தொழில்நுட்பத்தினை புகுத்தி "இன்னொரு பசுமைப் புரட்சி செய்ய காலம் கனிந்திருக்கின்றது!

**இன்னொரு பசுமைப் புரட்சியில.....**

சேதன விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். தெரிவு செய்யும் விதைகளிலிருந்து, பயன்படுத்தும் அசேதன இரசாயனங்கள் வரை, பீடை நாசினிகளா யினும் சரி, அசேதன பசளைகளாயினும் சரி இவற்றின் பயன்பாடு வரையறுக்கப்பட வேண்டும். இயன்றளவிற்கு இயற்கையுட னிணைந்த விவசாயத்தினை மேற்கொள் வதற்கு திட்டமிடப்படல் வேண்டும். மரக் கறிகளிலும் பழங்களிலுமுள்ள இரசாய னங்களை இனங்காணவும் அளவிடவும் விலை குறைந்த கருவிகள் வேண்டும் விவ சாயிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படா தவாறான அணுகுமுறைகள் உட்புகுத்தப் பட வேண்டும். அதேவேளையில் பொது மக்கள் நஞ்சற்ற பண்ணைப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வழிசெய்தல் வேண் டும். குடிப்பதற்கும் குளிப் பதற்கும் நல்ல நீர், சுவாசிக்க நல்ல காற்று, சஞ்சலமற்று உறங்க நல்ல இடம், உண்பதற்கு நஞ்சற்ற நல்ல உணவு, இயற்கையினுணவு, இயற்கை மருத்துவத்தின் மேம்பாடு ... தேவை. இவை யெல்லாம் கேட்டுவராது. நாமாகத்தான் பெறவேண்டும்.

கலாநிதி கு.மிகுந்தன்

யாகத் தாவரங்களிலிருந்து பெறப்படும் சாறுகளைப் பயன்படுத்தி பீடைகளைக் கட்டுப்படுத்த முயலவேண்டும். மூலிகைக் குணங்களுடைய அனைத்துத் தாவரங்க ளிலும் பீடைகளை எதிர்க்கக் கூடியன வற்றை அல்லது கட்டுப்படுத்தக் கூடியன வற்றைத் தெரிந்தெடுத்து பயன்படுத்த லாம். வேப்பம் விதைச்சாறு, உள்ளிக் கரை சல், ஆடா தோடை இலைச்சாறு எனப் பல பயிர்ப் பீடைகளைக் கட்டுப்படுத்தும் தன் மையுடையனவாகக் காணப்படுகின் றன. இவற்றின் பயன்பாட்டை ஊக்குவித் தால் சேதன விவசாயத்தை மேம்படுத்த உறு துணை யாக இருக்கும். (14 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த 61 வருடங்களாக நாட்டின் தொழிலாளர்களை அந்நிய, தேசிய அரசியல் தலைவர்கள் கூறுபோட்டுள்ளனர்



1947 யூன் 5 ஆம் திகதி இலங்கைத்தொழிலாளர் வரலாற்றில் மட்டுமன்றி இலங்கையின் வரலாற்றில் நிரந்தர இடம் பிடித்த தினமாகும். அன்றயதினம் சதாரண அரச எழுது வினைஞரான வே.கந்தசாமி துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகிய நாள்.

இலங்கையில் உள்ள அரச தனியார் தோட்டத்துறை சார்ந்த எல்லாத்தொழிலாளரும் ஒன்று சேர்ந்து தங்களின் அடிப்படை தேவைகளை முன்வைத்து நடத்திய பொது வேலை நிறுத்தத்தின் ஒரு பகுதியாக நடத்திய கூட்டத்திற்கான ஊர்வலத்தில் பங்கு பற்றியவேளை, ஊர்வலத்தைக் கலைத்து கூட்டத்தை சீர்குலைக்க அன்றைய அரசு விடுத்த ஆணைக்கமைய பொலிஸார் எடுத்த கடும் நடவடிக்கைதான் இக் கொலைக்கான காரணம் எனக் கருதப்பட்டது.

ஆனால் மூல காரணம் வேறு என ஆய்வாளர்கள் கூறினர். இது நாட்டின் சுதந்திரத்திற்கு முற்பட்ட சம்பவம். அன்று நாம் குடியேற்ற நாடாகத்தான் கணிக்கப்பட்டோம். முழு இலங்கையரும் எமக்கு பூரண சுதந்திரம் வேண்டும் என செயற்பட்ட காலம். அதேவேளை இரண்டாம் உலக யுத்தத்துடன்

ஆரம்பித்த சர்வதேச பொருளாதார நெருக்கடி எல்லா நாடுகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தன. எமது நாட்டு தொழிலாளர்களும் பெருமளவிலான, பல வகையான பாதிப்பை எதிர் கொண்டனர். தமது கோரிக்கைகளை ஸ்தாபனரீதியாக முன்வைத்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் தொழிலாளருக்குத் தலைமைத்துவம் வழங்கிய தலைவர்கள் முழு அரச பலத்தையும் எதிர் கொள்ளும் யுக்தியை கையாண்டனர்.

சகல துறைசார்ந்த தொழிலாளர்களையும் ஸ்தாபனரீதியாக ஒருமுகப்படுத்தினர். பொதுக்கோரிக்கையை முன்வைத்தனர். தொழிலாளரின் ஒட்டு மொத்த பலத்தை கண்ட அரசு அதை எதிர் கொள்ளமுடியாமல் திணறியது. அதை முறியடிப்பதற்கு தனது சக்திக்குட்பட்ட எல்லா முறைகளையும் கையாண்டது.

பல நாள்களாக நடந்த போராட்டம் தோழர்கந்தசாமியின்கொலையைத்தொடர்ந்து கைவிடப்படும் நிலை ஏற்பட்டது.

வேலை நிறுத்தத்தை முறியடித்த அரசு, மீண்டும் ஐக்கியப்பட்ட தொழிலாளர் அணி வலுப் பெறுவதைத் தடுக்கும் வகையில் பல கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்திய வம்சா வழியினரின் வாக்குரிமை பறிக்கப்பட்டுத். தோட்டத் தொழிலாளரின் அரசியல் பலம் குறைக்கப்பட்டது. குடியேற்றத் திட்டம், மொழிச் சட்டமும் அதன் அமுலாக்கலும் தொழிலாளர் என்ற வகையில் ஐக்கியப் பட்ட மூவினங்களையும் சார்ந்த தொழிலாளர் வேறுபட்டு பிரிந்து நிற்கும் நிலையைத் தோற்றுவித்தது. அறுபத்தொரு வருடங்களாக அந்நிய மற்றும் தேசிய அரசியல் தலைவர்கள் தங்கள் நலன்களையும்பாதுகாப்பதற்கு தொழிலாளர்களை இனரீதியாக கூறு போட்டுள்ளனர். என்பதே உண்மை. அத்தகைய நிலையில் தொழிலாளர் காலம் காலமாக எதிர் கொண்ட பிரச்சினைகள் இமியளவும் குறையவில்லை.

தொழிலாளர் வர்க்கமும் அவர்களை வழிநடத்துவோரும் தொழிலாளர்களின் நலனைப் பேணக்கூடிய தத்துவத்தை உரியவாறு தக்க முறையில் பயன்படுத்திச் செயற்பட்டு முழு இலங்கையர்களுக்கும் நன்மை ஏற்படுத்தும் வகையில் இயங்கினால் மட்டுமே தோழர் கந்தசாமியின் தியாகம் வீண் போகவில்லை என மனநிறைவடையலாம்.

## அந்தநிலை மாறினால் மட்டுமே தோழர் கந்தசாமியின் தியாகம் வீண் போகவில்லை என்று கருத இயலும்

- சி.இராமச்சந்திரா -

# ஜெயராஜ் கொலை குறித்து அரசின் மீதும் சந்தேகமா?

## விசாரணைக்குழு அமைக்கத் தயார் என்கிறார் அமைச்சர் நிமால்

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோப் புள்ளேயின் கொலை தொடர் பாக அரசின் மீது சந்தேகப்பட வேண்டாம். இப்படித் தெரிவித்துள்ளார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

இக்கொலை தொடர்பாக விசாரணைக் குழு ஒன்றை அமைக்கவும் அரசு தயாராக இருக்கின்றது என்று அவர் கூறினார்.

விசாரணைக்குழு அமைக்கப்பட்டால் இக்கொலை தொடர்பாக அரசின் மீது சந்தேகப்படும் ஜே.வி.பியும் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஜெயராஜின் கொலை தொடர்பாக தமக்குப் பெரும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜே.வி.பி. எம்.பியும் பிரசாரச் செயலாளருமான விஜித ஹேரத் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இதற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

அமைச்சர் ஜெயராஜின் கொலை தொடர்பாகத் தமக்கு சந்தேகம் ஏற்படுவதாக ஜே.வி.பி. எம்.பி விஜித ஹேரத் நேற்று நாடாளுமன்றில் கூறினார். அவர் மறைமுகமாக அரசையே இக்கொலையுடன் தொடர்புபடுத்த முற்படுகிறார்.

ஜெயராஜின் கொலையை இணையத்தளங்களின் ஊடாகப் புலிகள் நியாயப் படுத்தினர். அவர் கொல்லப்பட வேண்டியவர்தான் என்று கூறினர்.

ஆனால், விஜித ஹேரத்தின் சந்தேகம் புலிகள் மீதான களங்கத்தை நீக்கவே உதவி செய்யும்.

இது தொடர்பாக விாரணைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்று அவர் கோருகிறார். என்றார். (சி)

# சேதன விவசாயத்தை வளர்த்தெடுத்து....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை தவிர மண்ணில் வாழக்கூடிய நன்மை தருகின்ற நுண்ணங்கிகளை பயன்படுத்துதலும் சாலச்சிறந்தது. குறிப்பாக மண்ணில் வாழ்ந்து கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றில் வேரழுகல், தண்டழுகல் போன்றனவற்றை ஏற்படுத்துகின்ற பூஞ்சணங்களை "முள்ளை முள்ளால் எடுப்பதுபோல" ஒட்டுண்ணிப் பூஞ்சணமான "ரைக கோடேர்மா" (Trichoderma sp.) மூலமாகவும் பக்ரீறியாவான "சூடோமோனசு புளோரெசன்சு" (Pseudomonas fluorescence) என்னும் விவசாயியின நண்பர்களைப் பயன்படுத்தியும் கட்டுப்படுத்தலாம். இவற்றுடன் பூச்சிகளில் நோயையேற்படுத்துகின்ற பூஞ்சணங்களையும் பயன்படுத்தி பீடைக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியும். இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணிகள் மற்றும் இரைகௌவிகளைப் பயன்படுத்தியும் பீடைகளைக் கட்டுப்படுத்த முடியும். மண்புழுவிலிருந்து பெறப்படும் சுரப்பினை (Vermi wash) பீடைக்கட்டுப்பாட்டிற்கும் பயன்படுத்தலாம்.

**2) பேண்தகு விவசாயம் (Sustainable Agriculture)**

வேளாண் செய்கை தொடர்ச்சியாக செய்யப்படுகின்ற காரணத்தினால் அவ்வாறு செய்யப்படு கின்றபோது மண்ணிற்கு வேண்டிய ஊட்டச்சத்தின் அளவு தொடர்ச்சியாக கிடைக்கக்கூடியதை உறுதி செய்ய வேண்டும். இவற்றின் கிடைதன்மையை உறுதிசெய்வதன் மூலம் மண்ணின் வளத்தை தொடர்ந்தும் பேணிக்கொள்ளலாம். மேலும் செய்கையில் வெவ்வேறு பயிர்களை இணைத்துக்கொள்வதன் மூலமாகப் பயிர்ச்செய்கையில் பரந்துபட்ட தன்மையை உருவாக்கிக்கொள்ள முடியும்.

**3) சூழல் பாதுகாப்பு**

சேதன விவசாயத்தில் சூழல் பாதுகாப்பு மிகமுக்கியமானதாகும். மண்ணினதும், நிலத்தடி நீரினதும் மற்றும் காற்றினதும் பாதுகாப்பு இவற்றுள் அதிமுக்கியமானவையாகும். எல்லாவற்றையும் சேர்த்து நாம் வாழும் சூழலினுடைய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும். ஒரே பார்வையில் சேதன விவசாயத்தின் தத்துவார்த்த தன்மையை உற்றுநோக்கினால் நம் முன்னோர்களின் செய்கையின் தன்மை விளங்கும். எமக்குத் தேவையான உணவின் அளவும் அதன் தராதரமும் அதி உச்சநிலையில் பேணப்படுதல் வேண் டும். இயற்கையாகவுள்ள தொழிற்பாடுகளை மீறிய செயலெதுவிலும் இறங்காது மண்ணின் வளத்தை பேணுதல் அதன் மூலமாக சூழலுக்கு ஏற்படுத்தப்படும் மிகக் குறைவான சேதத்துடனும் மீள்சுழற்சியில் ஈடுபடுத்தமுடியாத வளங்களின் தன்மையை குறைத்துக்கொள்வதுமாக சேதன விவசாயத்தின் பங்கு இருக்கும்.

சேதன விவசாயத்தில் உள்ளாங்கக்கூடிய தொழிற் பாடுகளாகப் பின்வருவனவற்றை குறிப்பிட்டுக் கூறலாம்.

1.விட்டுத்தோட்டம் அமைத்தல்
2.வேளாண்காடுகளை விருத்திசெய்தல்
3.பல்பயன்தரு மரங்களினதும் பயிர்களினதும் கூட்டுத்தன்மை (Alley Cropping)
4.கொள்கலன்களில் பயிர்செய்கை (Potted Agriculture)
5.கட்டுக்கோப்புக்குள் பயிர்செய்கை (Protected Agriculture)
6.கூட்டுப்பசளையின் பயன்பாடு

**1) வீட்டுத்தோட்டம**

வீட்டுத்தோட்டம் என்பது சிறிய அளவில் ஒவ்வொரு குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பயிர்வகைகளை நடவுசெய்து அதன் உச்சப் பயன்பாட்டை பெற்றுக்கொள்ளுதலாகும். இங்கே மரக்கறிப்பயிர்களுடன் பழமரங்களும் திட்டமிட்ட முறையில் நடுகை செய்யப்படும். வீட்டுத்தோட்டத்தில் இலைக் கறிவகைகள், அவரையின பயிர்கள் அன்றாட தேவையான மரக்கறிப்பயிர்கள, கிழங்கு வகைகள், பழமரங்கள் குறிப்பாக பப்பாசி, மா, பலா போன்றவற்றுடன் மூலிகைச்சரக்கு மற்றும் வாசனைப்பயிர்கள் குறிப்பாக இஞ்சி, மஞ்சள் போன்றனவும் அடங்கும். இவற்றுடன் பயன்தரு மிருகங்களின் பரிபாலனத்துடன் கூட்டெரு தயாரிப்பும் உள்ளடங்கலாகும். சிறியதொரு வீட்டுத் தோட்டத்தினை அமைப்பதன் மூலம் நஞ்சற்ற, மாசுபடாத மரக்கறி வகைகளையும் சிறந்த சூழலையும் உருவாக்கமுடியும்.

**2) வேளாண்காடுகளின் விரிவாக்கம்**

வேளாண்காடுகளின் விரிவாக்கம் சேதன விவசாயத்தில் அதி முக்கியமானதாகும் பல பயன்தரும் மரங்களை நடுவது மிகவும் நல்லது. பல பயன்தரு மரங்களாக, பழமரங்கள் (மா, பலா, கொய்யா, நெல்லி, மாதுளை போன்றன) இலைக் கறியாக பயன்படும் மரங்களான கறிவேப்பிலை, அகத்தி, கறிமுருங்கை, போன்றவற்றுடன் மரத்தேவைக்குப் பயன்படும் தேக்கு, வேம்பு, இலுப்பை, மகோகனி, புளி மற்றும் சவண்டலையும் அடங்கும். வளர்ப்புமிருகங்களுக்கான விலங்குணவின் தேவையையும் பூர்த்திசெய்வதுடன் எரிப்பதற் கான விறகுத்தேவையும் பூர்த்தி செய்யும் வண்ணம் மரங்களின் தெரிவு அமையும். செயற்கையான சீமெந்து தூண்களுடனான மதில்களை தவிர்த்து [illegible] (life fence) உயிர் வேலிகளமைப்பதனை ஊக்குவிக்கவேண்டும்.

**3) பல்பயன்தரும் மரங்களின் பயன்பாடு**

பல்பயன்தரும் மரங்களினதும் பயிர்களினதும் கூட்டு (ஊடு) பயிர்ச்செய்கை மிகவும் பிரயோசனப்படக்கூடிய ஒன்றாகும். தழைச்சத்தை நிலைநாட்டக்கூடிய பல்பயன்தருமரங்களான கிளிறிசிடியா போன்றவற்றை நடவு செய்து அதனூடே பயிர்களை நடவுசெய்தால் குறிப் பிட்ட நிலப்பரப்பின் அதியுச்ச பயன்பாட்டை பெறக்கூடியதாகவிருக்கும்.

**4) கொள்கலனில் பயிர்ச்செய்கை**

கொல்கலன்களில் பயிர்ச்செய்கையென்பது பிரச்சினையுடைய மண்ணுள்ள இடத்தில், இடவசதி குறைவான இடத்தில் உரப்பைகளிலோ, வேறு கொள்கலனினுள்ளேயோ மண் மற்றும் கூட்டெருவை நிரப்பி அதில் குறிப்பாக மரக்கறிப்பயிர்களைப் பயிர்செய்தலாகும். திட்ட மிட்டபடி செய்தால் குடும்பம் ஒன்றிற்கு தேவையான மரக்கறிகள் அனைத்தையும் பெறக்கூடியதாக இப் பயிர்ச்செய்கையிருக்கும்.

**5) கட்டுக்கோப்பான பயிர்ச்செய்கை**

கட்டுக்கோப்புக்குள்ளான பயிர்ச்செய்கையில் பச்சைவீட்டுக்குள் அல்லது வலையறைக்குள பயிர்ச்செய்கை செய்தலாகும். இங்கே இது தான் பயிர் செய்யும் காலம் என்று வரையறுக்க முடியாததுடன் சூழல் காரணிகளால் எற்படக்கூடிய அனைத்து பாதிப்புகளையும் தவிர்க்கக்கூடியதாக இது அமையும். பீடை மற்றும் நோய்கள் ஏற்படும்போது அவற்றை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்துவதும் இதன் மூலமாக இலகுவாக்கப்பட்டுவிடும்.

**6) கூட்டுப்பசளையில் பசுந்தாள் பசளை**

கூட்டுப்பசளையின் பயன்பாடு இங்கே அதி முக்கியமானதாகும். பசுந்தாள் பசளைகளின் பயன்பாட்டுடன், கூட்டுப் பசளைகளைத் தயாரித்தல், மண்புழுவுரததை பயன்படுத்தல் என்பன மிக சிறந்த முறையாகும். சேதன விவசாயத்தில் செயற்கைப்பீடை நாசினிகளின் பயன்பாட்டை தவிாத்து பீடை மற்றும் தாவர நோய்களை ஏனைய வழிமுறைகள் மூலமாகக் கட்டுப்படுத்தல் வேண்டும. இந்த விடயத்தில் ஆழ்ந்த அனுபவமும் மிகவும் கைகொடுக்கும்.

எமது மண் முன்னொருகாலத்தில் பயிர்ச்செய்கை செய்யப்பட்டபோது வளமானதாகவும், சிறந்த பயனுடையதாகவும் இருநதது. அசேதன இரசாயனங்களை பயன்படுத்திய காலம் முதல் அதனது வீரியமும் நலிவடைந்து இப்போது மண் நோய்வாய்பட்டு போய் இருக்கிறது. எப்படியென்றா நினைக்கிறீர்கள்? காலம் காலமாக விரைந்து பயன்படுத்திய யூரியா போன்ற அசேதன பசளைகள் மூலமாகவும் பீடைகொல்லிகளினாலும் மண்ணில் நன்மை தரும் உயிர்கள் பல அழிவடைந்து மண்ணின் வீரியம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் நோய் அல்லது பீடைத்தாக்கம் உடனடியாக வளர்க்கப்படும் எந்தப்பயிரிலும் ஏற்படுவதை தவிர்க்க முடியாததாகிவிட்டது. இதனாலேயே எமது மண் வளமுள்ள சிறப்பான மண்ணாக இன்று இல்லை. நோய் வாய்ப்பட்டு போய் இருக்கின்றது. இந்த நிலையில் வெறுமனே சேதன விவசாயத்தை முற்றுமுழுதான தீர்வாக முன்வைக்க முடியாது. சிறிது சிறிதாக மண்ணின் வளத்தை அதிகரித்து, வீரியங்கொண்டதாக வீறுகொண்டெழவைத்தால் சேதன விவசாயம் என்ற மாற்று வழியான பாரம்பரியமான பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியும். இது எம்மவர்களால் முடியும்.

**கியூபா புரட்சியும் பிடல்காஸ்ரோவின் தன்னம்பிக்கையும**

அமெரிக்க கூட்டுச்சதிக்குள் சிக்கி பல ஆண்டு காலமாகப் பல பொருளாதார தடைகளுக்கு முகங்கொடுத்து, தடைகளை உடைத்து சேதன விவ சாயத்தினூடாக நிலைநிறுத்திய பொருமை கியூபா மக்களைச் சாரும். உளகளாவியரீதியில் கியூபா என்றாலே சேதன விவசாயம் என்ற பெயரில் அந்நாட்டு விவசாயத்தை மாற்றிய மைத்து ஓங்கி வளரச் செய்த பெருமை எதற்கும அடங்காத இரும்பு மனிதனும் 48 ஆண்டுகளாக ஆட்சி செய்தவருமான பிடல்காஸ்ரோவினையே சாரும். பூடான் என்னும் நாட்டிலும் சேதன விவ சாய முறைகள் மட்டும் தான் உண்டு. இவ்வா றான நாடுகள் சேதன விவசாயத்தினை அரவணைத்து தன்நம்பிக்கையுடன் இருப்பதிலிருந்து எமது பிரதேசத்திலும் எமதிந்த சொந்த மண்ணிலும் இம்மாதிரியான பயிர்ச்செய்கையை செய்து காட்டவேண்டும். மது மண்ணுக்கும் ஒரு சரித்திர முண்டு. எம்மாலும் முடியுமென்ற தன்னம்பிக்கையுடைய கமக்காரர்களே! செய்துகாட்டுவோம். இந்நாட்டிற்கும் அனைத்து நாடுகளுக்கும் இது ஒரு முன் உதாரணமாக அமையவேண்டும். இந்த இடத்தில் எங்களூர் கமக்காரர்களை வாழ்த்த வேண்டும். உலகம் விரும்பும் சேதன விவசாயத்தின் மூலமாக நம் சந்ததி உயிர்வாழ நல்ல சூழலை உருவாக்குவதில் அனைவரும் இணையவேண்டும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கல்வி முன்னேற்றத்துக்குச் சிவப்பு சமிக்ஞை!

வறுமை காரணமாக, பிள்ளைகளின் கல்வியை இடை நிறுத்திவிடும் பெற்றோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் மிக ஆபத்தான சூழ்நிலை குடாநாட்டில் உருவாகிவருகிறது. இங்கு நிலவும் பாதகமான போர்ச்சூழ்நிலையே அதனால் உண்டான பாதகமான வாழ்க்கைப் பின்புலமே காரணம் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

குடாநாட்டின் சனத்தொகையில் மிகப் பெரும் பகுதியினர் அன்றாடம் காய்ச்சிகளாக மாறிவிட்ட பரிதாப நிலை இன்றுபோல் என்றும் இருந்ததில்லை. குடாநாட்டின் பிரதான தொழில்களான விவசாயம், மீன்பிடி, பனைவளத் தொழில்கள், சிறுகைத்தொழில்கள் ஒடிந்து சரிந்து போய்விட்டன; தரையில் சாய்ந்து விட்டன.

அதற்கான நதிமூலம் ரிஷிமூலங்கள் எவையெனத் தெரிந்தாலும் கூட, தட்டிக்கேட்கவோ, சரி செய்யவோ எவருக்கும் வல்லமையும் இல்லை; வகையுமில்லை. அப்படி அற்பசொற்பம் இருந்தாலும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை கடலில் கரைக்கப்பட்ட சீனி மூடையாகி விடும் என்பதும் தெரிந்ததே.

இப் பிரதேசத்தின் பிரதான தொழில்கள் மூலம் தமது ஜீவனோபாயத்தை நடத்தியவர்கள் இப்போது செய்தொழில் இன்றி ஒப்பீட்டளவில் ஆகக்குறைந்த மட்டத்துக்கு- அடிமட்டத்துகு - வருமானம் இன்றித் தவிக்கிறார்கள்!

அந்த வகையைச் சார்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதை நிறுத்திக் கொண்டுவிட்டார்கள். வறுமைக் கோட்டு எல்லையில் அடிப் புள்ளிக்கு தள்ளப்பட்டுவிட்ட அவர்களால் பிள்ளைகளுக்குரிய கல்வி வசதிகளை செய்ய முடியவில்லை.

பல பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர், குறிப்பாக ஆரம்பப் பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புவது அங்கு வழங்கப்படும் மதிய போசனவசதிகளை பெறுவதற்கே என்று கல்விமான் ஒருவர் கவலையோடு தெரிவித்தார். அந்த அளவிற்கு வறுமை எங்கள் பிரதேசத்தின் மிகப்பெரும் எண்ணிக்கையான கிராம மக்களை இடிக்கிப்பிடி பிடித்துள்ளது.

வயிற்றுப் பசியைப் போக்குவதற்கு முன்னுரிமையா, பிள்ளைகளின்- சிறுவர்களின்- அறிவுப்பசிக்கு தீனி போடுவதா என்ற தெரிவில் பசி போக்குவதற்கே- உயிர் வாழ்வதற்கே வசதி குறைந்த பெற்றோர் முதலிடம் தருகின்றனர். அது ஒரு விதத்தில் தவிர்க்க விடமுடியாத ஒன்றாகிறது.

இந்த வகையில் அன்றாட உணவுக்கு அல்லாடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளின் அறிவுப் பசிக்கு இரை போடும் பொறுப்பு வசதி படைத்தவர்களையும் சமூக நலனில் நாட்டம் கொண்ட நல்மனம் படைத்தவர்களையும், நிறுவனங்களையுமே சார்ந்தது.

இதற்கு முன்உதாரணமாக, தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி மன்றத்தினர் செயற்பட்டுள்ள செய்தி வெளிவந்துள்ளது.

அவர்கள் தட்டிக்கொடுக்கத் தகுதியானவர்கள்; பாராட்டப்பட வேண்டியவர்களுமே.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணச் சமூகம் கல்வியிலும், அதனூடான முன்னேற்றத்திலும் அக்கறை காட்டி அதனால் உயர்ந்தது. ஆனால் அந்த அடிவேரை வெட்டி வீழ்த்தி தமிழர் சமூகத்தை அடிமை நிலைக்கு தள்ளிவிடும் சூழ்ச்சிகள் இலங்கை நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த சொற்ப காலத்திலேயே முளை விட்டன. எனினும் தமிழர் சமூகம் கல்வியே கருந்தனம் என்பதனை ஆழ்மனதில் பதித்து, எந்த இடர் வந்தாலும் அதனை இறுகப்பிடித்துக் கொண்டிருந்கிறது.

போர்ச்சூழல் காரணமாக கல்வி மீதான விருப்பும் பிடிப்பும் தேய்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது, எங்கள் மக்கள் கூட்டத்தின் இருப்பிலும் முன்னேற்றத்திலும் அக்கறை உள்ள எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

மனம் உண்டானால் இடம் உண்டு என்பர். அதற்கு உதாரணமாக முன்னர் குறிப்பிட்ட தென்மராட்சி மன்றம் வழிகாட்டி இருக்கிறது.

புகைத்தல் எதிர்ப்பு தினத்தை ஒட்டிக் கடந்த வருடத்தில் சேகரித்த நிதியைக் கொண்டே கல்வியை இடைநிறுத்தியசிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது. இன்று பெரும் கல்விக் கூடங்களாக மிளிரும் எமது பாடசாலைகளின் நிறுவுநர்கள் எல்லோருமே பெரும் தனவந்தர்கள் அல்லர். அவர்களது மனம் தோய்ந்த சமூக நோக்கும் முயற்சியுமே பாடசாலைக் கட்டடங்களில் அத்திபாரங்களாக அமைந்தன.

குடாநாட்டின் இன்றைய புறச்சூழல் மாணவர் சமுதாயத்தின் கல்வி கற்பதற்கான ஆர்வம் நிறைந்த மனோநிலையில் தொய்வையும் சோர்வையும் உருவாக்கிய பாதிப்பு ஒரு புறமிருக்க -

பெற்றோரின் பொருளாதார நலிவு நிலைமை கல்வி கற்பதற்கான தயக்கத்தை கொடுக்க இடந்தராமல் இருப்பனைச் சமூகமே பார்த்துக் கொள்ள வேண்டும். கல்வி முன்னேற்றத்துக்கு விழுந்துள்ள சிவப்புக் கொடி அகற்றப்பட வேண்டியது அவசியம். அதற்கு முதன்மை யிடம் தரப்பட வேண்டும்.

# கழிவுப்பொருள்களை அகற்றுவதில் பொதுமக்கள் கூடிய கவனத்துடன் செயற்பட வேண்டும்

## இதன் மூலம் தொற்றுநோய் பரவலைத் தடுக்கலாம் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 8

பொதுமக்கள் கழிவுப் பொருள்களை அகற்றுவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க முடியும். அத்துடன் வடிகால்கள், வீதிப் பராமரிப்பும் இலகுவாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நீர், சுகாதாரக்குழு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி வெள்ளம் மற்றும் கழிவு நீர் வடிகால்கள் பராமரிப்புத் தொடர்பாக யாழ். அதிபர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி திணைக்களம், மாநகரசபை, பிரதேச சபை, தேசியநீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போதே மேற்படி குழு பொதுமக்களுக்கு சுகாதார அறிவுறுத்தலை வழங்கியது.

அந்த அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடிகால்களிலும் வாய்க்கால்களிலும் குப்பை கூழங்களைக் கொட்டுவதாலும் கழிவுகளையும் வெட்டப்பட்ட வாழைமரம், செடி போன்ற மரங்களைப் போடுவதாலும் வியாபார நிலையம் முன்பாக உள்ள வடிகால்களை மண்ணால் நிரப்புவதாலும் வெள்ள நீர் ஓட முடியாமல் தடைப்பட்டுத் தேங்குகின்றது. இதனால் நுளம்புகள் அதிகரித்து தொற்றுநோய் கள் சுலபமாகப் பரவுகின்றன.

எனவே பொதுமக்கள் கழிவுப்பொருள்களை உரிய இடங்களில் சேகரித்து விவசாயத் தேவைகளுக்குப் பாவித்தோ அல்லது குப்பை கூழம் சேகரிக்கும் இடத்திற்கு அனுப்பியோ அல்லது எரிக்கக் கூடியவற்றை பாதுகாப்பான முறையில் எரித்தோ அகற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை வேறுபடுத்தி, நிலத்தில் புதைக்காமல் அதற்குரிய இடத்தில் சேர்க்குமாறும் பொதுமக்களைக் கோருகின்றோம் - என்றுள்ளது. (202-111)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்8

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு விஷேட சங்காபிஷேகமும் நடைபெறும். (202-149)

* * *

அச்சுவேலி, ஜூன் 8

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 17ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் ஜூலை முதலாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-11)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 8

கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-288)

## தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தின் மூன்றாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 8

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷும், சிறப்பு விருந்தினராக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) பொ.தயானந்தனும் கலந்து கொள்வர்.

'யாழ் மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச்சைச் சேவைகள்' என்னும் தலைப்பில் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ந. ஜெயகுமாரன் நிகழ்வில் உரை நிகழ்த்துவார். (202-111)

## சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்ட ஐவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

மந்திகை , ஜூன் 8

தொலைபேசி இணைப்பு வயர்களைப் பயன்படுத்திச் சட்ட விரோத மின் பாவனையில் ஈடுபட்ட ஐவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை நீதிமன்றம் எதிரிகளை இலங்கை மின்சார சபைக்கு நட்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டது.

வடமராட்சி துன்னாலைப் பிரதேசத்தில் சட்ட விரோத மின்பாவனை அதிகரித்து வருவதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து இலங்கை மின்சார சபை பருத்தித்துறை அலுவலக உத்தியோகத்தர்கள் பொலிசாரின் உதவியுடன் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் போது சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்ட ஐவர் வகையாகச் சிக்கிக் கொண்டனர்.

இவ்வாறு சிக்கிக் கொண்ட துன்னாலை தெற்கைச் சேர்ந்த விக்னா சறோஜினி, கனகம் பூலோகம், தங்கராசா கமலாதேவி, பஞ்சாட்சரம் செல்லத்துரை, துன்னாலை கிழக்கைச் சேர்ந்த தீபகுமார் லோஜினி ஆகியோர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி. கே. அரியநாயகம் முன்னிலையில் அண்மையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

எதிரிகள் சட்ட விரோத மின்பாவனைக் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். எதிரிகளுக்கு தலா10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து இலங்கை மின்சார சபைக்கு நட்டஈடு செலுத்தவும் உத்தரவிட்ட நீதிபதி, சட்ட விரோத மின் பாவனையாளர்களைக் கடுமையாக எச்சரித்தார்.

சட்ட விரோத மின் பாவனைக்கும் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (202-218)

## அகில இலங்கை தமிழ்த்தின போட்டியில் முதலிடம் பெற்ற மாணவன் கௌரவிப்பு

அச்சுவேலி ,ஜூன் 8

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியின் நடனப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற க. கௌதமன் கௌரவிக்கப்படவுள்ளார்.

அச்சுவேலி வீடியோ கலாமினி நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள இக் கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் செ.பத்மநாதனும் கலந்து கொள்வர். (202-11)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புக்களில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி யில் நடைபெறும்.

இத்தகவலை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

## கணிதபாட மதிப்பீடுகள்

யாழ்ப்பாணம், ஜூன்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் எதிர்வரும் புதன்கிழமையும் நடத்தப்படவுள்ளன.

திங்கட்கிழமை மதிப்பீடு 5 பகுதி I உம், புதன்கிழமை மதிப்பீடு 6- பகுதி I உம் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 27 | 09.06.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | பி.ப. 02.33 |
| நட்சத்திரம் : | மகம் |
| | பி.இ. 02.17 வரை |
| சுபநேரம் : | 11.52 - 01.22 |
| ராகுகாலம் : | 07.22 - 08.52 |

## வடக்கில் முதன் முதல் ஆரம்பித்த 'பாண் பேக்கறி'

1865 ஜூன்13

1865 ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் திகதி பிறிமியர் பேக்கரி (வெதுப்பகம்) திறந்து வைக்கப்பட்டது. இந்த பேக்கறி பேதுறுப்பிள்ளை பேக்கறி எனவும் அழைக்கப்பட்டது. காரணம் சரவணமுத்து பேதுறுப்பிள்ளை என்பவர்தான் இந்த பேக்கறியை ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பேக்கறி இதுதான் எனக் கூறப் படுகிறது. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் சேர்.வில்லியம் துவைனம் அரசாங்க அதிபராக இருந்த போது நடைபெற்ற கண்காட்சியில் பிறிமியர் பேக்கறி பிஸ்கட்டுகளும் பாணும் தரமானவையென அரசாங்க அதிபர் துவைனம் துரை சான்றிதழ் வழங்கினார்.

### இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் ... இங்கே!

இதன் பின்னர் சிற்றி பேக்கறி யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்தது. சிற்றி பேக்கறி சிங்களவர் ஒருவரால் நடத்தப்பட்டது. பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு எதிரே சிற்றி பேக்கரி அமைந்திருந்தது. வெளியூர்களிலிருந்து யாழ் நகருக்கு வருவோர் போகும் போது சிற்றி பேக்கறியில் பாணும் வாங்கிச்செல்வர். சுடச்சுடப் பாண் பிறவுண் பாக்கில் வைத்து விநியோகிக்கப்படும். 1983 யூலைக் கலவரத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பல பேக்கறிகள் சிங்களவர்களால் நடத்தப்பட்டன.

### வெள்ளையரான அரச அதிபரால் சான்றிதழ் வழங்கப் பெற்றது

சிற்றி பேக்கறி இனக் கலவரத்தின் போது உடைக்கப்பட்டது. சிற்றி பேக்கறி உடைக்கப்பட்ட போது நடந்த ஒரு சம்பவம். லாச்சியை உடைத்து ஒருவர் பணத்தை எடுத்தார். அருகில் நின்றவர் சொன்னார் ''அது சிங்களவன்ரை காசு எடாதை தூக்கி நெருப்புக்கை போடு'' பணத்தை எடுத்தவர் எடுத்த பணத்தை அப்படியே நெருப்பில் போட்டார். பிறிமியர் பேக்கறி யாழ் பிரதான வீதியில் இப்போதும் இயங்குகிறது.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார் சந்திரிகா!



கொழும்பு, ஜூன் 8

காஷ்மீர், ஸ்ரீநகரில் உள்ள தெற்காசிய நிதியம் ஒழுங்கு செய்திருந்த சார்க் கலாசார நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தியா சென்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறியதால் விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டார்.

தாம் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்று சந்திரிகா எடுத்துக் கூறியும் விமானநிலைய அதிகாரிகள் அதனைப் பொருட்படுத்தவில்லை என்று கூறப்பட்டது.

''சார்க் விஸா ஸ்டிக்கர்'' மூலம் இந்தியா சென்ற சந்திரிகா அதற்குரிய விதிமுறைகளின் பிரகாரம் கருத்தரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான இந்திய மத்தி உள்துறை அமைச்சகத்தின் முன் அனுமதியைப் பெற்றிருக்கவில்லையாம். இதனாலேயே அவர் விமான நிலைய அதிகாரிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்பட்டது.

எனினும் பின்னர் இலங்கை மற்றும் இந்திய தூதரகங்களுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் சந் திரிகா தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## பூநகரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜானக நாணயக்கார தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஒன்றுகூடுவதை அவதானித்த பின்னரே தாக்குதல்கள் நடத்தப்பட்டது என்றும் இலக்குவைக்கப்பட்ட இலக்குகள் அழிக்கப்பட்டன என்றும் விமானிகள் உறுதிசெய்துள்ளனர் என்றும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக நேற்றுவரை வவுனியாவுக்குத் தகவல் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து வியாழக்கிழமை முதல் வவுனியாவில் இருந்து தமிழர்கள் மதவாச்சி சோதனை நிலையம் ஊடாக தெற்கே செல்ல அமதிக்கப்படவில்லை.

எனினும் தெற்கில் இருந்து வடக்கே வருவதற்கு தமிழர்கள் நேற்று அனுமதிக்கப்பட்டனர். (அ-01)

## மொறட்டுவவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தனர்.

மொறட்டுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட இவர்கள் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தேவைப்படும் போது மேலதிக விசாரணைக்குச் சமுகமளிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டதாக தெரியவந்தது.

இதேவேளை -

மொறட்டுவ பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்த் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த (கைதாகாத) ஏனைய மாணவ, மாணவிகள் பொலிஸ் பாதுகாப்புடன் பம்பலப்பிட்டிக்கு அழைத்துவரப் பட்டு அங்கிருந்து வவுனியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சிவநாதன் கிஷோர் உ த ய னு க் கு த் தெரிவித்தார். (அ-1)

SUBRA (14)
இரசாயனவியல்
2009 A/L
by
ஆரம்பம்: 12.06.2008
செவ்.-வியா.
காலை 6.30-7.30
by
நந்தீஸ் 2008 A/L&DAY
5.30-7.00 P.M
2008/DAY
5.30-6.45 P.M

PHYSICS - 09,10
Group classes
by.
A. Nithiyananthan
B.Sc., Dip- In- Ed.
9/1, PALAM ROAD
KANTHARMADAM,
JAFFNA.

## பேராதனை ரயில் பாதையில் ''வாக்கி ரோக்கி'' கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8

பேராதனை ரயில் நிலையத்துக்கு சமீபமாக ரயில் பாதையில் ''வாக்கி ரோக்கி'' ஒன்றை பொலிஸார் கண்டெடுத்துள் ளனர்.

பொலிஸ் மோப்ப நாய்களை பயிற்சியில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தபோதே பொலிஸார் இதைக் கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## கரையோரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரையை அண்டிய பகுதிகளில் ஹெலிகள் நேற்று முற்பகல் 11 மணிக்கும் மாலை 6 மணிக்கும் வட்டமிட்டு நோட்டமிடும் பணியில் ஈடுபட்டிருந்தன. (அ-1)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் காயமடைந்தார்.

பாலையூற்று, கேணியடிப்பகுதியைச் சேர்ந்த இருதயராஜன்ரைட்டர் டாவின் (வயது 28) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

உறவினர் வீடு ஒன்றில் அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த ஆயுத தாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் கொல்லப்பட்டார். அவருடன் இருந்த பெண் காயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-1-151)

## குஞ்சுக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் 4படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 7பேர் காயமடைந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

இந்த மோதல் குறித்து படைத்தரப்பில் இருந்து தகவல் வெளியாக வில்லை.

இதேவேளை-

நேற்று முன்தினம் போர்முனையில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் பல இடங்களில் இடம்பெற்ற மேதல் களில் ஏழு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் 21 பேர் காயமடைந்தனர் என்றும் -

அந்த மோதல் களில் ஒன்பது படையினர் காயமடைந்தனர் என் றும்- படைத் தரப்பினர் தெரிவித்தனர். (அ-01)

# வெள்ளத்தினால் பாதிப்புற்றோருக்கு உதவ நிதிஉதவி கோருகிறது உலக உணவுத்திட்டம்

கொழும்பு, ஜூன் 8

தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு நிதி உதவி வழங்குமாறு உலக உணவுத்திட்ட நிறுவனம் சர்வதேச நாடுகளுக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி அமைப்பின் இலங்கைக்கான பிரதி வதிவிடப்பிரதிநிதி ஜேன் வைஸ் இந்தத்தகவலை வெளியிட்டார்.

கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட 4 லட்சம் மக்களில் 2 லட்சம் பேருக்கு உதவி வழங்கவே நிதிவளம் கையிருப்பில் உள்ளது.

இந்த உதவிக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது கையிருப்பில் உள்ள நிதிக்கு மேலதிகமாக 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையாக உள்ளது.

சர்வதேச உதவி கிடைக்காவிட்டால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை முழுமையாக வழங்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# கண்டி குண்டுவெடிப்புச் சம்பவம்; இறந்தவரே குண்டைக் கொண்டு வந்தாரா?

## பொலிஸார் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 8

கண்டி, பொல்கொல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவரே குண்டைக் கொண்டு வந்தாரா என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவரின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது. மற்றைய சடலம் இதுவரை இனங்காணப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தார்.

குண்டைக் கொண்டு வந்தவரின் சடலம் அது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும்-

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் அவர் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் கண்டிப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர். குறிப்பிட்ட பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கு வைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் ஆனந்தபுரம் பாடசாலைக்கட் டடம் சேதமடைந்தது என்று அதன் அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை -

விடுதலைப் புலிகளின் தளபதிகள் ஒன்று கூடும் நிலையம் மீது நேற்றுப்பிற்பகல் 1.20க்கு விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதல் வெற்றி பெற்றது என விமானிகள் உறுதிசெய்துள்ளதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரர்களின் தியாகத்தை அகில உல கமும் நினைவு கூரும் காலம் விரைவில் வரும்.

படைவீரர்களின் மனோநிலையை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் பெரும் சேவைகளைச் செய்துவருகிறது. பயங்கரவாதிகளுக்கு எதிரான இராணுவநடவடிக்கையை நிறுத்தி விடுமாறு கடுமையான சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படும் இந்த வேளையில் அரசாங்கம் படையினரை கௌரவிப்பதை வரலாறு எடுத்துக் கூறும்.

சர்வதேச ஆதிக்கம் காரணமாகவும் சமாதான ஆர்வலர்களின் எதிர்ப்புக்காரணமாகவும் முன்னர் பதவியில் இருந்த சில அரசாங்கங்கள் இராணுவ நடவடிக்கையை கைவிட வேண்டிய நிர்ப்பந்தங்கள் - சந்தர்ப்பங்கள்- ஏற்பட்டன.

எவ்வாறாயினும் இந்த அராசாங்கம் படையினருக்கு எதுவித பின்னடைவும் ஏற்பட அனுமதியாது. பொதுமக்களை, நாட்டில் அமைதியை பேணுமாறு கோரிவரும் இந்தவேளையில் அரசாங்கம், அரசியல் நோக்கங்களுக்காக இராணுவ நடவடிக்கையை நிறுத்திவிடமாட்டாது.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் பொதுமக்களின் ஆதரவு அவசியம். அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் பூரண ஆதரவைத் தரவேண்டும். அரசியல் வாதிகள் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்துவிட முடியும்.

ஆனால் படைவீரர்களால் பதில் கூற முடியாது. போராடும் படைவீரர்களால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்க முடியாது. இதனால் படையினரின் மனோநிலை மிகவும் பாதிக்கப்படும். ஆயுதங்களினால் மாத்திரம் பயங்கரவாதத்தை ஒழித்துவிட முடியாது.

எனவே படையினரின் மனோநிலையை பல்வேறு வழிகளில் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் இராணுவ நடவடிக்கைகளை தடுக்கும் யுக்தியுடன் பயங்கர வாதிகள் மிருகத்தனமான தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

### வடக்கு மக்களும் சுதந்திரத்தை அனுபவிக்க விரும்புகிறார்கள்

கிழக்கு மாகாண மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை தாங்களும் அனுபவிக்க வேண்டும் என்று வடபகுதி மக்கள் விரும்புகிறார்கள். மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது தனது தலையாய கடமையாகும் என்று அரசாங்கம் கருதுகிறது.

### யுத்த வீரர்களுக்கு மக்கள் செய்யும் மரியாதை

இந்த நிலையில் தென்னிலங்கை மக்கள் மிக அமைதியாக நடந்து கொள்ள வேண்டும். யுத்த வீரர்களுக்கு மக்கள் செய்யும் மரியாதை இதுவே!

திரைநீக்கம் செய்யப்பட்டுள்ள இந்த நினைவுச் சின்னம் நாட்டில் ஜனநாயகத்தையும் மக்கள் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு படையினர் ஆற்றிவரும் சேவையை என்றும் நினைவுறுத்தும்-என்று கூறினார் ஜனாதிபதி.

''ரணவிரு'' சேவை அதிகார சபையின் தலைவர் மேஜர்ஜெனரல்பாலித பெர்னாண்டோ பிரதமமந்திரி மற்றும் அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-02)

ஊற்று நிறுவனம்
கணனிப் பாவனை நிலையம்
மாவிசந்தி, அல்வாயில்அமைந்துள்ள எமதுகற்றல் வள நிலையத்தில் கல்விபயிலும் வசதி குறைந்தமாணவர்களுக்கு இலவச கணனிப் பாவனை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
பயனாளிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.
- க.பொ.த. உயர்தர மாணவர்கள்
- தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள்
- பல்கலைக்கழக மாணவர்கள்
ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
நிலையத்தைப் பயன்படுத்த விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்கள் தேவைப்படின் வளநிலையப் பொறுப்பாளருடன்தொடர்பு கொள்ளவும்.
பணிப்பாளர்,
ஊற்று நிறுவனம். தொலைபேசி இல: 021 2264509

மாணவர்களே...!
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட பட்ட மற்றும் பட்டமேற்படிப்பை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்
UK Student visa
September 2008 கல்வி ஆண்டு, மாணவர்களுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன
இன்றே நாடுங்கள்...
Part time JOB - Students are allowed to work up to 20 Hours per week during term- time, any number of hours during vacations.
Undergraduate Courses
Bsc (Hons) in computing
Bsc (Hons) in Business Information Technology
BA (Hons) Accounting and Financial Management
BSc (Hons) Business Management
Postgraduate Courses
Postgraduate Diploma in Distributed Computing Systems/ Msc, Postgraduate Diploma in Computing/ Msc, Postgraduate Diploma in Internet Technology and e-commerce/ Msc Postgraduate Diploma in Computer System & Networking, Masters in Busines Administration- MBA, Executive Masters in Business AdministrationEMBA
northumbria UNIVERSITY
University of Portsmouth
IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம். 021-2229901

Sky Computer (Pvt) Ltd.
Head Office:- No, 04, De vos Avenue, Colombo - 04
Branches:- No.162, Main Street Jaffna.
(புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் அருகாமை)
No. 89, Kandy Road, Chundukuli Jaffna.
(கச்சேரி அருகாமை)
T.P No:-021 4590325
Affiliated with Irish International University (U.K)
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளது
(10.06.2008 காலை 9.00 am,
11.06.2008 காலை 9.30 am)
Course Details
★Ms Office - 2 Months
★Desktop Publishing - 2 Months
★Hardware Technology - 2 Months
Kids Program சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
Internet & E-mail - 2 Weeks
E-Mail:- skycomputers-2@yahoo.com
Tody you learn Tomorrow you lead.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org